

# கொழும்பு, செட்டியார் தெரு

# ஸ்ரீ முத்துவிநாயகர் திருக்கோவில்

# மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர்-2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொழும்பு, செட்டியார் தெரு

## ஸ்ரீ முத்துவிநாயகர் திருக்கோவில்

# மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர்-2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் வணக்கம்

*திகட சக்கரச் செம்முக மைந்துளான்*
*சகட சக்கரத் தாமரை நாயகன்*
*அகட சக்கர வின்மணி யாவுறை*
*விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"சிவதனய வரிஷ்டம் சர்வ கல்யாண மூர்த்திம்

பரசு கமல ஹஸ்தம சோபிதம் மோதகேன

அருணகுசும மாலா வியாள லம்போதரந்தம்

மம ஹிருதய நிவாஸம் ஸ்ரீ கணேசம் நமாமி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு செட்டியார் தெரு

## ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய

# மஹாகும்பாபிஷேக
# சிறப்பு மலர்

**(03-02-2016)**

மஹோற்ஸவத்திருவிழாவில் வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கணபதி துணை!



# விநாயகர் காப்பு

ஓங்கார வடிவான உ ன்பாத தாமரையும்
உபயபரிபுர மறைகளும்
உதிக்கின்ற செங்கதிர்க ளொருகோடி நிகரொளியும்
உத்தூள நீற்றனொளியும்
பாங்கார் கஜாநநமும் உபயகரமும் வளர்புயப்
பவளாச லங்கணான்கும்
பாசமுட னங்குசங் கொம்பேரி லட்டுகம்
பட்சமொடு வைத்தகரமும்
நீங்காத அருண்மாரி பொழியுந்த்ரி யம்பகமும்
நிறையுமும் மதமாரியும்
நீள்சடா டவியும் வெண்பிறையு மொரு தொந்தியும்
நெஞ்சிலொரு காலும் மறவேன்
காங்கேயன் மகிழ்தமைய னேகங்கை நதிபெருகு
காசிவாழ் துண்டிராச
கணபதியெனும் பெரிய குணமேரு வேயருட்
கருணாநிதிக் கடவுளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ முத்துவிநாயகப் பெருமான்

## பாதகமலங்களுக்கு இம்மலர்

## சமர்ப்பணம்

மூர்த்தி சிறிதானாலும்....
கீர்த்தி பெரிதாக உள்ளவனே...
முதன் முதற் கடவுளே
முத்து விநாயகப் பெருமானே
உன் பாதங்களுக்கு
சமர்ப்பிக்கின்றோம் - இந்த மலரைச்
சங்கடங்கள் தீர்த்துவைப்பாய் - உன்னைச்
சார்ந்தவர்களுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி யென்றிடக் காலனும் கைதொழும்
கணபதி யென்றிடக் கருமம் ஆதலால்
கணபதி யென்றிடக் கவலை தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை!



மூலமூர்த்தியாய் அமர்ந்திருக்கும் ஸ்ரீ முத்துவிநாயகப் பெருமானின் திருத்தோற்றம்

# விநாயகர் துதி

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந் தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசு போத்தக் கவளமிடக் களுத்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்.

-பரஞ்சோதி முனிவர் (திருவிளையாடற் புராணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



1754ம் ஆண்டுக்கு முன்னர் மூலமூர்த்தியாக வழிபடப்பட்டு வந்த ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரப் பெருமானுக்கு வெள்ளிக்கவசமிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



1754ம் ஆண்டுக்கு முன்னர் மூலமூர்த்தியாக வழிபடபட்டு வந்த ஸ்ரீ மீனாட்சி அம்பாளுக்கு வெள்ளிக்கவசமிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு, செட்டியார் தெரு,

# ஸ்ரீ முத்து விநாயகர் சுவாமி திருக்கோவில்

புனராவர்த்தன நவகுண்டபக்ஷ அஷ்டபந்தன

# மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

தைத்திங்கள் 20 நாள் (03-02-2016)

புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் 10.30 மணிவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ







"சிவதனய வரிஷ்டம் சர்வ கல்யாண மூர்த்திம்
பரசு கமல ஹஸ்தம் சோபிதம் மோதகேன
அருணகுசும மாலா வியாள லம்போதரந்தம்
மம ஹிருதய நிவாஸம் ஸ்ரீ கணேசம் நமாமி"

## கொழும்பு, செட்டியார் தெரு,

# ஸ்ரீ முத்து விநாயகர் சுவாமி திருக்கோவில்

## புனராவர்த்தன நவகுண்டபக்ஷ அஷ்டபந்தன

# மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

விநாயகப்பெருமான் மெய்யடியார்களே!

பிரணவப் பொருளாம் ஐங்கரன் தன்னடி வழுத்தும் அன்பர்களின் இடர்களைந்து வற்றாச்செல்வமும் வளமான வாழ்வையும் அருளி குபேரபுரியாம் கொழும்பு மாநகரில் செட்டியார் தெருவில் வீற்றிருந்து எம்மையெல்லாம் காக்கும் ஸ்ரீ முத்து விநாயக பெருமான், ஸ்ரீ மீனாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரர்க்கும் மற்றும் ஏனைய பரிவார மூர்த்திகட்கும். நிகழும் மங்களகரமான மன்மத வருடம் தைத்திங்கள் 20ம் நாள் (03-02-2016) புதன்கிழமை அனுச நட்சத்திரமும், அமிர்தசித்த யோகமும் கூடிய காலை 9.00 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில்
மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. அன்பர்கள் அனைவரும் மஹா கும்பாபிஷேகத்திற்கு முன்பும், பின்பும் நடைபெறும் கிரிகைகளை வந்து தரிசித்து எம்பெருமானின் இஷ்டசித்திகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரியாகால நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| **28-01-2016**<br>தைத்திங்கள்<br>14ம் நாள்<br>**வியாழக்கிழமை** | காலை 6.00 மணி | விநாயகர் வழிபாடு கோபூஜை பிராம்மண அனுஞ்ஞை தேவதா அனுஞ்ஞை, தன பூஜை திரவிய சுத்தி திரவிய விபாகம் பேரீதாடனம் கணபதி ஹோமம் மகாலக்ஷ்மி ஹோமம் சுவாஷினி பூஜை பிரம்மச்சாரி பூஜை யந்திர பூஜை திருமுறை ஓதல் பிரசாதம் வழங்கல் |
| | மாலை 4.00 மணி | விநாயகர் வழிபாடு கிராமசாந்தி பிரவேசபலி நவக்கிரகஹோமம் பூர்ணாகுதி திருமுறை ஓதல் பிரசாதம் வழங்கல். |
| **29-01-2016**<br>தைத்திங்கள்<br>15ம் நாள்<br>**வெள்ளிக்கிழமை** | காலை 8.00 மணி | விநாயகர் வழிபாடு, மூர்த்தி ஹோமம், சாந்தி ஹோமம், ரக்ஷோக்ன ஹோமம், சம்ஹிதா ஹோமம், திசா ஹோமம், யந்திர பூஜை பூர்ணாகுதி திருமுறை ஓதல் பிரசாதம் வழங்கல் |
| | மாலை 4.00 மணி | விநாயகர் வழிபாடு வாஸ்துசாந்தி தூபிஸ் தாபனம் கோவாசம் தீபஸ்தாபனம் |
| **30-01-2016**<br>தைத்திங்கள்<br>16ம் நாள்<br>**சனிக்கிழமை** | காலை 8.00 மணி | விநாயகர் வழிபாடு, தீர்த்த சங்கிரகணம் சூர்யாக்னி சங்கிரகணம் யந்திர பூஜை திருமுறை ஓதல் பிரசாதம் வழங்கல். |
| | மாலை 3.30 மணி | விநாயகர் வழிபாடு ஆச்சார்ய வர்ணம் மிருத்சங்கிரகணம் அங்குரார்பணம் ஆச்சாரியரக்ஷாபந்தனம் பிரசன்னா பிஷேகம் பூஜை கடஸ்த்தாபனம் கலாகர்ஷனம் க்ஷணஹோமம் கும்பயாகசால பிரவேசம் 1ம் கால யாகபூஜை பேரசலனம் நாவாக்னி பஞ்சாக்னி விசர்ஜனம் பூர்ணாகுதி திருமுறை ஓதல் பிரசாதம் வழங்கல். |
| **31-01-2016**<br>தைத்திங்கள்<br>17ம் நாள்<br>**ஞாயிற்றுக்கிழமை** | காலை 8.00 மணி | விநாயகர் வழிபாடு, சிவாச்சாரிய பஞ்சசுத்தி யாகசாலை பிரவேசம் 2ம்கால யாகபூஜை காலை 9.00 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள மீனலக்கின சுப வேளையில் யந்திரஸ்தாபனம் விம்பஸ்தாபனம் அஷ்டபந்தனம் மாலா மந்திர ஹோமம், பூர்ணாகுதி தீபாராதனை, வேதஸ்தோத்திர திருமுறை ஓதல் பிரசாதம் வழங்கல். |
| | மாலை 4.00 மணி | விநாயகர் வழிபாடு விஷேடசந்தி யாகசாலா பிரவேசம் 3ம் கால யாக பூஜை, தைலாப்பியங்கம் ஹோமம் பூர்ணாகுதி வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம் ஆசீர்வாதம் பிரசாதம் வழங்கல். |
| **01-02-2016**<br>தைத்திங்கள்<br>18ம் நாள்<br>**திங்கட்கிழமை** | **காலை 6.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரையும் எண்ணெய்காப்பு சாத்துதல்** | |
| | காலை 8.00 மணி | விநாயகர் வழிபாடு விஷேடசந்தி பூதசுத்தி யாகசாலா பிரவேசம் 4ம்கால யாகபூஜை, பாவனாபிஷேகம் ஸ்தாலி பாகம் மூல மந்திர ஹோமம், பூர்ணாகுதி தீபாராதனை வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம் ஆசீர்வாதம் பிரசாதம் வழங்கல். |
| | மாலை 6.00 மணி | விநாயகர் வழிபாடு விஷேடசந்தி யாகசாலா பிரவேசம் 5ம் கால யாகபூஜை, திரிசதிமந்திர ஹோமம் பூர்ணாகுதி தீபாராதனை வேதஸ்தோத்திர நர்த்தன திருமுறை சமர்ப்பணம் பிரசாதம் வழங்கல். |
| **02-02-2016**<br>தைத்திங்கள்<br>19ம் நாள்<br>**செவ்வாய்க்கிழமை** | **காலை 6.00 மணிமுதல் மாலை 2.00 மணிவரையும் எண்ணெய்காப்பு சாத்துதல்** | |
| | காலை 8.00 மணி | விநாயகர் வழிபாடு விஷேடசந்தி யாகசாலா பிரவேசம் 6ம் கால யாகபூஜை, விஷேட திரவிய ஹோமம் பூர்ணாகுதி தீபாராதனை வேதஸ்தோத்திர திருமுறை பாராயண நாதகீத நர்த்தன சமர்ப்பணம் பிரசாதம் வழங்கல். |
| | மாலை 5.00 மணி | விநாயகர் வழிபாடு விஷேடசந்தி விம்பசுத்தி கும்பபூஜை ஹோமம், யாகசாலை பிரவேசம் 7ம் கால யாகபூஜை, பிம்பசுத்தி பிம்பகௌதுக பந்தனம் பூர்வசந்தானம் பச்சிமசந்தானம் பூர்ணாகுதி வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம் ஆச்சாரிய உபசாரம் பிரசாதம் வழங்கல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 03-02-2016<br>தைத்திங்கள்<br>20ம் நாள்<br>புதன்கிழமை | காலை 5.00 மணி | விநாயகர் வழிபாடு யாகசாலா பிரவேசம் 8ம் கால யாகபூஜை மஹாபூர்ணாகுதி நவகுண்ட பஞ்சகுண்ட அக்னி சம்யோஜனம் விஷேட தீபாராதனை வேதஸ்தோத்திர திருமுறை நாதகீத நர்த்தன சமர்ப்பணம் அந்தர்பலி பகிர்பலி யாத்திராதானம் காலை 8.00 மணிக்கு இராஜகோபுர பிரதான ஸ்தூபி ஏனைய பரிவார ஸ்தூபிகள் அபிஷேகம் அதனைத் தொடர்ந்து பிரதானகும்பம் வீதிபிரதட்சணம் (காலை 9.00 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில் **மஹா கும்பாபிஷேகம்**) எஜமான் அபிஷேகம் தசதர்ஷணம் மஹா அபிஷேகம் ஆச்சாரிய சம்பாவனை ஆசீர்வாதம் பிரசாதம் வழங்கல். |
| | மாலை 4.00 மணி | சாயரக்ஷை பூஜையைத் தொடர்ந்து 2ம் கால பூஜை ஏனைய ஆலயங்களின் உபசாரம் ஏற்றல் மாலை 6.00 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் அதனைத் தொடர்ந்து சுவாமி வெளி வீதி உலா வருவார். |

## 04-02-2016 வியாழக்கிழமை

கும்பாபிஷேகத்தினை தொடர்ந்து 48 தினங்கள் காலை 8.00 மணிக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். **22-03-2016 செவ்வாய்க்கிழமை** மண்டலாபிஷேக பூர்த்தியும் நடைபெறும்.

*மேற்படி கிரிகைகள் யாவும் ஆலய பிரதமகுரு*

**சிவஸ்ரீ கு. காமாக்ஷிசுந்தரேஸ்வர குருக்கள்**

*தலைமையில் நடைபெறும்.*

முகூர்த்த நிர்ணயம் நெறியாள்கை

***சிவாச்சாரிய சிரோன்மணி* சிவஸ்ரீ ச. சண்முகானந்தக்குருக்கள்**

மயிலணிகந்தசுவாமி கோயில், சுன்னாகம்.

### சர்வபோதகம்

சிவஸ்ரீ. பா. சண்முகேஸ்வரக் குருக்கள் – கொழும்பு
சிவஸ்ரீ. விஷ்வ நாராயணக் குருக்கள் – கொழும்பு
சிவஸ்ரீ. பா. சிற்சபேசக் குருக்கள் – யாழ்ப்பாணம்
சிவஸ்ரீ. பா. பாலகணேசக் குருக்கள் – நயினை நாகபூஷனி அம்மன் ஆலயம்
சிவஸ்ரீ. நா. நல்லூர்த்தாசக் குருக்கள் – கொக்குவில்

### கும்பாபிஷேக பிரதிஸ்டா பிரதமகுரு

*ஆகமகிரியாமணி*

**சிவஸ்ரீ. நடா கேதீஸ்வர குருக்கள்**

(தேவஸ்தான பிரதம குரு)

### பிரதிஸ்டா பிரதம குருமார்கள்

சிவஸ்ரீ. கதிர்காம நாத குருக்கள் (நேசன்) – தேவஸ்தானகுரு
சிவஸ்ரீ. சபா பாலபாஸ்கரக்குருக்கள் – தேவஸ்தானகுரு
சிவஸ்ரீ. முத்து விஜயகாந்தக் குருக்கள் – தேவஸ்தானகுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வசாதகம்

| | | |
|---|---|---|
| சிவஸ்ரீ. க. ஆனந்தகுமார குருக்கள் (BA.Hons) | - | கொழும்பு |
| சிவஸ்ரீ. நா. கிருஷ்ண மோகனக்குருக்கள் | - | கொழும்பு |
| சிவஸ்ரீ. ப. ரங்கநாத சர்மா | - | கண்டி |
| சிவஸ்ரீ. ப. ராகவன் சர்மா | - | கண்டி |
| சிவஸ்ரீ. சி. பிரபாகரக்குருக்கள் | - | கொழும்பு |
| சிவஸ்ரீ. வை. வைகுந்தன் குருக்கள் | - | கொழும்பு |
| சிவஸ்ரீ. ஜெ. மேதஸ்ரீவர்சன் | - | கொழும்பு |
| சிவஸ்ரீ. கு. இராஜ கோபாலசர்மா | - | வடகோவை, யாழ்ப்பாணம் |

## கும்பாபிஷேகத்தை சிறப்பிக்கும் சிவாச்சாரியார்கள்

| | | |
|---|---|---|
| சிவஸ்ரீ. கதிர்கிருஷ்னேஸ்வரக் குருக்கள் | - | மூத்த நாயனார் கோவில், ஆனைக்கோட்டை |
| சிவஸ்ரீ. ச. தியாகராஜக் குருக்கள் | - | தம்பையா சத்திரம், கொச்சிக்கடை |
| சிவஸ்ரீ. க. பாலசந்திர குருக்கள் | - | கனடா |
| சிவஸ்ரீ. ச. வைத்தியநாதக் குருக்கள் | - | புதிய கதிரேசன் கோவில், செட்டியார் தெரு |
| சிவஸ்ரீ. இ. சபாரெத்தினக் குருக்கள் | - | கொழும்பு |
| சிவஸ்ரீ. வ. உமாசுதக் குருக்கள் | - | மயிலணி கந்தசுவாமி கோவில், சுன்னாகம் |
| சிவஸ்ரீ. இலக்ஷ்மிகாந்த ஜெகதீஸ்வர குருக்கள் | - | தெஹிவளை, கொழும்பு |
| சிவஸ்ரீ. பா. பாலரகுநாதக் குருக்கள் | - | கொழும்பு |
| சிவஸ்ரீ. ச. சாந்தரூபக் குருக்கள் | - | வடகோவை, கொழும்பு |
| சிவஸ்ரீ. இ. ஜெயசங்கர குருக்கள் | - | பொன்னம்பலவாணேசர் கோவில், கொச்சிக்கடை |
| சிவஸ்ரீ. வை. சுப்பிரமணியக் குருக்கள் | - | ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணியக் கோவில், கொழும்பு |
| சிவஸ்ரீ. ந. ஸ்ரீதரக் குருக்கள் | - | கிருஷ்ணன் கோவில், கன்னாரத் தெரு, கொழும்பு |
| சிவஸ்ரீ. ந. பாலசுப்பிரமணியக் குருக்கள் | - | கொக்குவில். யாழ்ப்பாணம். |
| சிவஸ்ரீ. ந. பாலேந்திரக் குருக்கள் | - | கொழும்பு. |
| சிவஸ்ரீ. இ. பாலசுப்பிரமணியக் குருக்கள் | - | ஹேகித்த, கொழும்பு |
| சிவஸ்ரீ. க. துஷ்யந்த குருக்கள் | - | நூசை முருகன் கோவில், மாதகல் |
| சிவஸ்ரீ. சோ. அரவிந்தக் குருக்கள் | - | பரராச சேகரபிள்ளையார் கோவில், இணுவில் |
| சிவஸ்ரீ. சோ. சசிதரக் குருக்கள் | - | திருகோணமலை |
| சிவஸ்ரீ. ம. ஸ்ரீநிவாசக் குருக்கள் | - | கொழும்பு |
| சிவஸ்ரீ. தி. கனேசரஞ்சக் குருக்கள் | - | சுவிற்சலாந்து |
| சிவஸ்ரீ. இ. சூரியபிரபாகரக் குருக்கள் | - | கிம்பளாவளை பிள்ளையார் கோவில், அளவெட்டி |
| சிவஸ்ரீ. இ. சிவகுமாரக் குருக்கள் | - | கதிரேசன்கோவில், செக்கடித்தெரு |
| சிவஸ்ரீ. கிருபாகரக் குருக்கள் | - | |
| சிவஸ்ரீ. ஜெ. செந்தில் நாதக் குருக்கள் | - | முருகன் கோவில் மாதம்பை, கொழும்பு |
| சிவஸ்ரீ. மதிமன்னக் குருக்கள் | - | முன்னேஸ்வரம் தேவஸ்தானம், சிலாபம் |
| சிவஸ்ரீ. தி. சர்வேஸ்வரக் குருக்கள் | - | ஆகாயக்குளம் பிள்ளையார் கோவில் அராலி |
| சிவஸ்ரீ. பா. பத்ம ரமணக் குருக்கள் | - | கனடா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாகசம்ரக்ஷகர்கள்

| | | |
|---|---|---|
| பிரம்மஸ்ரீ. க. விஷ்னுவர்த்தன சர்மா (சங்கர்) | - | கொழும்பு தேவஸ்தானம் |
| பிரம்மஸ்ரீ. ஜனார்த்தன சர்மா | - | கொழும்பு தேவஸ்தானம் |
| பிரம்மஸ்ரீ. இரத்தின கைலாச நாத சர்மா | - | கொழும்பு |
| பிரம்மஸ்ரீ. க. கோவர்த்தன சர்மா | - | யாழ்ப்பாணம் |
| பிரம்மஸ்ரீ. கே. குமரேஸ்வர சர்மா | - | கொழும்பு |
| பிரம்மஸ்ரீ. சி. குகணேச சர்மா | - | யாழ்ப்பாணம் |
| பிரம்மஸ்ரீ. சி. குகணநாத சர்மா | - | யாழ்ப்பாணம் |
| பிரம்மஸ்ரீ. ப. ராதாகிருஷ்ண சர்மா | - | கொழும்பு |
| பிரம்மஸ்ரீ. ப. கோபிகிருஷ்ண சர்மா | - | கொழும்பு |
| பிரம்மஸ்ரீ. வை. விஷ்னுவர்தன சர்மா | - | கொழும்பு |
| பிரம்மஸ்ரீ. உ. கிருபாகர சர்மா | - | யாழ்ப்பாணம் |
| பிரம்மஸ்ரீ. க. கிருபாகர சர்மா | - | கொழும்பு |
| பிரம்மஸ்ரீ. ச. ஜீவகன் சர்மா | - | சுன்னாகம் |
| பிரம்மஸ்ரீ. க. கனகரூப சர்மா | - | வவுனியா |
| பிரம்மஸ்ரீ. ஜெ. வர்சன் சர்மா | - | கொழும்பு |
| பிரம்மஸ்ரீ. ச. ஜோதிகர சர்மா | - | கொழும்பு |
| பிரம்மஸ்ரீ. பா. பாலகிருஷ்ணேஸ்வர சர்மா | - | கொழும்பு |
| பிரம்மஸ்ரீ. ம. சிவப்பிரியன் சர்மா | - | மாதகல் |
| பிரம்மஸ்ரீ. கெ. மாதவன் சர்மா | - | மாத்தளை |

## ஓதுவார்

திரு. குமரேசன் பாலஷண்முகன்
விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

## மங்கள இசை

நாதஸ்வர வித்வான்
கலாபூஷணம்
(லேட்) R.V. செல்வராஜா அவர்களின்
புதல்வர்கள்
திரு. R.V.S. கமலதாஷன்
திரு. R.V.S. சூரியபிரசாத்

## சிற்பவேலை

திரு. மதியழகன் (சீர்காழி)

## தர்மகர்த்தாக்கள்

திரு. திலிபன் தியாகராஜா
திரு. கஜான் தியாகராஜா
திரு. அனிஷன் கஜனன் தியாகராஜா

## முகாமையாளர்

திரு. நடராஜன் சுப்ரமணியம்

## நளபாகம்

ரவிசங்கர் சர்மா - பேலியகொட
N. சிவகுமார சர்மா - திருகோணமலை

## நிர்த்தாஞ்சலி

செல்வி. அபிலாஷா தியாகராஜா
செல்வி. மதுஷா தியாகராஜா

## வர்ணவேலை

திரு. செல்வராஜா புலேந்திரன் குழுவினர்

## ஸ்தபதி / யாக அலங்காரம்

சிற்பகலாசாரி திரு. கந்தசாமி குகேந்திரன்
(ரஞ்சன் குழுவினர்)

## உதவி முகாமையாளர்

திரு. பாலசுப்ரமணியம் சுகந்தன்
திரு. கருப்பையா உதயசூரியன்

## கௌரவ விருந்தினர்

சிற்ப கலைச்செம்மல்
சிற்பி திரு.S. கணேஷன் அவர்கள்
(தமிழ் நாடு அரசு அங்கீகாரம் பெற்ற ஸ்தபதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### Colombo, Sea Street,

# Sri Muthuvinayaga Swamy Temple

## Maha Kumbhabishega (Consecration) Ceremony 2016

The Board of Trustees and Management cordially invite the general public and devotees of Lord Ganesh, for the Maha Kumbabishega Ceremony which is to be held on 03.02.2016. The Public are invited to participate in the pujas and ceremonies that take place prior to the Holy day and seek the blessings of Lord Sri Muthuvinayagar.

**Thursday - 6.00 a.m. Maha Ganapathy Homam**

**Monday - 7.00 a.m. to 11.00 p.m.**
**Ennai Kappu (1st Day) - Applying of Oil on the Holy Idols will take place.**

**Tuesday - 5.00 a.m. to 2.00 p.m.**
**Ennai Kappu (2nd Day) - Applying of Oil on the Holy Idols will take place.**

**Wednesday - 9.00 a.m. to 10.30 a.m.**
**The consecration of the Maha Rajagopuram and the Main Deities of the Temple.**

This event, which takes place once in twelve years, is one of the holiest events in Hindu rituals. So, take part in this holy ceremony and obtain the blessings of Lord Ganesh for a happy and prosperous life.

**Trustees**
**No. 221, Sea Street, Colombo -11.**
**Tel: 011-2435154**

---

### කොළඹ හෙට්ටි වීදිය

# ශ්‍රී මූත්තුවිනායගග ස්වාමි කෝවිල

## මහා කුම්බාභිෂේක උත්සවය

## 2016

**2016 පෙබරවාරි මස 03 දින පෙ.ව 9.00 ට උත්කර්ශවත් අන්දමින් පැවැත්වේ.**

කොළඹ-13, හෙට්ටි විදිය පිහිටි ශ්‍රී මූත්තුවිනායගර් කොවිලේ මහ කුම්බාභිෂේක පූජා මහොත්සවය 2016 පෙබරවාරි මස 03 වෙනි දින පෙ.ව 9.00 ට එළඹෙන සුභ මොහොතින් ආරම්භවී පෙ.ව 10.30 ට අවසන් වේ. මෙම අනගි අවස්ථාවට සහභාගි වී සියලු දෙවි දේවතාවන්ගේ ආශිර්වාදය ලබාගන්න ලෙස කාරුනිකව ආරාධනා කර සිටින්නෙමු.

මෙයට,
**සංවිධායක මණ්ඩලය**
221, හෙට්ටි විදිය, කොළඹ-11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முத்துவிநாயகரை வேண்டுகின்றோம்!

ஸ்ரீ முத்துவிநாயகப் பெருமானின் கருணையால்
மஹாகும்பாபிஷேகத் திருப்பணி வேலைகள் செய்ய
அருள் கிடைத்தமைக்கு
நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.
இத்திருப்பணியில் சகலவிதத்திலும்
உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய அன்பர்களுக்கும்
எங்களதுநன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அத்துடன் இவர்களுக்கு
ஸ்ரீ முத்துவிநாயகப் பெருமானின் அருள்
எப்போதும் கிடைக்க
வேண்டும் என வேண்டுகின்றோம்.

நன்றி!
இங்ஙனம்

தர்மகர்த்தாக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

கணபதி துணை

## விநாயகப் பெருமானின் பதினாறு திருநாமங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஓம் சுமுகாய | நமஹ | ஓம் தூமகேதவே | நமஹ |
| ஓம் ஏகதந்தாய | நமஹ | ஓம் கணாத்யக்ஷாய | நமஹ |
| ஓம் கபிலாய | நமஹ | ஓம் பாலசந்த்ராய | நமஹ |
| ஓம் கஜகர்ணகாய | நமஹ | ஓம் கஜானனாய | நமஹ |
| ஓம் லம்போதராய | நமஹ | ஓம் வக்ரதுண்டாய | நமஹ |
| ஓம் விகடாய | நமஹ | ஓம் சூர்ப்பகர்ணாய | நமஹ |
| ஓம் விக்னராஜாய | நமஹ | ஓம் ஹேரம்பாய | நமஹ |
| ஓம் கணாதிபதயே | நமஹ | ஓம் ஸ்கந்தபூர்வஜாய | நமஹ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய
முகாமையாளர்
ஆலய கட்டிட நிர்மாணம்
**திரு. நடராஜன் சுப்பிரமணியம்**
அவர்கள் வழங்கிய

## வாழ்த்துரை

நிகழும் மங்களகரமான மன்மத வருஷம் தை திங்கள் 20ம் நாள் (03-02-2016) நடைபெற்ற ஸ்ரீ முத்து விநாயகரின் மஹாகும்பாபிஷேகம் தொடர்ந்து நடந்த 48 தினங்கள் மண்டலாபிஷேகத்தையும் முன்னிட்டு இந்த சிறப்பு மலருக்கு என் வாழ்த்து செய்தியை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்

ஸ்ரீ முத்து விநாயகரின் மஹாகும்பாபிஷேகம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடை சூழ கோடிக்கணக்கான மலர்களினால் கோவில்களையும் சுவாமிகளையும் அழங்கரித்த அந்த காட்சிகள் என் மனதை விட்டு அகலாத ஒரு நிகழ்வாகும். எத்தனையோ கும்பாபிஷேகம் பார்த்திருக்கின்றேன் ஆனால் இப்படியான கும்பாபிஷேகத்தை பார்த்ததே இல்லை என்று சொல்லும் அளவிற்கு பக்தர்களின் வார்த்தைகள் என் மனதில் ஆழமாய் பதிந்திருக்கின்றது இதற்கு மூலகாரணமே என்னை ஆற்கொண்ட ஸ்ரீ முத்துவிநாயகரின் கருணையே கருணை அளவில்லாதது.

இக்கும்பாபிஷேகம் இனிதே நிறைவுபெற என்னுடன் ஒத்துழைப்பு நல்கிய நல்ல உள்ளங்கள் அனைவருக்கும் ஸ்ரீ முத்து விநாயகர் பெருமானின் திருவருள் பரிபூரணமாக கிடைக்க வேண்டுகின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முத்து விநாயகசுவாமி தேவஸ்தானம்
செட்டியார் தெரு, கொழும்பு.

**சிவஸ்ரீ சற்கிரியா கலாப மணி ஆலய பிரதமகுரு**

**கு. காமாக்ஷிசுந்தரேஸ்வரக் குருக்கள்**

"நற்குஞ்சரக் கன்று நண்ணீர் கலை ஞானம்
கற்குஞ்சரக் கன்று காண்"

என்ற வாக்குக்கு அமைய கடல் சூழ்ந்த இந்த நில உலகத்தில் யார் யாருக்கு விரும்பியதை கொடுக்க கூடியவர் விநாயகப்பெருமான். இறைவன் எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவன், எல்லாம்வல்லபன் அத்தகைய இறைவன் ஆலயங்களில் தெய்வ சான்நித்தியம் கொண்டு வேண்டுவோர்க்கு வேண்டுவதை கொடுத்து அனைவரையும் ரட்சித்து அருளுகின்றவன்.

ஆகவே ஸ்ரீ முத்து விநாயகசுவாமிக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மன்மத வருடம் தைத்திங்கள் 20ஆம் நாள் ஆங்கிலம் 03.02.2016 புதன்கிழமை புனராவர்த்தன பிரதிஷ்ட, மஹாகும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஆலய தர்மகர்த்தாக்களினதும், இலங்கை வாழ் சகல இன மக்களின் வழிபாட்டினதும், கொழும்பு வாழ் வர்த்தக பிரபுக்கள் அவர்களின் ஆதரவும், அருள்பெற வேண்டி ஆலய மஹோற்சவ குரு சிவஸ்ரீ ந.கேதீஸ்வரக் குருக்கள் பிரதம குருவாகவும், மற்றும் சாதகாச்சாரிகளின் அனுசரணையும், யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த குருக்கள் மார்களினதும் அனுசரணையும், கொழும்பில் வாழ்கின்ற குருக்கள்மார்களின், அனுசரணையுடன் மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

நம்பிக்கை நாயகனுக்கு தும்பிக்கை நாதன் துணை
ஸ்ரீ முத்து விநாயகப் பெருமானின் பாதகமலங்களை
பிரார்த்திக்கின்றோம்.
"சர்வே ஜனகா சுகினோபவந்து".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ முத்து விநாயக சுவாமி தேவஸ்தானம்
பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக
பிரதம சிவாச்சாரியார்

**ஆகம கிரியாமணி.**
**சிவஸ்ரீ. ந. கேதீஸ்வரர் குருக்கள்**

அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

இந்து சமுத்திரத்தின் முத்தாக விளங்கும் இலங்காபுரியின் தலைநகராம் கொழும்பு மாநகரின் செல்வம் கொழிக்கும் செட்டியார் தெரு என்ற நாமம் கொண்ட புண்ணிய சேஷடித்திரத்தில் பன் நெடுங்காலமாக கோவில்கொண்டு அருளாட்சி செய்துவரும் ஸ்ரீ முத்து விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் மன்மத வருடம் தைத்திங்கள் 20ஆம் நாள் (03-02-2016) புனராவர்த்தன நவகுண்டபக்ஷ அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நடைபெற்ற பொன்னாளாகும். இம் முறையும் ஆலய உட்பிரகாரம் புதிய சிற்பக்கலையுடன் வில்லு மண்டபம் அமைக்கப் பெற்று விமானங்கள் மற்றும் இராஜகோபுரம் தங்க வர்ண வேலையுடன் அதி நவீன மின் விளக்குகளால் அலங்கரிக்கப் பெற்று திகழ்வதை காணக் கண் கோடி வேண்டும்.

இந்த ஆலய மஹாகும்பாபிஷேகத்திற்கும், நித்திய நைமித்திய கிரிகைகள் சிறப்பாக நடைபெறுவதற்கு, தலைமுறை தலைமுறையாக தெய்வீகப்பணியில் ஆர்வமுடன் ஈடுபட்டு வரும் தர்மகர்த்தாக்களுக்கும், கும்பாபிஷேகம் இனிதே நிறைவு பெற, சிறந்த முறையில் நெறிப்படுத்தி எம்மோடு தோளோடு தோள் கொடுத்த சிவாச்சார்ய பெருந்தகைகளிட்கும், விநாயகப் பெருமானின் பக்த கோடிகளிற்கும், அவ்வழியில் உதவி செய்த அன்பர்களுக்கும் பலன் கிடைக்கவும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருளும் ஆசியும் கிடைக்க பிரார்த்தித்து அமைகிறேன்.

"சுபமஸ்து
லோகா சமஸ்தா சுகினோபவந்து."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ முத்து விநாயகர் துணை



"வேதாகம வித்யாபூஷணம்"

**பிரம்மஸ்ரீ. விஸ்வநாரயண குருக்கள்**

அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

ஸ்ரீலங்கா தேசத்தின் தலைநகர் கொழும்பு மாநகரின் இதயப்பகுதியில், செட்டியார் வீதியில் கோவில் கொண்டருளும் ஸ்ரீ முத்துவிநாயகர், வரலாற்றுப் பழைமையும், திருவருட்பொலிவும் மிக்கவர். நம்பிக்கையுடன் கைதொழுவார் தம் இன்னல் துடைத்து நல்லருள் புரிபவர். இவ்வாலய மகாகும்பாபிஷேகம் 03-02-2016 இல் சிறப்பாக நிறைவெய்தியது.

ஆலயவேலைகள் பல புதிய திருப்பணிகளுடன் நடைபெற்று கோவில் இந்திரலோகம் போல காட்சி தருகின்றது. பாரம்பரிய தர்மகர்த்தாக்கள், பக்தியுடன் கூடிய சிவாச்சாரியார்கள், குறை வில்லாத திரவியம், நிறைவான பக்தர்கள் என சிறப்புடன் சாஸ்திர பூர்வமாக நடைபெற்ற மஹாகும்பாபிஷேகம் விநாயகர் திருவருளை அடியவர்களுக்கு நிறைவாக வழங்கும் என்பது திண்ணம்.

அடியேனுக்கு ஸ்ரீ முத்து விநாயகர் கோவில் நான்காவது பெருஞ்சாந்தி விழாவிலும் பணியாற்ற வழிசமைத்த ஸ்ரீ முத்து விநாயகர், பிரதமகுருக்கள், மற்றும் ஆலய முகாமையாளர்கள் ஆகியோருக்கும் என்றும் எனது நல்லாசிகள்.

விழா மலர் வாடாத நறுமணம் வீசும் மலராக அமைய ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிறேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"சர்வகிரியா வியாபக சிரோன்மணி"

**சிவஸ்ரீ ச. சண்முகானந்தக் குருக்கள்**

மயிலணி, சுன்னாகம்.

சிப்பிக்குள் முத்தாக திகழும்
முத்து விநாயகப் பெருமான் திருவருளுடன்
ஆசியுரை.

"வக்ர துண்ட மகாகாய சூர்ய கோடி சமப்ரவ நிர் விக்னம் குருமே தேவ சர்வகார்யே ஷீ சர்வதா"

இந்து சமுத்திரத்தின் முத்தாக திகழும் இலங்கை மணித் திருநாட்டில் கொழும்பு மாநகரின் கண்ணே செட்டித்தெரு என்னும் புனித நாமம் கொண்டு அடியார்களின் வல்வினையைப் போக்கி அருளாட்சி செய்யும் ஸ்ரீ முத்த விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும், நிகழும் மங்களகரமான மன்மத வருடம் தை மாதம் 20 ஆம் நாள் (03-02-2016) புதன்கிழமை அனுஷ நட்சத்திரத்திலும் மீன லக்கினத்திலும் கூடிய சுப வேளையில் மகா கும்பாபிஷேக பெரும் சாந்தி விழா நடைபெற்றதையிட்டு அனைத்து அடியார்களுக்கும் திருவருளும் குருவருளும் ஒருங்கு சேர அகமகிழ்வோடு இருக்கின்ற வேளையில் ஸ்ரீ முத்து விநாயகரைப் பற்றி சிந்திப்போமாக.

அனைத்து காரியங்களிலும் அருள் சித்திக்கும் முத்து விநாயகப் பெருமானுக்கு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு, 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகத்தினால் எங்கும், எதிலும் நிறைந்திருக்கும் இறைவன் அருவமாக, அக்கினி ஊடாக வெளிப்பட்டு நீரினாலும் மந்திரங்களினாலும் நிரப்பப்பட்ட கும்பத்தில் அரு உருவதிருமேனி கொண்டு அந்த நீரினால் உருவத்திருமேனிக்கு அபிஷேகம் செய்வதினால் திருவருள் சக்தி மேலோங்குகின்றது. இத்தகைய புண்ணிய வழிபாடுகள் ஆலயங்களில் நடைபெறுவதன் மூலமாக மனிதன் மனித நேயத்தோடு வாழ வழிவகுக்கின்றன.

"வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

நவகுண்டத்துடன் கூடிய மகா கும்பாபிஷேகத்தின் பயனாக அனைத்து அடியார்களும் ஸ்ரீ முத்து விநாயகப் பெருமானின் திருவருள்களோடு வாழ பிரார்த்தித்து நல்லாசி கூறுகின்றேன்.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக
சர்வசாதகாச்சார்யார்
அவர்களின்
ஆசியுரை

## சிவஸ்ரீ. க. ஆனந்தகுமார சிவாச்சார்யார்

பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் ஸ்ரீ முத்து விநாயகர் எனும் நாமத்தோடு நவரத்னவாணிபம் மிகுந்து விளங்கும் செட்டியார் தெரு பகுதியில் பன்னெடுங்காலமாக அருளாட்சி புரிந்து வருகிறார், முத்து விநாயகப் பெருமான் ஆலயம் புதுப்பொலிவு கண்டு மிளிர்ந்து மீண்டும் ஒரு சிறப்பான கிரியை நெறி வழுவாத மஹா கும்பாபிஷேகம் கண்டுள்ளது.

ஆலயங்களில் எழுந்தருளியிருக்கின்ற விக்கிரகங்களுக்கு இறைசக்தியை வருவிக்கும் நிகழ்வே கும்பாபிஷேகம் எனப்படும். கும்பாபிஷேகக் கிரியைகளில் பஞ்சபூததத்துவம் அடங்கியுள்ளதை தைத்தரிய உப நிடதம் பின்வருமாறு விளக்குகிறது.

- ப்ராம்மண ஆகாசசம்பூதம்
- ஆகாசாத் வாயு:
- வாயோரக்னி :
- அக்னேராப :
- அத்யப்ப்ருதிவி :

ப்ருதிவ்யாதி பஞ்சபூதஸ்வ ரூபமானவர் விநாயகர், விநாயகரின் கருணையோ அளப்பரியது. எல்லாக் காரியங்களையும் முதலில் வழிபடும் பெருமைக்குரியவர், விக்கினங்களை நீக்குவதால் "விக்னஹர்தா" எனவும், விக்கினங்களை தருவதால் "விக்னகர்த்தா" எனவும் வேதங்களால் புகழப்படுபவர். அத்தகைய பெருமைமிகு முத்து விநாயகப்பெருமான் ஆலய திருப்பணி புரிந்த ஆலய நிருவாகத்தி னருக்கும், கும்பாபிஷேகத்தை கண்டு தரிசித்த அடியவர்கள் அனைவருக்கும் முத்து விநாயகப்பெருமான் திருவருள் கிடைக்க பிரார்த்தித்து ஆசி கூறுகிறேன்.

சிவஸ்ரீ. க.ஆனந்தகுமாரசாமி சிவாச்சார்யார் B.A(Hons)
சர்வசாதகர்
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிரியா ரத்தினம், சோதிட பூசணம்

**சிவஸ்ரீ நா. நல்லூர்தாசக்குருக்கள்**

வழங்கிய

## ஆசிரியுரை.

சைவமும் தமிழும் ஓங்கி வளரும் இலங்கைத் திருநாட்டின் தலைநகர் கொழும்பில் செட்டியார் தெரு என்னும் புண்ணிய ஷேத்திரத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ முத்து விநாயகரை வணங்கித் தொடங்கும் எக்காரியமும் கைக்கூடும் என்ற வாக்கிற்கு அமைய நிகழும் மன்மத வருடம் தைத்திங்கள் 20ம் நாள் (03-02-2016) மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று, ஆன்மிக வழியில் மக்களை நெறிப்படுத்தி சைவத்தை வளர்த்துவரும் தர்மகர்த்தாக்களுக்கும் கும்பாபிஷேகம் சிறப்புற வழிசமைத்த சைவ பெருந்தகைகளுக்கும், அடியார்களுக்கும் எல்லாம் வல்ல முத்து விநாயகரின் அருள் கிடைக்க விநாயகரின் பாதம் பணிந்து ஆசிகள் கூறி வாழ்த்துகிறேன்.

சுபமஸ்து

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய சிவாச்சாரியர்

**சிவஸ்ரீ வா. கதிர்காமநாதக்குருக்கள்**

(நேசன் குருக்கள்)

அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

இலங்கையின் தலைநகர் கொழும்பில் சுவர்ணபுரியாம் செட்டியார் தெருவில் வீற்றிருக்கும் ஸ்ரீ முத்து விநாயகர் சுவாமிக்கு தைத்திங்கள் 20ஆம் நாள் (03-02-2016) அன்று புனராவர்த்தன நவகுண்டபக்ஷ அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேக சிறப்பம்சமாக சோமசுந்தரக் கடவுளுக்கும், மீனாட்சி அம்மனுக்கும் பஞ்சகுண்ட மற்றும், பரிவாரமூர்த்திகளுக்கும் ஏககுண்ட யாக பூஜைகள், சிவாச்சாரிய பெருமக்களினால் சிறப்பாக நடாத்தப் பெற்றுது. வில்லுமண்டபம், தங்ககலசம், மின்சாரவிளக்கு அலங்காரங் களுடன் தற்போது அருள்பாலித்துக் கொண்டிருக்கும் முத்து விநாயகர் சுவாமிக்கு பல வருடங்களாக சிவாச்சாரியாராக சேவையாற்றி நான்கு கும்பாபிஷேகங்களில் கலந்து சிறப்பிக்கும் பேறுபெற்ற நான் கோவில் தர்மகர்த்தா குடும்பத்தினருக்கும், திருப்பணிக்கு உதவிய சைவப் பெருமக்களுக்கும் மற்றும் அனைத்து அடியார்களுக்கும் பெருமானுடைய அருள் கிடைக்கப்பெற்று பல ஆண்டு காலம் சிறப்பாக வாழ நல்லாசி கூறுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவபூஜா துரந்தரர்

**சிவஸ்ரீ. முத்து .விஜயகாந்தக்குருக்கள்**

தேவஸ்தான குரு அவர்களின்

## ஆசியுரை

“வானுலகும் மண்ணுலகும் வாழ! மறை வாழ!
பான்மைதரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க!
ஞானமத கர மூன்று நூல்வாய்
ஆனை முகனைப் பரவி அஞ்சலி செய்விற்போம்.”

கொழும்பு செட்டியார் வீதியில் வீற்றிருந்து அருளாட்சி புரிந்து அடியார்கள் வேண்டுவதை ஈர்ந்து திருவருள் சொரியும் ஸ்ரீ முத்து விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகட்கும் 03-02-2016 அன்று மஹா கும்பாபிஷேகம் திருவருள் துணையுடன் சிறப்பாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து நடைபெற்றுவரும் மண்டலாபிஷேக பூர்த்தியன்று மஹா கும்பாபிஷேக மலர் எனும் நூல் வெளியிட இருப்பது பாராட்டுக்குரிய விடயமாகும். இதனை வெளியிடும் ஆலய தர்மகர்த்தா குடும்பத்தாருக்கும் ஆலயத்தைச் சார்ந்தோருக்கும் மஹா கும்பாபிஷேகப் பெரு விழாவை கண்கழிப்பக் கண்ட அடியார்களுக்கும் ஸ்ரீ முத்து விநாயகப் பெருமானின் திருவருளும் குருவருளும் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

“மேன்மை கொள் சைவநீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



ஸ்ரீ முத்து விநாயகர் கோவில்
செட்டியார் தெரு
கொழும்பு.

சிவாகம பாவலன்
## பிரம்ம ஸ்ரீ ச. பாலபாஸ்கரக்குருக்கள்
அவர்கள் வழங்கிய

### ஆசியுரை

இலங்கை மணித்திருநாட்டின்தங்க ஆபரண வர்த்தக மையமாம் கொழும்பு மாநகரின் செட்டியார் தெருவில் வீற்றிருந்து உலகமெல்லாம் உணர்ந்து உய்வு பெற வேண்டும் என்ற பெருங்கருணையினால் எல்லையற்ற பரம்பொருள் எடுத்த வடிவங்கள் பல வடிவங்களிலிருந்து சிறந்து விளங்குவது விநாயக வடிவமாகும்.

எனும் சிறப்புக் கொண்ட பெயர் உண்டாயிற்று வளைந்த துதிக்கையும் பெரும் உடலும் படைத்துக் கோடி சூரியனுக்கு ஒப்பான பிரகாசத்துடன் விளங்கும் தேவனாக எல்லாக் காரியங்களிலும் எப்பொழுதும் விக்கினம் இல்லாது அருள்புரியும் தன்மை கொண்டவர்.

உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளாமணி விளக்கே.

(திருமூலர்)

பாடலுக்கு அமைய ஸ்ரீ முத்துவிநாயக சுவாமி எனும் பெயர் கொண்டு பொன் ஒளி மிளிரும் கற்பக் கிரஹத்தில் இன்னருள் புரியும் பெருமானிற்கு இடம் பெற்ற குடமுழுக்குப் பெருஞ்சாந்தி எனும் பெருவிழாவானது ஆன்மாக்கள் மனதாலும் வாக்காலும் உடலாலும் அறிந்தும் அறியாமலும் செய்த செயல்களையும் பிராயச்சித்தம் மூலம் தீர்க்க முடியாத சில செயல்களையும் போக்குவதனால் இந்நிகழ்வு மகாகும்பாபிஷேகம் எனப்படுகிறது.

புல்லினால் வருடம் கோடி புதுமண்ணால் பத்துக்கோடி
செல்லுமா ஞாலந்தனில் தூய செங்கலினால் நூறுகோடி
அல்லியன் கோதைபாகன் ஆலய மடாலயங்கள்
கல்லினால் கட்டி வைப்போர் கயிலை விட்டகலாரென்றே.

(திருவாசகம்)

மேற்கூறிய பெருஞ்சாந்தியைச் செய்பவர் செய்விப்பவர் காண்பவர் அனைவருமே ஸ்ரீ முத்துவிநாயகப் பெருமானின் பேரருள் பெற்று பெரும் வாழ்வு வாழ எம்பெருமானை வேண்டி ஆசிகள் பல...

அன்பே சிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ முத்து விநாயகர் கோவில்
செட்டியார் தெரு
கொழும்பு.

## நா. பாலேந்திரக்குருக்கள்

அவர்கள் வழங்கிய

### ஆசியுரை

விநாயக அடியார்களே

வணக்கம்

எல்லாம் வல்ல ஸ்ரீ முத்து விநாயகருக்கு நிகழும் மங்களகரமான மன்மத வருடம் தைத்திங்கள் 20ஆம் நாள் (03-02-2016) புதன்கிழமை மஹாகும்பாபிஷேகம் இடம் பெற்று இப்போது மண்டல அபிஷேகம் சிறப்பாக அன்பர்களின் ஆதரவுடன் இனிதே நடைபெற்று வருகின்றது. மேலும் மண்டல அபிஷேக பூர்த்தியைத் தொடர்ந்து மிகவும் விமரிசையாக மகோற்சவம் நடைபெற இருகின்றது. கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தேர், தீர்த்தத்துடன் நிறைவுபெறும். தேர்த்திருவிழாவின் போது ஸ்ரீ முத்து விநாயகர் செட்டியார் தெரு வீதி வழியாக வலம் வந்து அடியார்களுக்கு காட்சி தரும் அழகே தனியழகு.

ஆலயத்தை புதிதாக வர்ணம் தீட்டி அமைத்து தந்த ஆலய தர்மகர்த்தா, முகாமையாளர் அவர்கட்கும், எல்லாம் வல்ல ஸ்ரீ முத்து விநாயகர் திருவருளும் குருவருளும் கிடைக்க எமது நல்லாசிகளை வழங்கி ஆசிர்வதிக்கின்றேன்.

"வேழ முகத்து விநாயகனைத்தொழ வாழ்வு மிகுந்து வரும்"

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"விஷ்ணு பூஜா துரந்தரர்"

## சிவஸ்ரீ ஸ்ரீதரக்குருக்கள்

அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

"வேழ முகத்து ஸ்ரீ முத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

மனிதப்பிறவி எடுத்து ஆன்மா பிறவியின் பலனை அடைவதற்கு ஆலய வழிபாடு இன்றியமையாததாகும். "வானவரும் மண்மேல் வந்து அர்ச்சிப்பர்" இவ்வாறு பூலோகப் பெருமை புராண இதிகாசங்களால் அறியப்படுகிறது.

"அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது"

அரிய இப்பிறவியாகிய மானிடப் பிறவியைப் பெற்ற அனைவரும் இம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு இறைவனுடைய அருளைப் பெற வேண்டும்.

சகல வளங்களிலும் சிறப்புற்றோங்கும் புண்ணிய பூமியாகிய இலங்கைத் தீவின் தலை நகராய் விளங்கும் கொழும்புமாநகரில், ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு திருக்கோவில் கொண்டெழுந்தருளியுள்ள கொழும்பு செட்டியார் தெரு ஸ்ரீ முத்து விநாயகர் சுவாமி திருக்கோவில் புனராவர்த்தன, அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ, பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் மங்களகரமான மன்மத வருடம் தைத்திங்கள் 20ஆம் நாள் (03-02-2016) புதன்கிழமை நடைபெற்றது.

குடமுழுக்கு விழா, பெருஞ்சாந்தி விழா என போற்றப்படுகின்ற கும்பாபிஷேகம் செய்யப்படுவதினால் ஸ்ரீ முத்து விநாயகப் பெருமானின் அருள் வெள்ளம் எங்கும் பரந்து செம்மையான வாழ்வும் நல்ல சுபீட்சமும் பெருகி மனநிறைவும், வாழ்வுயர்வும் ஏற்பட வழிசெய்கின்றது. கும்பாபிஷேகத்தை தரிசிப்பவர்கள் பன்னிரெண்டு ஆண்டுகள் தலயாத்திரை, ஆலய தரிசனம் செய்த புண்ணியத்தை பெறுவதாக ஆகம சாஸ்திரம் தெரிவிக்கிறது. இக்கும்பாபி ஷேகத்தை நடாத்தி வைத்த சிவாச்சாரிய பெருமக்கள் போற்றுதற்குரியவர்கள். தமிழ் கலாசாரத்தை, பண் பாட்டை, பக்தி நெறியைப்பரப்பும் ஆலய தர்மகர்த்தாக்களுக்கும், அடியார் களுக்கும், கும்பாபிஷேக சிறப்பு மலரை வெளியிடும் குழுவினருக்கும் ஸ்ரீ முத்து விநாயகப் பெருமான் சர்வ செல்வயோகம், மிக்க வாழ்வை வழங்க ஆசி வழங்குகின்றேன்.

யாருடைய இன்பம் தயையுடன் கூடி இருக்கிறதோ! எவருடைய வாக்கு சத்தியத்தினால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றதோ! எவருடைய உடல் பிறர் நலனுக்காக சேவை செய்து உழைக்கின்றதோ! அந்த வாழ்க்கையே பரிபூரணமான ஜீவிதம்! "வாழ்க இந்து தர்மம்'

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்
"சுப மங்களம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரம்மஸ்ரீ ச. ஜெனார்த்தனேஸ்வரசர்மா

அவர்கள் வழங்கிய

### ஆசியுரை

திருச்சிற்றம்பலம்

**பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**
**நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலஞ்செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்கு**
**சங்கத் தமிழ் மூன்றும் தா.**

முத்து விநாயகப் பெருமானிற்கு முக்காலமும் பணிபுரிந்து கும்பாபிஷேகமும் காணும் பெரும் பாக்கியத்தை எனக்களித்த விநாயகர் பெருமானின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கும் என்பதில் ஐயமின்றி அவன் தாழ் பணிகின்றேன்.

சுபமஸ்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பிரம்மஸ்ரீ க. விஷ்ணு வர்த்தனசர்மா**

அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

இலங்கை மணித்திருநாட்டில் பொன் கொழிக்கம் செட்டியார் தெருவில் வீற்றிருக்கும் முத்து விநாயகப் பெருமானின் திருக்யோவிலில் பெருந்திருப்பணிகள் இடம் பெற்று புதப் பொழிவுடன் கும்பாபிஷேகம் கண்ட எம் பெருமான் இவ்வுலகில் இயற்கை வளத்துக்கும் முதல் காரணமாவார் அகத்தியரின் கமண்டலத்தை கவிழ்த்து காவேரியை உருவாக்கி பசுமையை உருவாக்கி உயிர்களின் பஞ்சம் தீர்த்ததைப் போல் வர்த்தக பெருமக்களின் இடர்களை கலைந்து இன்னருள் புரிவார் என்பது தின்னம்.

இவ்வுலகில் வாழும் அனைவரும் எம் முத்து விநாயகரின் பேரருள் பெற்று பேரானந்த பெரு வாழ்வு வாழ்வீராக!.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய
இணைமுகாமையாளர்

**திரு. B. சுகந்தன்**

அவர்கள் வழங்கிய
**வாழ்த்துரை**

ஓம் என்ற பிரணவ சொரூபமே விநாயகன். தனக்கு மேலாள் இல்லாதவர் தான் விநாயகர். தலைசுழி, தலையெழுத்து, பிரம்லீபி என்று கூறபடுகின்றதை தன் கையிலுள்ள அங்குசத்தால் அழித்து பாசத்தால் கட்டி எமக்கு ஞானம் அளித்து பிறவி நல்வழிப்படுத்துகின்றவரே விநாயகர்.

மூன்றரை நூற்றுாண்டுகளாக இத் திவ்விய தேசத்தில் வீற்றிருந்து அல்லல் பல களைந்து சகல ஆன்மாக்களுக்கும் அருள்வழி காட்டி ஆசிகள் வழங்கும் ஸ்ரீ முத்துவிநாயக சுவாமியை வணங்கி, உலகத்தில் உள்ள எல்லா ஜீவன்களும் மேன்மை அடையவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

என் கடன் பணி செய்து கிடப்பதே. சக்தியின்றிச் சிவம் இல்லை. சிவன் இன்றி சக்தி இல்லை. ஆனால் சிவனும் சக்தியும் சேர்ந்து பெற்றெடுத்த மகனே கணபதி. எனவே சிவசக்தி வேற்றாக்க முடியாத சொரூபமே விநாயகர் உருவம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய
இணைமுகாமையாளர்

## திரு. K. உதயசூரியன்

அவர்கள் வழங்கிய
வாழ்த்துரை

நாம் எந்த ஒரு காரியத்தை தொடங்கும் போதும் விநாயகரை வழிபடுவதால் அது இனிதே நிறைவேற அதற்குரிய காரிய சித்தியை கொடுப்பவர் விநாயகரே.

இவ்வண்ணம் பலவித சிறப்பு மிக்க விநாயகர் பெருமான் கொழும்பு செட்டியார் தெருவில் சுவர்ணம் மிளிரும் நகரத்தில் ஸ்ரீ முத்து விநாயகர் எனம் நாமம் பூண்டு அடியவர்களுக்கு அருள் தருகிறார் முத்துப்போன்ற வென் தந்தத்தை உடையதனாலும் அடியவர்கள் வழிபட்டதனாலோ என்னவோ ஸ்ரீ முத்துவிநாயகர் எனும் நாமம் அப்பெருமானுக்கு சிறப்பாக பொருந்தியுள்ளது. அப்படிப்பட்ட பெருமானுக்கு இன்று மஹாகும்பாபிஷேக விழா பக்தகோடிகள் அனைவரும் கண்டு களித்து இஷ்டசித்திகளை பெற்றுய்யுமாறு எல்லாம் வல்ல ஸ்ரீ முத்து விநாயகர் பெருமான் பாதம் பணிந்து வாழ்துகின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய
ஆலய ஆஸ்தான வித்வான்
**திரு. ஆர். வி. எஸ். கமலதாஸன்**
அவர்கள் வழங்கிய

## வாழ்த்துரை

கொழும்பு செட்டியார் தெரு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் இச்சிறப்பு மலருக்கு எமது மனமார்ந்த நல்வாழ்துக்கள்.

கடந்த சில ஆண்டுகளாக பலரும் ஒன்று கூடி மிகச்சிறப்பாக இவ்வாலயத்தை நிர்மாணிக்க மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் பாராட்டுக்குரியது.

ஆலய மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றதோடு. ஆலயத்தின் ஆன்மீகப் பணிகள் மென்மேலும் விரிவடைந்து தொடர இறைவனை இறைஞ்சி வேண்டுகின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









புதுப்பொலிவுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள
கொழும்பு செட்டியார் தெரு ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தின் அழகிய காட்சிகளை படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









புதுப்பொலிவுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள
கொழும்பு செட்டியார் தெரு ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தின் அழகிய காட்சிகளை படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மூலமூர்த்தி ஸ்ரீ முத்துவிநாயகப் பெருமானும்
விமானத்தின் பின்பக்கத் தோற்றமும்



ஸ்ரீ சுப்பிரமணியர் சந்நிதியும்
விமானத் தோற்றமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









கர்ப்பக்கிரகத்தில் ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரரும்
விமானத்தின் பின்பக்க தோற்றமும்.

கர்ப்பக்கிரகத்தில் ஸ்ரீ மீனாட்சி அம்பாளும்
விமானத்தின் பின்பக்க தோற்றமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஸ்ரீ மகாவிஷ்னு பெருமானும் சன்நிதியின் முன்பக்க தோற்றமும்





ஸ்ரீ ஆஞ்ஞநேயர் பெருமானும் முன்பக்க தோற்றமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சூரிய பகவான் சந்நிதி



ஸ்ரீ சந்திர பகவான் சந்நிதி



சமயகுரவர் நால்வர் சந்நிதி



ஸ்ரீ சக்தி கணபதி சந்நிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஸ்ரீ ஆத்மலிங்கேஸ்வரர்
(ஜலலிங்கம்)



ஸ்ரீ தெஷிணா மூர்த்தி சந்நிதி



ஸ்ரீ லிங்கோற்பவர் சந்நிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் திருச்சபை



ஸ்ரீ காளி அம்பாள் சந்நிதி



ஸ்ரீ துர்க்கை அம்பாள் சந்நிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ நவக்கிரக நாயகர் சந்நிதி



ஸ்ரீ பைரவர் சந்நிதி



ஸ்ரீ நாகர்



ஸ்ரீ பைரவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சண்டேஸ்வரர் சந்நிதியின் பின்புறத்தோற்றம்



பலநூற்றாண்டுகள் பழமைவாய்ந்த
நந்தியும், பலிபீடமும் கம்பீரமான தோற்றத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









28-01-2016 வியாழக்கிழமை கணபதிஹோமமும் லக்ஷ்மி ஹோமமும் நடைபெறும் காட்சிகளை படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









28-01-2016 நவக்கிரக ஹோமம் நடைபெறும் காட்சிகளை படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









தீபஸ்தாபனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










30-02-2016 சனிக்கிழமை ஸ்ரீ பொன்னம்பல வானேஸ்வரர் ஆலய தீர்த்த தடாகத்திலிருந்து
ஸ்ரீ முத்துவிநாயகர் பெருமானுக்கு அபிஷேகத்துக்குரிய தீர்த்த கலசம் யானை மீது மக்கள் புடைசூழ வரும் காட்சிகளை படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









30-01-2016 சனிக்கிழமை சூர்யாக்கினி சங்கிரகணம் படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






30-01-2016 சனிக்கிழமை கடஸ்த்தாபணம் ரக்ஷைபந்தனம் நிகழ்வுகளை படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









31-01-2016 ஞாயிற்றுக்கிழமை பிரதான கும்பம் உள்வீதி வலம் வந்து யாகசாலை பிரவேசம் பூஜையை படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









01-02-2016 / 02-02-2016 பக்தர்கள் எண்ணெய்காப்பு சாத்துதல் நிகழ்வுகளை படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







03-02-2016 புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் 10.30 மணிக்குள்
நடைபெற்ற மஹா கும்பாபிஷேக நிகழ்வுகளை படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பிரதான கும்பம் வலம் வந்து ஸ்ரீ முத்துவிநாயகர் பெருமானுக்கு
அபிஷேகம் நடைபெறுவதை படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூல மூர்த்தியாகிய ஸ்ரீ முத்துவிநாயகர் பெருமான்
அலங்கார சொருபமாய் பக்தர்களுக்கு காட்சிகொடுப்பதை படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலயத்தின் வெள்ளிக் கொடிமரம் கம்பீரமாக காட்சியளிப்பதையும்
படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றதை தொடர்ந்து ஆசீர்வாதம் நடைபெறுவதையும்
மாலை வசந்த மண்ட அலங்கார பூஜையும் சுவாமி எழுந்தருளி ரதத்தில் வெளிவீதி உலா வருவதையும் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஸ்ரீ ஆத்மலிங்கேஸ்வரருக்கு (ஜலலிங்கம்)
பக்தர்கள் தங்கள் கைகளால் அபிஷேகம் செய்வதற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்டுள்ளது



ஆலய ஆஸ்தான வித்வான் மங்கள குழுவினரின் மங்கள இசை நடைபெறுவதை படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









21-04-2002 ஞாயிற்றுக்கிழமை விநாயகர் வழிபாடு, கணபதி ஹோமத்துடன் கிரியைகள் ஆரம்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சுவாமிகள் ஜல தான்ய வாசம் கண் திறத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









மஹாபூர்ணாகுதி, வீதி பிரதட்ஷணம் இராஜகோபுரத்திற்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையும்
அதில் கலந்துகொண்ட பக்தர்களின் ஒருபகுதியினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






எழுந்தருளி மூர்த்திகளுக்கு அபிஷேகம், அலங்காரமும் நடைபெற்றதையும்
மஹா கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட சிவாச்சாரியர்களைப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதை படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1990ம் ஆண்டு மஹா கும்பாபிஷேகத்தின்போது தர்மகர்த்தாவான உயர்திரு. துரைசாமி தியாகராசா,
உயர்திரு. இரத்தியசபாபதி தியாகராசா, உயர்திரு. சிவகுருநாதன் குமாரவேல் இவர்களுடன் திருமதி. கௌரி தியாகராசா



1990ம் ஆண்டு மஹா கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்ட சிவாச்சாரியார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தர்மாகர்த்தாவான உயர்திரு. துரைசாமி தியாகராசாவும் அவரது பாரியார் திருமதி. கௌரி தியாகராசாவும் 1990ம் ஆண்டு. மஹாகும்பாபிஷேகத்தின் போது எண்ணெய்க்காப்பு சாத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பிரதான கும்பமும் 1990ம் ஆண்டு இராஜகோபுர கும்பாபிஷேகமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1990ம் ஆண்டு ஸ்ரீ முத்துவிநாயகப் பெருமானுக்கு மஹாகும்பாபிஷேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1990ம் ஆண்டு நடைபெற்ற
மஹாகும்பாபிஷேகத்தன்று சுவாமி
வெளிவீதி செல்லும் காட்சியும்,
கலந்துகொண்ட பக்தர்களும்







1990ம் ஆண்டு
மஹாகும்பாபிஷேகத்தன்று
ஸ்ரீ முத்துவிநாயகர்,
ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரர்
சந்நிதியன் பின்புற
விமானக் காட்சியும்,
உயர்திரு. துரைசாமி தியாகராசாவும்
அவரது பாரியார்
திருமதி. கௌரி தியாகராசாவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1979ம் ஆண்டு
மஹாகும்பாபிஷேகத்தின்
போது தர்மகர்த்தாவான
உயர்திரு. திருமதி துரைசாமி
தியாகராசா, உயர்திரு.
திருமதி. இரத்தினசபாபதி
தியாகராசா, உயர்திரு.
திருமதி. சிவகுருநாதன்
மகேந்திரா இவர்களுடன்
ஆலய முகாமையாளர் திரு.
பாலசுப்ரமணியம் ஐயர்.

தர்மகர்த்தாக்கள் மஹா
பூர்ணாகுதி போடுதல்





தர்மகர்த்தாக்களுக்கு
சங்கல்பம் செய்தல்

மஹாகும்பாபிஷேகத்தில்
இராஜகோபுர கும்பாபிஷேகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









1979ம் ஆண்டு ஸ்ரீ முத்துவிநாயகப் பெருமானுக்கு மஹாகும்பாபிஷேகமும் கலந்துகொண்ட பக்தர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1979ம் ஆண்டு

மஹாகும்பாபிஷேகமும்

கலந்துகொண்ட

அமரர் அருள்மிகு

திருமுருக கிருபானந்தவாரியார்

அவர்களையும்,

அமரர் மாண்புமிகு தொண்டமான்

அவர்களையும் கௌரவித்தல்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தின் வரலாறும் அமைப்பும்



இந்து சமுத்திரத்தின் முத்துப் போல் அமைந்த சீர்மிகு சிறப்புடைய இலங்கைத் தீவின் தலைநகரமான கொழும்பு மாநகரில் செல்வச் செழிப்பு மிக்க தங்கம் மிளிரும் சுவர்ண நகரமாம் செட்டியார் தெருவில் சிவநெறிச் செம்மல் திருவாளர் உயர் திரு. எதிர்மணசிங்கம் முதலியாரால் கருங்கல் திருப்பணியிலான கர்ப்பகிரஹமும், அர்தமண்டபமும், அழகிய 12 தூண்களைக் கொண்ட மஹா மண்டபமும் அழகிய 16 தூண்களைக் கொண்ட ஸ்நாபன மண்டபத்துடனான கிழக்கு முகமான ஓர் ஆலயம் அமைத்து அதன் கர்ப்பக்கிரகத்தில் சிவன்,பிரம்மா, விஷ்ணு என மூன்று பிரிவுகளான 30 அங்குலம் உயரமுள்ள ஒரு கிரியாலிங்கத்தை அமர்த்தி அதன் முகமாக ஸ்ரீ மீனாட்சி அம்பிகைக்கு ஓர் சந்நிதிதானம் அமைத்து இத்திருப்பணி மூலம் ஆதி சமயமாம் சைவசமய மக்கள் சிறப்புடனும், பெருமையுடனும் வணங்கி வரும் காலத்திலே இவ்வாலயம் ஸ்ரீமத் மீனாட்சி அம்பிகை சமேத ஸ்ரீசோமசுந்தரேஸ்வரர் ஆலயமாகக் சீரும் சிறப்புடனும் ஆகம நெறியுடன் நடைபெற்று வரும் போது, 1754ஆம் ஆண்டு இத்தீவின் வடக்கே முத்துக் குளிக்கச் சென்றவர்களால் கண்டெடுக்கப் பட்ட தாமிர விநாயகர் சிலை கிடைக்கப் பெற்றது. இறை அருளால் கிடைக்கப்பெற்ற அழகு மிகு விநாயகர் சிலையை இவ்வாலயத்தின் சிவனுக்கு வலது பக்கத்தில் ஏகதள விமானத்துடன் மூலஸ்தானம் அமைத்து 3 தள ராஜகோபுரம் அமைத்து 1754ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இதன் பின் உயர்திரு. முத்துசாமி முதலியார், உயர்திரு. நமச்சிவாயம் முதலியார், உயர்திரு. ரெங்கநாதன் முதலியார், உயர் திரு. இரத்தின சபாபதி முதலியார், உயர் திரு. துரைசாமி முதலியார் இவர்களினால் இவ்வாலயம் நடாத்தப்பட்டு வந்தது. உயர் திரு. துரைசாமி தியாகராசா அவர்களின் தலைமையில் 1958ஆம் ஆண்டு பாலஸ்தாபன கும்பாபிஷேக வேலைகள் ஆரம்பித்து 1960ஆம் ஆண்டு ஐந்து தள இராஜகோபுரம் அமைக்கப்பட்டு, மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன் பின் 1979ஆம் ஆண்டு, 1990ஆம் ஆண்டு, காலப்பகுதியிலும் மஹா கும்பாபிஷேகம் இனிதே நிறைவு பெற்றது. இதனைத் தொடர்ந்து இவ்வாலயம் முத்துக்களின் நடுவில் விநாயகர் கிடைக்கப் பெற்றமையினால் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயமாகப் பக்தர்களினால் அழைக்கப் பட்டு வருகின்றது. ஒரு குடும்பத்தைப் பொறுத்தமட்டில் தாய்,தந்தையினால், பிள்ளைகளுக்குப் பெருமை உண்டாகும். சில குடும்பத்தில் பிள்ளைகளினால் தாய், தந்தைக்கு பெருமை உண்டாகும். ஆனால் இக் கோவிலைப் பொறுத்த மட்டில் பிள்ளைகளினால் தகப்பனுக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்த சிவலாயம் இதுவாகத்தான் இருக்கும். இறைவனை நாம் வணங்கும் போது ராஜ பார்வை, மத்தமை பார்வை என இரு முறை உண்டு. இறைவனை நாம் வணங்கும் போது நம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையை உயர்த்தி ராஜ பார்வையில் வணங்க வேண்டும். ஆனால் இங்கு என்ன நடந்தது என்றால் ஒவ்வொரு முறையும் பாலஸ்தாபன கும்பாபிஷேக திருப்பணி வேலைகள் செய்யும் போதும் கோவிலின் உள்ளே உள்வீதி நிலம் போடுவதற்காக உயர்த்தப்பட்டமையால் ராஜ பார்வையில் அமர்ந்திருந்த விநாயகர் கீழ் நோக்கியும் இவரை குனிந்தே விநாயகரை வணங்க வேண்டி இருந்தது. 29-04-2001ஆம் ஆண்டு பாலஸ்தாபன கும்பாபிஷேகதிருப் பணியானது மிகவும் பெரிய அளவிலா னதிருத்த வேலைகள் நடை பெற்றன. பழமை வாய்ந்த விமானம், கர்ப்பகிரஹம், அர்த்தமண்டபம் தகர்க்கப் பட்டு பழைய அத்திவாரத்தின் மேல் நிலத்திலிருந்து கர்ப்பகிரஹம், அர்த்தமண்டபம், விமானம் என்பனவும் கர்ப்பகிரஹத்தின் நிலத்தை உயர்த்தி ராஜ பார்வையில் மும்மூர்திக ளானா சிவன், பிரம்மா, விஷ்ணு இவர்களுக்கு நடுவில் முத்துவிநாயாகரை அமர்த்தி வலம் வரும் வருகையில் புதிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ளது. அத்துடன் 1754ஆம் ஆண்டுக்கு முன் சுவாமி சந்நிதி நுழைவாயிலாக இருந்த இடம் தற்போது ஒரு ஜன்னல் மட்டுமே காணக்கூடியதாக இருந்தது. அதில் வசதியின்றி ஓரளவு அடியார்கள் மட்டுமே சிவனை தரிசிப் பார்கள். மீண்டும் சுவாமி சந்நிதி நுழைவாயில் திருத்தப்பட்டு அடியார்கள் சுலபமாக வந்து போகவும் சிவனை தரிசிப்பதற்கும் மிகவும் வசதியாக உள்ளது. கோவிலின் மத்தியில் ஸ்ரீ பஞ்சமுக விநாயாகர், ஸ்ரீ நடேசர் மண்டபங்கள் அகற்றப்பட்டு சுவர் ஓரமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. வசந்தமண்ட பத்தின் மேற்கே உள்ள நவக்கிரஹத்தை கிழக்கே மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. புதிதாக 4-1/2அடி உயரத்தில் ஸ்ரீ தேவி பூதேவி சமேத ஸ்ரீ மஹாவிஷ்ணு பெருமாள் சந்நிதியும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த முறை பாரியளவிலான திருத்த வேலைகள் நடைபெற்று ஸ்ரீ முத்து விநாயகப்பொருமானின் அடியார்கள் சகல வசதியுடனும் எந்தவித இடையூறுகள் இன்றி சுவாமிகளை தரிசிக்க ஏற்றவாறு அமைத்து சித்திரபானு வருடம் சித்திரை மாதம் 12ஆம் நாள் வியாழக்கிழமை (25-04-2002) காலை 10.00 மணிமுதல் பகல் 11.40க்குள் வரும் அத்த நட்சத்திரமும், சித்த யோகமும், சுக்கிரபுதஹோரையும் கூடிய மிதுன லக்ன சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீ முத்து விநாயக பெருமானுக்கு ஏனைய பரிவாரம் சுவாமிகளுக்கும் மஹாகும்பாபிஷேகம் ஸ்ரீ முத்துவிநாயாகபொருமானின் கிருபையால் நிறைவேறியது.

சுபம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாலயத்தின் பூஜைகளும் திருவிழாக்களும்

தினசரி ஆறுகால பூசைகள் இங்கு நடைபெற்று வருகின்றது. அதில் திருவனந்தல் பூஜை, காலைச்சந்தி பூஜை, உச்சிக்கால பூஜை, சாயரட்சைபூஜை, 2ஆம் காலபூஜை, அர்த்தசாம பூஜை என்பன ஆகும்.

சூரிய உதயத்தின் முன் நடைபெறும் திருவனந்தல் பூஜை, ஸ்ரீ வைரவர் சுவாமியிலிருந்து ஆரம்பித்து விநாயகர், சிவன், அம்பாள், விஷ்ணு, சுப்பிரமணியர் வரை நடைபெறும். இதற்கு பால் பூஜை எனவும் சொல்பவர்கள் உண்டு. சூரிய உதயத்தின் பின் காலைச்சந்தி பூஜை ஆரம்பிப்பதால் இது சூரிய பகவானிலிருந்து ஆரம்பித்து சண்டேஸ்வரர் வரையும் உச்சிக்கால பூஜை ஸ்ரீ முத்து விநாயகர் சுவாமியிலிருந்து ஆரம்பித்து சிவன், அம்பாள், விஷ்ணு, சுப்பிரமணியர், முஷபலிபீடம் வரையும் நடைபெறும்.

சாயரட்சைபூஜை ஸ்ரீமுத்து விநாயகர் சுவாமியிலிருந்து ஆரம்பித்து வைரவர் வரையும் 2ஆம்காலப்பூஜை சந்திரனில் ஆரம்பித்து சண்டேஸ்வரர் வரையும், அர்த்தசாமப்பூஜை விநாயகரில் ஆரம்பித்து வைரவர் வரையும் நடைபெறுகின்றது. உற்சவகாலங்களில் வசந்தமண்டபத்தில் விஷேட தீபாராதனையும், உள்வீதி உற்சவத்தின் பின்பே சண்டேஸ்வரர் பூசை நடைபெறுகின்றது.

ஸ்ரீமுத்து விநாயகப்பெருமானின் வருடாந்த மகோற்சவம் இங்கு வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. பங்குனி மாதம 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பங்குனி மாதம் 30ஆம் திகதி (மகோற்சவம் 8ம் நாள்) வேட்டை திருவிழாவும், 9ம் நாளான சித்திரை மாதம் 1ஆம் திகதி சித்திரை வருடப் பிறப்பன்று ஸ்ரீமுத்து விநாயகப் பெருமானின் (இரதாரோஹணம்) தேர்த் திருவிழா இங்கு சிறப்பாக நடை பெறுகின்றது.

இலங்கையில் எந்தக் கோவிலிலும் இல்லாத அளவிற்கு விநாயகப் பெருமானின் அடியார்கள் தங்களது வீடுகளில் அல்லது வியாபாரத் ஸ்தலத்தின் முன் ஸ்ரீ முத்துவிநாயகர் சித்திரைத் தேரில் அமர்ந்து வரும்போது எத்தனையோ ஆயிரம் தேங்காய்களை உடைத்து தங்களது இஷ்ட சித்திகளை பெற்று மகிழ்கின்றனர்.

"வேண்டுவோருக்கு வேண்டுதலை அருளும் வினைதீர்க்கும் விநாயகப்பெருமானின் கருணையே தனி மகிமை உடையது".

சித்திரை மாதம் 2ஆம் நாள் காலையில் தீர்த்தோற்சவமும் மாலையில் திருவூஞ்சலும் கொடியிறக்கத்துடன் மகோற்சவம் இனிதே நிறைவுபெறுகின்றது. இதனை தொடர்ந்து வரும் முதல் செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமை வைரவர்மடையும் நடைபெறுகின்றது.சித்திரை மாதம் 24ஆம் திகதி முதல் வைகாசி மாதம் 14ஆம் திகதி வரையும் அக்கினி நாளை முன்னிட்டு ஸ்ரீ சுந்தரேஸ்வரர் சுவாமிக்கு அபிஷேகமும் உச்சிக்கால பூஜையுடன் சிவனின் சிகாமணிக்கு மேல் நீர் நிரம்பிய பானையை வைத்து அதிலிருந்து நீர் விழும் காட்சியை காணக்கூடியதாக உள்ளது. இந்த அக்கினி நாளில் சிவனை குளிர்ச்சியடைய செய் வதனால் நாமும் இந்த வெப்பமான நாளில் வெப்பம் நம்மைத் தாக்காதவாறு குளிர்ச்சி யடைகின்றோம். வைகாசிமாதம் வருகின்ற பௌர்ணமியில் வைகாசி விசாகத்தன்று ஸ்ரீ சிவசுப்பிரமணியருக்கு அபிஷேகமும் உள் வீதி உற்சவமும் நடை பெறும்.

வைகாசிமாதம் கணபதி ஹோமத்துடன் ஆரம்பித்து 20 நாட்கள் ஸ்ரீ சோமசுந்தரேஸ்வர சுவாமிக்கு காலையில் அஷ்டோத்திர சங்கு சஹஸ்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலஷாபிஷேகமும், மாலையில் விஷேட தீபாரதனையுடன் பஞ்சமுக லட்சார்ச்சனையும் நடைபெற்று 21ஆம் நாளான ஆனி உத்தரத்தன்று சுவாமிக்கு நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகமும், ஹோம பூர்த்தியும் விஷேட தீபாரதனையும் உள்வீதி உற்சவமும், மறுநாள் திருவூஞ்சலுடன் நிறைவுபெறும். இதை போல் ஆடி மாதம் ஸ்ரீ மீனாட்ஷிஅம்பாளுக்கு ஆடிப்பூரம் அன்று ஆவணிமாதம் ஸ்ரீ மஹாவிஷ்ணு சுவாமிக்கு கிருஷ்ணஜெயந்தியும் மறுநாள் ஸ்ரீ விஷ்ணு திருவூஞ்சலும் நடைபெறும். ஆவணிமாதம் வளர்பிறை 4ஆம் நாள் ஆவணிச்சதுர்த்தி விரதம் இங்கு மிகவும் சிறப்பாக மூன்று வேளையும் ஸ்ரீ முத்து விநாயகப்பெருமானுக்கு அபிஷேகங்கள் நடைபெற்று இரவு மின்விளக்குகளால அலங்கரிக்கப்பட்ட இரதத்தில் ஸ்ரீ முத்து விநாயகப்பெருமான் எழுந்தருளி வெளிவீதி வலம்வந்து பக்தர்களுக்கு அனுக்கிரககாட்சி தந்து கோவிலை வந்தடைவார்.

புரட்டாதி மாத அமாவாசை மறுநாள் நவராத்திரி பூஜை ஆரம்பம். இதற்கு ஸ்ரீ மீனாட்ஷி அம்பாளுக்கு காலையில் அபிஷேக பூஜையும் இரவு வசந்தமண்டபத்தில் விஷேட அலங்காரங் களுடன் தீபாராதனையும் நடைபெற்று 10ஆம் நாளான விஜயதசமியன்று காலையில் வித்தி யாரம்பத்துடன் ஸ்ரீ மீனாட்ஷி அம்பாளுக்கு அபிஷேகமும் மாலையில் மானம்பூத் திருவிழாவும் நடைபெறும். புரட்டாதிமாத சனி வாரம் ஸ்ரீ மஹாவிஷ்ணு பெருமானுக்கு காலையில் அபிஷேகமும் மாலையில் அலங்கார தீபாராதனையும் நடைபெறும்.

ஐப்பசி மாதம் வருகின்ற அமாவாசையைத் தொடர்ந்து சஷ்டி விரதம் ஆரம்பமாகும். ஆறு நாட்கள் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கு அபி'கமும் இரவு விஷேட தீபாராதனையும் நடைபெறும்.

கார்த்திகை மாதம் வரும் முதற் திங்கட்கிழமை கார்த்திகை சோமவாரம் ஸ்ரீ சோமசுந்தரேஸ்வர சுவாமிக்கு நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகமும், விஷேட தீபாரதனையும், உள்வீதி உற்சவமும் தொடர்ந்து வரும் கார்த்திகை சோமாவாரத்தில் அபிஷேகமும், விஷேட தீபாராதனையும், உள்வீதி உற்சவமும் நடைபெறும்.

கார்த்திகை மாத பௌர்ணமியன்று திருகார் த்திகை விரதம் சர்வாலயதீபம், குமாராலயதீபம், விஷ்ணுவாலயதீபம் என விநாயகர், முருகன், விஷ்ணு சுவாமிகட்கு அபிஷேகமும், இரவு விஷேட தீபாராதனையும் தீபம் ஏற்றுதல் கோபுரவாசலுக்கு வெளியே சொக்கப்பானை கொளுத்துதல் என்பன மிகச்சிறப்பாக நடை பெறும். மறுநாள் விநாயகர் ஷஷ்டி விரதம் ஆரம்பம். தொடர்ந்து 20 நாட்களுக்கு ஸ்ரீ பஞ்சமுக முத்துவிநாயகப் பெருமானுக்கு காலையில் அபிஷேகமும், மாலையில் வசந்த மண்டபத்தில் விஷேட தீபாராதனையும் பஞ்சமுக லட்ஷார்ச்சனையும் நடைபெற்று 21ஆது நாளான விநாயகர் ஷஷ்டி அன்று மகேஸ்வர பூஜையும் இரவு கணபதி ஹோமத்துடன் உள்வீதி உற்சவமும் நடைபெறும். அதனைத்தொடர்ந்து திருவெம்பாவை பூஜை ஆரம்பமாகி 9 தினங்கள் ஸ்ரீ நடராச சுவாமிக்கு தீபாராதனை நடைபெற்று 10ஆம் நாளான திருவாதிரை ஆருத்திராதரிசனம் அன்று விஷேட அபிஷேகமும், அலங்கார தீபாராதனையும் நடைபெற்று சுவாமி உள்வீதி உற்சத்துடன் கோபுர தரிசனம் மிகவும் சிறப்பாக நடைபெறும். மார்கழியில் வரும் வளர்பிறை ஏகாதசியை வைகுண்ட சுவர்க்க வாயில் ஏகாதசி விரதம் சிறப்பாக நடைபெறும். மார்கழி பூஜை 31நாளும் நடைபெற்று தை மாதம் 1ஆம் திகதி தைப் பொங்கல் விநாயகர் முன் கொண்டாடப் படுகின்றது.

தை மாதம் வரும் பௌர்ணமியை தைப்பூசம் எனவும் மாசியில் வரும் பௌர்ணமிக்கு அடுத்த நாள். மாசி மகம் எனவும் பங்குனியில் வரும் பௌர்ணமியை பங்குனி உத்திரம் எனவும் சித்திரையில் வரும் பௌர்ணமியை சித்திரபௌர்ணமி எனவும் வைகாசியில் வரும் பௌர்ணமியை முதல் நாள் வைகாசி விசாகம் எனவும் அபிஷேக திருவிழாக்கள் நடை பெறுகின்றன. வருடத்தில் சித்திரை, ஆனி, ஆவணி, புரட்டாதி, மார்கழி, மாசி மாதத்தில் ஸ்ரீ நடராசப்பெருமானுக்கு அபிஷேக அலங்கார தீபாரதனைகளும் மாதாந்தம் வரும் சதுர்த்தி விரதம், கார்த்திகை விரதம், ஏகாதசி விரதம் பிரதோஷ விரதம், சங்கடஹர சதுர்த்தி விரதங்களும் மிகவும் சிறப்பாக நடைபெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர்



விநாயகரின் தோற்றம் பற்றி, விநாயகபுராணம் முதலான நூல்கள் குறிப்பிடுகின்றன. இத்தகைய நூல்களில் விபரிக்கும் கதைகளில் ஒன்றை நோக்குவோம்.

வசிட்டமுனிவர் மரபில் வந்தவர் மாகதர். அவர் மகான், முனிவர். அந்த மாகதருக்கும் விபுதை எனும் அசுரப் பெண்ணுக்கும் பிறந்தவன் கஜமுகாசுர். இவன் அசுர குருவாகிய சுக்கிராச்சாரியாரின் ஆணைப் படி சிவனை நோக்கித் தவஞ் செய்து, பல அரிய வரங்களைப் பெற்றான். தேவர்,மானுடர், அசுரர் முதலாவர்களாலும் எந்த ஆயுதங்களாலும் இறவாத வரத்தைப் பெற்றான். திருமால், பிரம்மன், இந்திரன் முதலானவர்கள் தினந்தோறும் கஜமுகாசுரனின் முன் செல்லும் போது, அவர்கள் தம் சிரசில் மும்முறை குட்டிக் கொள்ளவும், தோப்புக்கரணம் செய்யவும் பணிக்கப் பட்டிருந்தனர். இத்தகைய கொடுமைகளைத் தாங்கமுடியாமல் தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். அவர் தேவர்களைக் காக்கத் திருவுளங் கொண்டார், திருக்கைலைமலையில் மந்திரங்கள் எழுதியிருந்த சித்திர மண்டபத்திற்கு உமாதேவியுடன் எழுந்தருளினார். அங்கே எழுதப் பெற்றிருந்த பிரணவத்தை கண்டார். சமஷ்டிப் பிரணவம் பிரிந்து, ஆண்டவன் எழுத்தாகிய அகரம் ஆண் யானையாகவும், அம்மை எழுத்தாகிய உகரம் பெண் யானையாகவும், மாறின. இரண்டும் சேர்வது போல காட்சியளித்தன. அப்போது யானை முகத்தோடு கூடிய விநாயகப்பெருமான் தோன்றினார்.

தேவர்கள் தம் துயரைத் தீர்க்குமாறு விநாயகப்பெருமானிடம் வேண்டினார்கள். அவர்கள் துயர் தீர்க்கத் திருவுளங் கொண்ட விநாயகர் கஜமுகாசுரனுடன் போர் செய்தார். தமது ஆயுதங்களால் அவனது படைகளை அழித்தார்.

அவன் தேவர் மனிதர்களாலோ அல்லது, எந்த ஆயுதங்களாலோ இறவாதிருக்க வரம் பெற்றுள்ளதை உணர்ந்தார். அவனது வரத்திற்கு மாறில்லாமல் தேவ, மனித, மிருக அம்சமாகிய திருவுடைய விநாயகர் தமது தந்தங்களில் ஒன்றை ஒடித்து எறிந்து அவனை வதம் செய்தார். கஜமுகாசுரன் அந்த உடலை விட்டு பெருச்சாளி வடிவம் எடுக்க விநாயகர் அதனை தன் வாகனமாகக் கொண்டார்.

விநாயகரின் திருவுருவம் யானை முகமும், மூன்று கண்களும், ஐந்து கரங்களும், பருத்த உடலும், தொந்தி வயிறும், கட்டையான கால்களும் கொண்டதாகும். இத்திரவமூர்த்தி மஞ்சள், சிவப்பு, வெண்மை ஆகிய நிறங்களில் தனித்தனி உடையதாய், வெண்பட்டாடை தரித்து, தலையில் ஜடா கிரீடம், கிரீட மகுடம், கரண்ட மகுடம் ஆகியவற்றில் ஒன்றினைத் தரிதத்தாய் நாகமாகிய பூணூலை அணிந்ததாய் மாலை முதலான சர்வ ஆபரணங்களும் உள்ளதாய் திருக்கரங்களில் அங்குசம், பாசம், தந்தம், மோதகம், கும்பம் என்பனவற்றை ஏந்தியதாய் அமைந்திருக்கும்.

விநாயகரின் திருவுருவம் நிற்றல், இருத்தல், நர்த்தனம் ஆகிய கோலங்களில் அமைந்திருக்கும்.

விநாயகரின் திருவவதாரங்களும், திருவுருவங்களும் 32 வகை என புராணமும், சிற்ப நூல்களும் குறிப்பிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (1) பால கணபதி



கைகளில் வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு, மோதகம் இவைகளை தரித்திருப் பவரும், பாலசூரியனைப் போன்று சரீரகாந்தியு டையவருமான இந்த பாலகண பதியை வணங்குகிறேன். (சிவப்பு நிறம்)

## (2) தருண கணபதி



எப்பொழுதும் கைகளில் பாசம்,அங்குசம், அபூபம், விளாம்பழம், நாவல்பழம், ஒற்றைத் தந்தம், நெற்கதிர், கரும்பு ஆகிய எட்டுப் பொருட்களையும் தரித்திருப்பவரும், நடுப்பகற் சூரியனைப்போலவும் பிரகாசமுடையவருமாகிய தருணகணபதி யானவர் உங்களைக் காப்பாற்றுவாராக. (ரத்தவர்ணம்)

## (3) பக்த கணபதி



கைகளில் தேங்காய், மாம்பழம், வெல்லம், பாயசம் இவைகளைத் தரித்திருப்பவரும், சரத்கால சந்திரனை போல வெண்மையான சரீரத்தையுடையவருமான பக்த கணபதியை வணங்குகிறேன்.(வெளுப்பு நிறம்)

## (4) வீர கணபதி



வேதளம், சக்தியாயுதம், அம்பு, வில், சக்ராயுதம், கத்தி, கட்வாங்கம், இரும்புலக்கை, கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், சூந்தம், மழு, துவஜம் ஆகிய 16 ஆயுதங்களையும் தரித்திருப்பவரான வீர கணபதியை எப்போதும் தியானிக்கின்றேன். (சிவப்பு நிறம்)

## (5) சக்தி கணபதி



சக்தியை ஆலிங்கனம் செய்துகொண்டிப்பவரும், ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டிருக்கின்ற இருப்புடையவரும், சந்யாகால மேகம் போல சிவந்தநிறமுடையவரும், பாசம், அங்குசம், தரித்திருப்பவரும், பயங்களைப்போக்குபவ ருமான சக்தி கணபதியை வணங்குகிறேன் (செந்தூர நிறம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## [6] த்விஜ கணபதி



ஹே! த்விஜ கணபதியே! யாரொருவன் புஸ்தகம், ஜபமாலை, தண்டம், கமண்டலம் இவைகளின் சோபையுடன் பிரகாசிக் கின்ற வரும், கைகளில் அணிந்திருக்கின்ற ஆபரணங்களை யுடையவரும், சந்திரனைப் போல, வெண்மை யான நிறமுடையவரும், நான்கு யானை முகங்களுடன் இருப்பவருமான தங்களை யார் நினைக்கின்றானோ அவன் பாக்கிய சாலி யாவன். (வெண்மை நிறம்)

## [7] சித்தி கணபதி



மாம்பழம், பூங்கொத்து, கருப்பங்கழி, எள்ளுக் கொழுக்கட்டை, மழு இவைகளை தரித்திப்ப வரும், தங்கம் போன்ற மஞ்சள் நிறமுடைய வரும், ஸ்ரீதேவி, ஸம்ருத்திதேவி இவர்களுடன் இருப்பவருமாகிய சித்தி கணபதியை வணங்குகிறேன்.

## [8] உச்சிஷ்ட கணபதி



கைகளில் நீலோத்பலம், மாதுளம்பழம், வீணை, நெல்கதிர், குன்றிமணிஜபமாலை இவை கைளைத் தரித்திருப்பவரும், நீல நிறமுடைய வருமான உச்சிஷ்ட கணபதியா னவர் எம்மை காப்பாற்றுவாராக.

## [9] விக்ன கணபதி



சங்கு, கரும்புவில், புஷ்பபானம், கோடரி, பாசம், சக்கரம், தந்தம், மழு, பூங்கொத்து, அம்பு இவைகளை கைகளில் வைத்திருப்பவரும், விரும்பி அணிந்திருக்கும் ஆபரணங்களால் சோபை உடையவரும்,தங்கத்தைப்போல நிறமுடையவரும், விக்கினங்களை நீக்குபவராக விளங்குகிறார்.

## [10] க்ஷிப்பிர கணபதி



தந்தம்,கல்பவிருக்ஷ கிளை, பாசம், ரத்ண கலசம், அங்குசம் இவைகளை தரித்திருப்பத வரும், செம்பரத்தம்பூப் போல அழகான சரீரகாந்தியுடையவருமான க்ஷிப்பிரகணபதியை தியானம் செய்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (11) ஹேரம்ப கணபதி



அபயம், வரதம், பாசம், தந்தம், ஜபமாலை, அங்குசம், கோடரி, முத்கரம், மோதகம், பழம், இவைகளை தரித்திருப்பவரும், சிம்மவாஹனத்தில் இருப்பவரும், ஐந்து யானை முகத்தை உடையவரும்,மஞ்சள் நிறமுடையவருமான ஹேரம்ப கணபதியானவர் எம்மைக் காப்பாற்றுவாராக.

## (12) லக்ஷ்மி கணபதி



கிளி, மாதுளம்பழம், மாணிக்கரத்ன மகுடங்களுடன் கூடிய கலசம், அங்குசம், பாசம், கல்பலதை, ஒளிபொருந்திய கத்தி இவைகளை தரித்திருப்பவரும், அமிர்தமயமாக இருப்பவரும், நீலோத்பலத்தை கையில் வைத்திருப்பவரும் இரண்டு தேவியரை இருபக்கத்திலும் வகித்து வரதஹஸ்தமுடன் இருக்கும் லஷ்மி கணபதி எம்மைக் காப்பாற்றுவாராக.(மஞ்சள் நிறம்)

## (13) மஹா கணபதி



யானை முகத்தையுடையவரும், சந்திரனை சிரசில் தரித்திருப்பவரும், முக்கண்ணுடையவரும், தாமரை மலரில் கையில் தரித்த சக்தியை சந்தோஷமுடன் தமது மடியில் ஆலிங்கனம் செய்து கொண்டிருப்பவரும், மாதுளம்பழம், கதை, கரும்புவில், சக்கரம், தாமரைமலர், பாசம், நீலோற்பழம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவைகளை வகிப்பராகிய மஹா கணபதியை சேவிக்கின்றேன்.(சிவப்பு நிறம்)

## (14) விஜய கணபதி



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவைகளைத் தரித்திருப்பவரும், மூஷிக வாகனத்தில் இருப்பவரும், சிவப்பு நிறமுள்ளவருமான விஜய கணபதி நம்முடைய இடையூறுகளை நீக்கி வெற்றியை தருவாராக.

## (15) நிறுத்த கணபதி



பாசம், அங்குசம், அபூபம் (அதிரசம்), கோடரி, தந்தத்தில் சுழலுகின்ற கை விரலுடையவரும், கல்ப விருட்ச அடியில் இருக்கும் நிறுத்த கணபதி வணங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (16) ஊர்த்வ கணபதி



செங்கழிநீர்பூ, நெற்கதிர், தாமரைப்பூ, கரும்புவில், அம்பு, கதை, தந்தம் இவைகளை தரிப்பவரும், தங்கம் போல பிரகாசிக்கின்ற மேனியையுடையவரும், பச்சை நிறமுடைய தேவியினால் ஆலிங்கனம் செய்யப்பட்ட வருமான ஊர்த்வ கணபதியானவர் எனக்கு மங்களத்தை கொடுப்பாராக.

## (17) ஏகாக்ஷர கணபதி



சிவப்பு நிறமுடையவரும், சிவந்தசந்தனம், செம்பட்டு, சிவந்தப்பூ இவைகளை அணிந்த வரும், பெரிய வயிறுடையவரும், சந்திரனை சிரசில் தரித்திருப்பவரும், முக்கண்ணுடை யவரும், குட்டையான கை காலுடையவரும், மாதுளம்பழம், அங்குசம், தந்தம், வரதம் இவைகளை கைகளில் தரித்திருப்பவரும், சர்பத்தை அணிந்து பத்மாசனத்தில் அமர்ந்த விக்னராஜர் சகல சௌபாக்கியங்களையும் அளிப்பாராக.

## (18) வர கணபதி



சிந்தூரத்தைப் போன்ற நிறமுடையவரும், யானை முகமுடையவரும், முக்கண்ணுடை யவரும், கைகளில் பாசம், அங்குசம், மதுக்கபாலம் இவைகளுடன் சிரசில் சந்திரனை தரித்திருப்பவரும், துவஜாக்ரம், தாமரை மலர் இவைகளை தரித்திருப்பவரும் புஷ்டியினாலே ஆலிங்கனம் செய்து கொள்ளப்பட்ட சரீரத்தையுடையவரும், சகல செல்வங்களையும் அளிக்கும் தாமரைமலரை துதிக்கையில் வைத்திருப்பவருமான வர கணபதியை வணங்குகின்றேன்.

## (19) திரியக்ஷர கணபதி



யானை முகமுடையவரும், அசைந்து கொண்டிருக்கும் சாமரை போன்ற காதுகளு டையவரும், தங்கநிறமுடையவரும், நான்கு கைகளுடையவரும், பாசம், அங்குசம், வலதுகையில் தந்தம், இடது கையில் மாம் பழத்தையும், துதிக்கையில் மோதகத் தையும் தரித்திருப்பவருமான கணபதியை சேவிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (20) ஷிப்ரபிரசாத கணபதி



பாசம், அங்குசம், கல்பலதை, தந்தம், மாதுளம்பழம், தாமரைப்பூ இவைகளை கைகளில் தரித்திருப்பவரும், சந்திரனை சிரசில் சூடியவரும், மூன்று கண்கள் உடையவரும், பெருவயிற்றுடன் பத்மாசனத்தில் இருப்பவரும், எப்பொழுதும் விக்கினங்களை நீக்குகின்ற வரான ஷிப்ரபிரசாத கணபதி எனக்கு செல்வத்தை அளிப்பாராக.

## (21) ஹரித்திரா கணபதி



மஞ்சள் நிறமுடையவரும்,நான்கு கைகள், மஞ்சளான முகமும், பாசம், அங்குசம், மோதகம், தந்தம் இவைகளை தரித்திருப்பவரும், பக்தர்களுக்கு அபயம் அளிப்பவருமான ஹரித்திரா கணபதியை வணங்குகின்றேன்.

## (22) ஏகதந்த கணபதி



பெரிய வயிறும், நீல நிறமானவரும், மேல் கையில் கோடரி, ஜபமாலையும், கீழ்கையில் இட்லி, தந்தம் இவைகளையும் தரித்திருப்ப வருமான ஏகதந்த கணபதியை வணங்குகிறேன்.

## (23) ஸ்ருஷ்டி கணபதி



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவைகளை தரிப்பவரும், மூஞ்சூறு வாகன த்தில் இருப்பவரும், சிவந்த நிறமுடைய வரும், ஸ்ருஷ்டி செய்வதில் சிறந்த சாமர்த் தியம் உடையவருமான விநாயகர் நம்முடைய சகல விக்கினங்களையும் நாசம் செய்வாராக.

## (24) உத்தண்ட கணபதி



நீலோத்பலம் அல்லது, செழுங்கழுநீர், தாமரைப்பூ மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்பு வில் புஷ்பம், ரத்னகலசம், நெற்கதிர், பாசம், அங்குசம், அப்ஜம் இவைகளில் தரிப்பவரும், மஞ்சள் நிறமுடையவரும், தாமரையை கையில் தரித்தவளான தேவி யினால் ஆலிங்கனம் செய்யப்பட்டவரும், சிவப்பு நிறமுடையவருமான உத்தண்ட கணபதி யானவர் துதிப்பவர்களுக்கு மங்களத்தை அளிப்பாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## [25] ருணமோசந கணபதி



பாசம், அங்குசம், தந்தம், நாவல்பழம் இவைகளைத் தரிப்பவருமாகிய ருணமோசந கணபதியானவர் சந்தோஷத்தை கொடுப்பாராக.

## [26] டுண்டி கணபதி



ஜபமாலை, கோடரி, ரத்னபாத்திரம், தந்தம் இவைகளைக் கைகளில் தரித்திருப்பவருமாகிய டுண்டி கணபதியானவர் விக்கினங்களை நீக்கி ஷேமத்தை அளிப்பாராக.

## [27] இருமுகக் கணபதி



பாசம், அங்குசம், தந்தம், ரத்னபாத்திரம் இவைகளைத் தரித்தவரும், நீல நிறமுடைய வரும், சிவந்த ரத்தினங்களால் ஆன கீரிடம், மாலைகளைத் தரிப்பவருமான இருமுகக் கணபதியானவர் எனக்கு செல்வத்தை கொடுப்பாராக.

## [28] திரிமுக கணபதி



கூர்மையான மாவெட்டி, ஜபமாலை, வரதம் இவைகளை இடது பக்கத்திலும், பாசம், அமிர்தகலசம், அபயம் இவைகளை வலது பக்க கைகளில் தரிப்பவரும், தங்கத்தாம ரையில் கர்ணிகையுடன் கூடிய பீடத்தில் சந்தோஷமாக வீற்றிருப்பவரும் பூவரசம்பூ போல சிவந்த நிறமுடையவருமான திரிமுக கணபதி நம்மைக் காப்பாற்றுவாராக.

## [29] சிம்ம கணபதி



வீணை, கல்பலதை, சக்ராயுதம், வரதம் இவைகளை இடது கைகளிலும், தாமரை, ரத்ன கலசமும்,அழகான பூங்கொத்து, அபயம், இவைகளை வலது கைகளிலும் தரிப்பவரும், துதிக்கையுடைய சிம்மமுகத்துடன் கூடியவரும், சங்கு, சந்திரன் இவைகளைப்போல வெண்மை நிறமுடையவரும், சகல மங்களங்களையும் தருபவரும்,ரத்னம் போன்ற ஆடையினால் பிரகாசிக்கின்றவருமான சிம்ம கணபதியானவர் நம்மை துன்பங்களிலிருந்து காப்பாற்றுவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (30) யோக கணபதி



யோகத்தில் இருப்பவரும், யோகபட்டத்தை யணிந்து அழகாக இருப்பவரும், இளம் சந்திரனைப்போன்ற சரீரகாந்தியுடையவரும், இந்திரநீலம் போன்ற ஆடையணிந்திருப்பவரும், பாசம், கரும்பு, ஜபமாலை, யோகதண்டம் இவைகளை தரித்திருப்பவருமான யோக கணபதியானவர் நம்மை எப்பொழுதும் காப்பாற்றுவாராக.

## (31) துர்கா கணபதி



உருக்கியதங்கம் போன்ற நிறமுடையவரும், எட்டு கைகளும் உடையவரும், பருத்த சரீரமுடையவரும், வலதுபக்க கைகளில் பிரகாசிக்கின்ற அங்குசம், அம்பு, ஜபமாலை, தந்தம், இவைகளையும், இடது கைகளில் பாசம், வில், கல்பலதை நாவற்பழம் இவைகளை தரித்திருப்பவரும், சிவப்பு ஆடையணிந்தவருமான துர்கா கணபதி எப்போதும் சந்தோஷத்தை அளிப்பாராக.

## (32) ஸங்கடஹர கணபதி



பாலசூரியனைப் போல ஒளியுடையவரும், மஞ்சள் நிறத்தவரும், ஜொலிக்கும் ரத்னா பரணங்களை அணிந்திருப்பவரும், கையில் நீலோற்பலத்தை வைத்திருக்கும் பாலைப் பருவமுடைய சக்தியை இடதுமடியில் வைத்திருப்பவரும், இடதுபக்கம் அங்குசம், வரதமும், வலதுபக்கம், பாயசபாத்திரம், பாசம் இவைகளை தரித்திருப்பவரும், நீலநிற ஆடையை அணிந்திருப்பவருமான ஸங்கடஹர கணபதியானவர் எப்பொழுதும் காப்பாற்றுவாரக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழிபாட்டில் அருகம்புல்லின் சிறப்பு

சுலபன் என்ற ஓர் அரசன் அவந்தி நாட்டை ஆட்சி செய்து வந்தான். அவன் மனைவியின் பெயர் சுபத்திரை.

சுலபன் தருமசிந்தனையுள்ளவன். தெய்வ பக்தி நிரம்பியவன். நீதி நெறி தவறாது குடி தழுவிக் கோலோட்சி வாழ்ந்து வந்தான்.

ஒருநாள் ஓர் அந்தணன் சுலபனிடம் உதவி கோரி வந்திருந்தான். அவன் பெயர் மதுசூதனன்.

அந்தணன் மிகவும் வறுமை வாய்ப்பட்டவனாக இருந்தான். உடுத்திக் கொள்ள ஓர் உடைகூட இல்லாமல் மனைவியினுடைய கிழிந்த சேலையின் ஒரு பகுதியையே இடுப்பில் உடையாக அணிந்து வந்திருந்தான்.

சுலபன் ஏழைகள்பால் இரக்கமுடையவன். வந்தவர்க்கெல்லாம் வேண்டிய அளவு பொருட்களை வாரி வழங்குவது அவனுடைய இயல்பு தான்.

ஆனால் அவன் விஷயத்தில் அன்று விதி விளையாடி விட்டது.

அந்த அந்தணனுடைய உடையும், தோற்றமும் மன்னன் சுலபனுக்கு வினோதமாக வேடிக்கையாக இருந்தது.

ஆகவே தன்னை மறந்து கலகலவெனச் சிரித்து விட்டான்.

மதுசூதனன் வறுமைவாய்ப்பட்டவனாக இருந்தாலும் பக்திமான், வேத சாத்திரங்களைப் பயின்றவன்.

மன்னன் தன் தோற்றத்தைக் கண்டு ஏளனமாகச் சிரித்தது மதுசூதனனுக்கு பெருங்கோபத்தை உண்டாக்கிற்று.

அவன் மன்னனை நோக்கி ஆத்திரத்துடன் "மன்னா! என்னுடைய வறுமை தோற்றத்தைக் கண்டு இரக்கம் கொள்ளாது ஏளனப்படுத்தும் வகையில் நகைத்தாய், மனித சுபாவத்திற்கு அடிப்படையான இரக்க குணம் அற்றவனாக நீ நடந்து கொண்டு விட்டதால் அறிவு சற்று இல்லாத மந்த குணம் படைத்த காளை மாடாக பிறக்கக் கடவாய்" என்று சாபம் கொடுத்து விட்டார்.

மதுசூதனன் தன் கணவனுக்கு அவசரப்பட்டுச் சாபம் கொடுத்து விட்டதை கண்ட அரசி சுபத்திரை மிகவும் வேதனைப்பட்டாள்.

அந்தணன் கொஞ்சம் பொறுமை காண்பித்திருந்தால் சுலபன் அவனுடைய வறுமையை அகற்றும் விதத்தில் பொன்னும் பொருளும் கொடுத்திருப்பான். என்பதை அவள் அறிவாள்.

மதுசூதனன் அவசரப் பட்டுச் சாபம் கொடுத்து விட்டது காரணமாக அவன் மீது சுபத்திரை கடுஞ் சினம் கொண்டாள்.

"அந்தணரே அந்தணர் குலத்தில் பிறந்தும் உம்மிடம் பொறுமைக் குணம் அமையாது போய்விட்டது. என் கணவர் தவறு செய்து விட்டதாக உமது மனதில் பட்டிருந்தால் அதனைச் சுட்டிக்காட்டி என் கணவரைத் திருத்த முற்பட்டிருக்க வேண்டும். என் கணவர் திருந்த மறுத்திருந்தால் நீர் சாபம் கொடுத்திருக் கலாம். என் கண வருடைய உயர்ந்த குண இயல்பினை உணர்ந்து கொள்ளாமல் அற்ப காரணத்திற்காகச் சாபம் கொடுத்த நீர் மனிதனாக இருக்கவே தகுதியற்றவர். நீர் ஒரு கழுதையாக பிறக்கக் கடவீர்" என்று சுபத்திரை அந்தணனுக்குச் சாபம் கொடுத்து விட்டாள்.

மன்னன் தவறிழைத்திருக்க அதற்காக மன்னனைக் கண்டிப்பதற்கு பதிலாக தனக்குச் சுபத்திரை சாபம் கொடுத்து விட்டது கண்டு அந்தணன் கோபாவேசமடைந்தான்.

"அறிவுள்ள ஓர் அரசி போல செயற்படாமல் சண்டாளப் பெண் போல கேவலமாக நடந்து கொண்ட நீ ஒரு சண்டாளப் பெண்ணாகப் பிறக்கக் கடவது" என்று அந்தணன் சாபம் கொடுத்து விட்டான்.

ஆய்ந்தராய்ந்து பாராமல் அறிவை கைவிட்டு விட்டு ஆத்திரத்துடன் செயற்பட்ட காரணத்தால் மன்னன் சுலபன் அரசி சுபத்திரை அந்தணன் மதுசூதனன் ஆகிய மூவரும் ஒருவருக்கொருவர் சாபம் கொடுத்துக் கொள்ளுமாறு விதி வசம் அமைந்து விட்டது.

அந்த மூவரும் ஒருவருக்கொருவர் கொடுத்துக் கொண்ட சாபத்தின் பலாபலன்களை உடனடியாக அனுபவிக்க தொடங்கினர்.

மன்னன் சுலபன் ஒரு எருதாக மாறி அந்த நகரத்திலிருந்த ஒரு குடியானவன் வீட்டில் சென்று சேர்ந்தான்.

அந்தணன் மதுசூதனண் கழுதையாக மாறி அதே நகரத்திலிருந்த ஒரு வண்ணானிடம் போய் சேர்ந்தான்.

சுபத்திரை சண்டாளப் பெண்ணாக மாறி நகரத்தின் சேரியில் சென்று வசிக்கத் தொடங்கினாள்.

குடியாவன் ஒருநாள் வயலை உழுத பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரிலிருந்த சுலபனாகிய மாட்டை அவிழ்த்து மேய விட்டான்.

அந்தப் பக்கமிருந்த குளத்தின் பக்கமாக கழுதை மீது அழுக்கு மூட்டையை ஏற்றிக் கொண்டு வந்த வண்ணான் மதுசூதனனாகிய கழுதையின் முதுகிலிருந்த அழுக்கு மூட்டையை இறக்கிப் போட்டுவிட்டுக் கழுதையைப் புல்மேய விடுத்தான்.

அங்கே பக்கத்திலேயே சுபத்திரையாகிய சண்டாளப் பெண் புல் அறுத்துக் கொண்டிருந்தாள்.

சண்டாளப் பெண் புல்லை அறுத்துக் கட்டாக கட்டும் சமயத்தில் திடீரெனக் கடுமையான மழை பிடித்துக் கொண்டது.

புல் கட்டை தூக்கிக் கொண்டு மழையில் நனையாமல் இருப்பதற்காக அருகில் ஓர் விநாயகர் ஆலயத்தின் பக்கமாகச் சென்று உள்ளே ஒதுங்கினாள்.

எருதும் கழுதையும் மழைக்கு அஞ்சி அதே விநாயகர் ஆலயத்திற்குள் ஓடி வந்து ஒதுங்கி நின்றன.

காற்றும் மழையும் மிகவும் பயங்கரமாக சுழன்றடித்தன. மழை தொடர்ந்து விடாமல் பெய்து கொண்டிருக்கவே சண்டாளப் பெண் கழுதை எருது ஆகிய மூவரும் ஆலயத்தை விட்டு வெளியேற வழியின்றி அங்கேயே தங்க வேண்டியதாயிற்று.

பசி எடுக்கவே கழுதை சண்டாளப் பெண் வைத்திருந்த புல்லுக்கட்டில் வாய் வைத்து தின்னத் தொடங்கியது.

அதனை கண்ட சண்டாளப் பெண் அங்கே கிடந்த ஒரு மரக்கட்டையை எடுத்து கழுதையை பலங்கொண்ட மட்டும் அடித்தாள்.

கழுதை மிரண்டு பின்னங்கால்களால் மாட்டை உதைத்தது.

மாடு வெகுண்டு கழுதையைத் தன் கொம்புகளால் முட்டித் தள்ளிற்று.

கழுதையும் எருதும் சண்டாளப் பெண் மீது விழ அவள் திரும்பவும் அடிக்க கோயிலின் வெளிப்பிரகாரத்தினுள் ஒரே களேபரமாகி விட்டது.

அந்தச் சமயத்தில் உட்பிரகாரத்தில் விநாயகப் பெருமானுக்கு அந்தி நேரப் பூஜை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

வெளிப்பிரகாரத்தில் ஒரே கூச்சல் குழப்பமாக இருந்ததைக்கண்டு உள்ளே பூஜை நடத்திக் கொண்டிருந்தவர்களும் வழிபாடு நடத்திக் கொண்டிருந்தவர்களும் வெளியே வந்து பார்த்தனர். கழுதையும் மாடும் போட்டி போட்டுக் கொண்டு புல்லைப் பிடுங்கித் தின்ன சண்டாளப் பெண் அவற்றை அடித்து விரட்ட ஒரே ரகளையாக இருப்பதைக் கண்டு பூஜை நடத்திக் கொண்டிருந்தவர்கள் சண்டாளப் பெண்ணையும் மாட்டையும் கழுதையையும் வெளியே விரட்டியடிக்க முயற்சியெடுத்தனர்.

வெளியே கடுமையான இடி மழையாக இருந்தமையால் கோயிலை விட்டு வெளியேற முடியாமல் சண்டாளப் பெண் கழுதை எருது ஆகிய மூவரும் கோயிலுக்குள்ளேயே வளைய வளைய ஓடி வந்தனர்.

அப்போது சண்டாளப் பெண் கையிலும் மாடு கழுதை ஆகியவற்றின் வாயிலும் இருந்த அருகம்புற்கள் சிதறி விநாயகர் விக்கிரத்தின் மீது விழுந்தன.

ஆலய பூஜை நடத்திக் கொண்டிருந்தவர்கள் அந்தக் காட்சியை கண்டு திகைப்பும் வேதனையும் அடைந்தனர்.

சண்டாளப் பெண் கைப்பட்ட புல் விநாயகர் பெருமான் திருமேனி மீது பட்டு விட்டதே எனக் கலங்கினர்.

சற்றும் ஈவிரக்கம் பாராது சண்டாளப் பெண் எருது கழுதை ஆகிய மூவரையும் கடும் மழை என்றும் பாராது வெளியே துரத்தி விட்டனர்.

பிறகு குடங்குடமாக நீர் கொண்டு வந்து பரிசுத்தப்படுத்தினர். இரவு முழுவதும் அடித்த மழை காற்று தாளமாட்டாமல் சண்டாளப் பெண் எருது கழுதை ஆகிய மூவரும் உயிரிழந்து விட்டனர்.

உடனே விண்ணுலகிலிருந்து விநாயகப் பெருமான் அனுப்பி வைத்த விமானம் பூத கணங்கள் சகிதம் வந்து சண்டாளப் பெண் எருது கழுதை ஆகிய மூவரின் ஆத்மாக்களையும் சுமந்து மேலேறிச் சென்றது.

அந்தக் காட்சியை வியப்புத் தோன்றக் கவனித்த சில முனிவர்கள் பூதகணங்களை நோக்கி "நியமம் நிஷ்டை வழிபாடு ஏதும் செய்யாத இவர்களுக்கு இம்மாதிரி உயர் பதவி கிடைத்த காரணம் என்ன"? என வினவினர்.

"முனிவர்களே! இவர்கள் மூவரும் துரத்தியடிக் கப்பட்ட போது கோயிலுக்குள் சுற்றிச் சுற்றி வலம் வந்தார்கள். அப்போது சண்டாளப்பெண் கையிலும், மாடு, கழுதை ஆகியவற்றின் வாயிலும் இருந்த அறுகம் புற்கள் விநாயகப்பெருமானின் திருமேனி மீது பட்டது. அதனால் அருகம்புல் கொண்டு விநாயகப் பெருமானை அர்ச்சனை செய்ததற்கான பலன் இவர்களுக்கு கிடைத்தது." என கணநாதர்கள் புகன்றனார்.

முனிவர்கள் அந்த தகவலைக் கேட்டு பெருவியப்பு அடைந்தனர்.

அவர் கணநாதர்களை நோக்கி,"கணநாதர்களே! திட்டமிட்டு வழிபாடு நடத்தாத நிலையில் தற்செயலாக அறுகம் புல் விநாயகமூர்த்தியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமேனியில் பட்டதற்கு இவ்வளவு மேன்மையான பலன் கிடைக்கப்பெற்றது என்றால், அருகம் புற்களைக் கொண்டு முறையாக விநாயகப் பெருமானை ஆராதித்தால் இன்னும் உயர்ந்த பலன்கள் கிடைக்க வேண்டுமே! அது குறித்து அருள் கூர்ந்து விளக்கி கூறுங்கள்" என வேண்டிக்கொண்டார்கள்.

கணநாதர்கள் கீழ்க்கண்ட விருத்தாந்தங்களை முனிவர்களுக்கு எடுத்தியம்பினார்கள்.

தரபரம் என்னும் நகரத்தை ஒட்டிய ஒரு சிறு காட்டில் கவுண்டின்யர் என்ற முனிவர் இருந்தார்.

கவுண்டின்யரின் தர்மபத்தின்யின் பெயர் ஆசிரியை.

முனிவர் விநாயகப்பெருமானிடம் பெரும் பக்தி கொண்டவர். விநாயகப்பெருமானை ஆராத்தி வழிபாடு நடத்துவதே தனது வாழ்க்கையின் குறிக்கோள் என வாழ்ந்து வந்தார்.

சாதாரணமாகத் தெய்வ வழிபாடு நடத்துவோர். தெய்வங்களின் மூர்த்தியை மணமிக்க மலர்களைச் சாத்தி ஆராதிப்பது தான் வழக்கம். விநாயகரை வழிபடும் பலரும் அவ்விதம் மலர்களைக்கொண்டே வழிப்பாடு நடத்தினர்.

ஆனால் கவுண்டின்யர் முற்றிலும் புது மாதிரியான வழிபாடு நடத்தினார்.

நாள்தோறும் காட்டிற்குச் சென்று பசுமையான அருகம்புற்களைக் கொண்டு வருவார். பின்னர் அந்த அருகம்புற்களை ஆய்ந்து எடுத்து பதினாயிரம் அருகுகளால் விநாயகப்பெருமானை அர்ச்சனை செய்வார்.

எத்தனையோ விதமான மண மலர்கள் இருக்க மணம் சிறிதுமற்ற அறுகம்புற்களைக் கொண்டு தனது கணவர் விநாயகர் ஆராதனை நடத்துகின்றாரே ஏன்? என்று முனிவரின் தர்மபத்தினி ஆசிரியைக்கு ஐயம் வந்தது.

ஒருநாள் தனக்கு ஏற்பட்ட ஐயப்பாட்டைக் குறித்துக் கணவரிடம் கேட்டார். கவுண்டின்யர் தமது தர்மபத்தினியிடம் அன்புடன் நோக்கி "அன்பே! நீ கேட்ட விஷயம் தொடர்பாக ஒரு வரலாறு உண்டு. அதனைக் கூறினால் நீ விளங்கிக் கொள்வாய், அந்த வரலாற்றை உனக்குக் கூறுகிறேன்" என்று சொல்லி விளக்கி கூறத் தொடங்கினார்.

யமலோகத்தில் ஒருநாள் யமதர்மனுடைய சபை கூடியிருந்தது. சபையில் தேவமாதர்களின் அற்புதமான நடன நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. யமதர்மன் நடன நிகழ்ச்சியை ஆர்வத்துடன் ரசித்துப் பார்த்துக் கொண்டிரு ந்தான்.

நடனமாடிய வேகத்தில் திலோத்தமை என்ற நடனமாதின் மேலாடை நழுவி விட்டது.

திலோத்தமையின் பருத்த திரண்ட மார்பகங் களையும், மேனி எழிலையும் ஒரு கணம் மெய்மறந்து நோக்கினான் யமதர்மன்.

மேலாடை நழுவி விட்டது கண்டு வெட்கமடைந்த திலோத்தமை சபையிலிருந்து வெளியே சென்று விட்டாள். யமதர்மன் விரகதாபத்துக்கு இலக்கானான்.

சபையில் நாட்டியம் நடந்து கொண்டிருக்கும் போதே சபையை விட்டெழுந்து அந்தபுரம் நோக்கி செல்லத் தொடங்கினான்.

அதிகமாக விரகதாபத்தை யமன் கொண்டிருந் ததனால் போகும் வழியிலேயே அவனுடைய தேஜஸ் வெளிப்பட்டது.

தரையில் விழுந்த யமனுடைய தேஜஸிலிருந்து பயங்கர தோற்றமுடைய ஓர் அரக்கன் தோன்றினான்.

பிரம்மாண்ட மான உருவமும்,பயங்கர தோற்றமும் கொண்டிருந்த அனலாசுரன் என்ற அரக்கன் இடி முழக்கம் போல கர்ஜனை செய்வதைக் கேட்டு அந்தப் பிராந்தியத்திலிருந்தவர்கள் எல்லாம் அலறியடித்துக் கொண்டு நாலாபுறமும் சிதறியோடினர்.

தன்னிடமிருந்து தோன்றிய அனலாசுரனின் அட்டகாச வெறித் தாண்டவத்தைக் கண்டு அஞ்சி யமதர்மராஜன் தன் மகனையே பார்க்க அஞ்சி அந்தப்புரத்திற்கு சென்று கதவை தாளிட்டுக் கொண்டான்.

உலகத்தில் சகல உயிர்களையும் பறிக்கும் வல்லமையும் அதிகாரமும் படைத்த தன்னுடைய தந்தையாகிய யமதர்மனே தன்னைக்கண்டு ஓடி ஒளிந்தான் என்றால் தனக்கு நிகரானவர்கள் பிரபஞ்சத்தில் யாருமே இருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டான்.

அதனால் அவன் தேவர்களையெல்லாம் வலுச்சண்டைக்கு இழுத்து அவர்களை மிரட்டி அடித்து பெருந்தொல்லை கொடுக்கத் தொடங்கி விட்டான்.

தேவர்கள் இந்திரன் தலைமையில் வைகுந்த த்திற்கு விரைவில் சென்று அனலாசுரன் செய்யும் கொடுமைகளைப் பற்றி திருமாலிடம் முறை யிட்டனர்.

திருமால் இந்திரனை நோக்கி, "இந்திரா! அனலாசுரனை மாய்க்கும் வல்லமை விநாயகப்பெருமானுக்குத்தான் உண்டு. ஆகவே அவரிடம் போய் முறையிடுங்கள்" என யோசனை கூறி அனுப்பி வைத்தார்.

இந்திராதி தேவர்கள் விநாயகாப்பெருமானைச் சந்தித்து அனலாசுரன் செய்யும் கொடுமைகளை அவரிடம் விவரித்துக் கூறினார்கள்.

"அனலாசுரனை நான் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் கவலைப்படாதீர்கள்" என்று விநாயகப் பெருமான் தேவர்களுக்கு அபயமளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகப்பெருமானிடம் இந்திராதி தேவர்கள் உரையாடிக் கொண்டிருந்த போது அந்த இடத்திற்கே அனலாசுரன் வந்து விட்டான். "ஆஹா! என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். தேவர்களை ஒவ்வொருவர்களாக தேடியலையும் என் சிரமம் குறைப்பதற்காக எல்லோரும் ஒரே இடத்தில் கூடியிருக்கிறீர்கள். ஒரே சமயத்தில் உங்கள் அனைவரையும் துவம்சம் செய்து அள்ளி விழுங்குகின்றேன்" என அனலாசுரன் ஆர்ப்பரித்தான்.

விநாயகப்பெருமான் அனலாசுரனை நோக்கி அலட்சியமாக சிரித்து "அனலாசுரா! இந்த அண்டசராசரம் முழுவதும் சுற்றி வந்து விட்டாய் என்றாலும் நீ போய்ப் பார்க்காத இடம் ஒன்று இருக்கிறது" அதனை பார்க்கிறாயா? என்று கேட்டார்.

"நான் பார்க்காத இடமும் உண்டா? எங்கே இருக்கிறது அந்த இடம்"?

உடனே விநாயகப்பெருமான் தம்முடைய நீண்ட துதிக்கையை நீட்டி அனலாசுரனை தூக்கி தமது வாயிலிட்டு விழுங்கிவிட்டார். அனலாசுரன் வெப்பமயமானவன் அவன் உடல் அக்கினி போன்று தகித்துக் கொண்டிருக்கும் அவன் விநாயகப்பெருமானின் வயிற்றுக்குள் சென்றதும் விநாயகப்பெருமானின் உடலிலிருந்து கடுமையான வெப்பம் கிளம்பி எங்கும் பரவத் தொடங்கியது.

அண்டசராசரங்களும் வெப்பத்தால் தாக்கப்பட்டு அதிலுள்ள ஜீவராசிகள் வெப்பம் தாளாமல் துடித்தன.

விஷ்ணு, பிரம்மா, இந்திரன் மற்றும் தேவர்கள் வெப்பத்தை சமாளிக்க முடியாது திணறினர்.

விநாயகப்பெருமானின் உடல் வெப்பத்தைத் தணித்தாலல்லாது அண்டசராசரங்களில் பிரதிபலிக்கும் வெப்பத்தைத் தணிக்கமுடியாது என உணர்ந்த அவர்கள் விநாயகப்பெருமானின் உடல் வெப்பத்தைத் தணிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டனர்.

விநாயகப்பெருமான் மீது பன்னீர் குடம்குடமாக கொட்டப்பட்டது. மலைகளைப்போல சந்தனத்தை அரைத்துச் சேர்த்து விநாயகப்பெருமானின் உடல்முழுவதிலும் தடவிப் பூசினர்.

வருணதேவன் விடாது பெருமானின் உடல் மீது நீரைத் தெளித்தான். தேவர்கள் அமுதத்தைக் கொண்டு வந்து கொட்டினர்.

கோடிக்கணக்கில் தாமரை மலர்களைக் கொண்டு வந்து பெருமானின் திருமேனியில் ஒற்றினர்.

இன்னும் என்னென்ன முயற்சிகளெல்லாமோ செய்து பார்த்து விட்டனர். விநாயகப்பெருமானின் மேனி வெப்பத்தைத் தணிக்க முடியவில்லை.

அப்போது எண்பத்தெண்ணாயிரம் முனிவர்களும் ஒன்று சேர்ந்து யோசித்தனர். கடைசி முயற்சியாக ஒரு செயலைச் செய்து பார்த்து விடுவது என்று தீர்மானித்தனர்.

பசுமையான அருகம்புல்லை முனிவர்கள் சேகரித்தனர். ஒவ்வொரு முனிவரும் தலைக்கு இருபத்தியொரு அருகுகளாக ஆய்ந்து விநாயகப்பெருமானின் மேனியின் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை சொரிந்தனர். உடனே அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில் விநாயகப்பெருமானின் உடல் வெப்பம் அகன்று விட்டது.

விநாயகப்பெருமான் மிக்க மகிழ்ச்சி கொண்டவராக எண்பத்தெண்ணாயிரம் முனிவர்களையும் நோக்கி "முனி சிரேஷ்டர்களே! அருகம்புற்களைக் கொண்டு நீங்கள் அர்ச்சனை செய்வதனால் தான் என்னுடலில் தோன்றிய வெப்பம் தணிந்து விட்டது. ஆகவே எனக்கு செய்யப்படும் எந்த பூஜையின் போதும் முக்கியமாக அருகம் புல் ஆராதனை இடம் பெற வேண்டும். அருகம் புல் இல்லாமல் எனக்கு செய்யப்படும் எந்தப் பூஜையும் முழுமையான பலனைத் தராது. என்னை மனதில் கொண்டு பூஜை செய்யும் போது வேறு எந்த பொருளும் இல்லாவிட்டாலும் அருகம்புல் மட்டுமே இடம் பெறுமாயின் அதுவே எனக்கு முழுத்திருப்தியை அளிக்கும். அதிக அளவில் அருகம்புல்லைச் சேகரிக்க முடியாவிட்டாலும இருபத்தொரு புற்களைக் கொண்டு அர்ச்சனை செய்தாலும் நான் திருப்தியடைந்து விடுவேன்." என அனுக்கிரகம் புரிந்தார்.

தேவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தவர்களாக அந்த இடத்திலேயே ஓர் ஆலயம் எழுப்பி அதில் பாலச்சந்திர விநாயகரைப் பிரதிஷ்டை செய்து விநாயகப்பெருமானை ஆராதித்து அவருடைய அருட்கடாட்சத்தை பெற்று திரும்பினார்கள்.

இந்த தகவலை கவுண்டின்ய முனிவர் தமது தர்மபத்தினிக்கு சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயக விரதங்கள்

ஓங்காரப் பொருளாக விளங்கி யானைமுகமும் தும்பிக்கையும், பெருவயிறும் கொண்டவர் விநாயகப்பெருமான். பிள்ளையார், கணபதி, ஆனைமுகன், ஐங்கரன் எனப் பலவாறு சிறப்பித்துக் கூறப்படும் விநாயகரை வழிபடற்குரிய விரதங்களில் சுக்கிரவார விரதம், சதுர்த்தி விரதம், விநாயக சஷ்டி விரதம் என்பன குறிப்பிடத்தக்கவை. சைவநெறியினர் நினைத்த காரியசித்தி, முயற்சித்தடை நீக்கம் என்னும் பொது நோக்கத்தை அடைய விநாயகக் கடவுளைச் சிறப்பாக வழிபட்டு விரதம் நோற்பர். இத்தகைய பலன் தரும் விநாயகவிரதங்களில் சதுர்த்தி விரதம், விநாயக சஷ்டி விரதம் என்னும் இரண்டையும் பற்றி சுருக்கமாக அறிந்து கொள்வோம்.

### *விநாயக சதுர்த்தி*

விநாயகர் ஆலயங்களில் சிறப்பாகவும் ஏனைய ஆலயங்களில் பொதுவாகவும் நிகழும் விசேட பூசை வழிபாடுகளைத் தரிசித்து அடியவர்கள் நோற்கும் விரதம் விநாயகசதுர்த்தியாகும். மாதந்தோறும் வளர்பிறையில் வரும் சதுர்த்தி தினத்திலும், தேய்பிறையில் வரும் சதுர்த்தி தினத்திலும் விநாயகரைக் குலதெய்வமாகவோ இஷ்ட தெய்வமாகவோ போற்றும் அடியவர்கள் சதுர்த்தி விரதம் அனுட்டிப்பர். தேய்பிறையில் வரும் சதுர்த்தி "சங்கடஹர சதுர்த்தி" என்று சிறப்பித்துக் கூறப்படும். வாழ்வில் ஏற்படும் சங்கடங்களை நீக்கச் சங்கடஹர சதுர்த்தி சிறப்பாகப் பயன்தரும்.

வளர்பிறைச் சதுர்த்திகளில் ஆவணிச் சதுர்த்தி ஏனைய சதுர்த்திகளை விட மிகமிக மேலானதாகக் கருதப்படுகின்றது. முக்கியமாக மகாராஷ்டிரத்தில் மும்பையிலும் பிறநகரங்களிலும் ஆவணிச்சதுர்த்தி, வைகாசி விசாகம் (வெசாக்) போல நாடளாவிய ஒரு விழாவாகப் பக்தி பூர்வமாகக் கொண்டாடப் படுகின்றது. வனவாச காலத்தில் பஞ்சபாண்டவர்கள் சூதமுனிவரின் உபதேசத்திற்கு இணங்க அனுட்டித்த வரலாற்றுச் சிறப்புமிக்க விரதம் ஆவணிச்சதுர்த்தி ஆகும்.

***இச்சதுர்த்தி விரதத்துக்குரிய நியதிகளில்***

- நண்பகலில் உண்ணல், இரவில் பட்டினி இருத்தல்
- நாவற்பழம், விளாம்பழம், வாழைப்பழம், வெள்ளரிப்பழத்துண்டு, கரும்புத்துண்டு, அப்பம், மோதகம், கொழுக்கட்டை ஆகிய ஒவ்வொன்றிலும் இருபத்தொன்று என்னும் எண்ணிக்கையில் விசேட நிவேதனம் படைத்தல்.
- இருபத்தொரு பத்திரம், இருபத்தொரு மலர், இருபத்தொரு அருகம்புல் என்பவற்றால் நிகழும் தனித்தனி அர்ச்சனையைத் தரிசித்தல்.
- விநாயகர் அகவல், விநாயகர் கவசம், விநாயகர் துதி முதலியவற்றை பாராயணம் செய்தல், என்பன சிறப்பாக கூறத்தக்கவையாகும்.

விநாயக சஷ்டி விரதம்

கார்த்திகை மாதத் தேய்பிறைப் பிரதமை (முதலாம் நாள்) தொடக்கம் மார்கழி மாத வளர்பிறைச் சஷ்டி (ஆறாம் நாள்) வரை இருபத்தொரு தினங்கள் அனுட்டிக்கப்படுவது விநாயகசஷ்டி விரதமாகும். இதனைப் பெருங்கதை விரதம், பிள்ளையார்கதை விரதம், பிள்ளையார் நோன்பு எனப் பாமரமக்கள் கூறுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம். இத்தினங்களில் நம் நாட்டு விநாயகர் ஆலயங்களிலும் சிவநெறியினரின் பிற ஆலயங்களிலும் வரதபண்டிதரின் பிள்ளையார் கதை, விநாயகர் புராணம் என்பவற்றைப் பாராயணம் செய்யும் வழக்கம் நெடுங்காலமாக பேணப்பட்டு வருகின்றது.

இவ்விரதத்துக்குரிய நியதிகளில்

- விரதத் தொடக்கநாளில் இருபத்தொரு இழைகள் கொண்ட காப்பை ஆண்கள் வலக்கையிலும், பெண்கள் இடக்கையிலும் கட்டிக்கொள்ளல்.
- பாரணைத் தினத்தில் காலைப் பொழுதில் பவித்திரமாகக் காப்பை அவிழ்த்தல்.
- முதலிருபது தினங்களும் ஒரு பொழுது நண்பகலில் போசனம் செய்தல், இரவில் பால், பழம் உண்ணல்.
- இறுதித்தினத்தில் உபவாசம் இருத்தல்.
- தினமும் விநாயகருக்கு இளநீர், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை என்பவற்றை நிவேதனம் செய்தல்.

என்பன குறிப்பிடத்தக்கன.

இவ்விரதத்தை இருபத்தொரு வருடங்கள் அனுட்டிப்பது உத்தமம். அவ்வாறு செய்ய இயலாதவர்கள் ஏழு வருடமாவது நோற்பது சிறப்பாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா கணபதி பூஜை

மஹா கணபதி பூஜையைத் கீழ்க்கண்ட இருபத்தொரு பத்ரங்களைக் கொண்டு செய்ய வேண்டும்.

1. மாசீபத்ரம்
2. கரிசிலாங்கண்ணி(பிரங்கராஜபத்ரம்)
3. வில்வம்
4. அருகு(துர்வாயுக்மம்)
5. இலங்தை (பத்ரீ பத்ரம்)
6. ஊமத்தை (துர்தூர பத்ரம்)
7. துளசி
8. நாயுருவி (கரமஞ்சீர பத்ரம்)
9. சிறு வழுதலை (ப்ரஹதீ பத்ரம்)
10. வன்னி (சமீ பத்ரம்)
11. மந்தாரை (தேவதார பத்ரம்)
12. மருவு (மருவக பத்ரம்)
13. அரளி (கரவீர பத்ரம்)
14. சோங்கு (துரு மோறபல பத்ரம்)
15. அரச இலை (அசுவத பத்ரம்)
16. வெள்ளெருக்கு (அர்க்க பத்ரம்)
17. மருதம் (அர்ஜ்ஜீன பத்ரம்)
18. விஷ்ணுக்ராந்தம்
19. மாதுளை (டாடிமீ பத்ரம்)
20. ஜாதி மல்லி (ஜாஜி பத்மை)
21. தாழை (ஏகாக்ர பத்ரம்)

கணபதிக்கு இருபத்தொரு மோதங்களைப் படைப்பதால் அவர் நமக்களிக்கும் இருபத்தொரு பலன்களானவன:

1. தர்மம்
2. பொருள்
3. இன்பம்
4. சௌபாக்கியம்
5. கல்வி
6. பெருந்தன்மை
7. நல்வாழ்வு
8. சௌந்தர்யம்
9. வீரயலஷ்மி கடாஷம்
10. விஜயலஷ்மி கடாஷம்
11. வசீகரம்
12. கர்ப்பரஷை
13. மக்கட்பேறு
14. தீஷண்யம்
15. கீர்த்தி
16. திடஞானம்
17. அசுபங்களை அகற்றல்
18. வாக்கினால் சாதுர்யம்
19. கோபம் கொண்டவர்களைச் சாந்தப்படுத்தல்
20. பிறர் ஏவும் அபிசாரம் அடங்கி சாந்தி ஏற்படுதல்
21. எல்லாத்துயரமும் நீங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்கள்

மனிதர்கள் தம் வாழ்வை நெறிப்படுத்தி ஆன்மிகத் துறையில் முன்னேற உதவும் சாதனங்களில் விரதமும் ஒன்றாகும். உபவாசம், நோன்பு என்பன விரதத்துடன் தொடர்புடைய சொற்களாகும்.

விரதம் என்னும் சொல் உண்ணும் உணவைச் சுருக்குதல் அல்லது விடுத்தல் என்ற நியமத்தைக் குறிக்கின்றது. உபவாசம் என்னும் சொல் இறைவனின் அருகே வசித்தல் என்ற பொருளைத் தரும். மேலும் ஒரு தினம் அல்லது பல தினங்கள் உணவு வகை எதனையும் விடுத்து இறை தியானத்தில் லயிக்கும் தீவிர நியமத்தை உபவாசம் எனலாம். நோன்பு என்னும் சொல் உணவை விடுத்தல் என்னும் நியமத்தோடு பிணைந்துள்ள பொறுமை எனும் பண்பைக் குறிக்கும். இது விரதத்தின் உயர் நிலையான தவம் என்னும் அருள் செயலில் ஈடுபடும் தவசிகள், துறவிகள், முனிவர்கள் ஆகியோருக்குக் சிறப்பாக உரியனவாகும்.

விரதம் என்ற ஆன்மிக நியமத்தின் விளக்கச் சிந்தனைகளை ஒருங்கிணைத்து ஆறுமுநாவலர் கூறியது வருமாறு:

"விரதமாவது மனம் பொறி வழிப்போகாது நிற்றல் பொருட்டு, உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விதிப்படி வழிபடல்."

இங்கு பின்வரும் விடயங்கள் உள்ளடக்கியுள்ளன.

1. விரதம் என்பது ஒருவகை விசேட வழிபாடு.
2. விரதத்தை அனுட்டித்தலின் நோக்கம் மனவடக்கத்தை மேம்படுத்தல்.
3. விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் ஐம்புலன்களை அடக்கி, திரிகரண சுத்தியுடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

**விரதம் என்னும் சாதனத்தின் விதிகள்:**

உ+ம்:

1. விரதம் என்ற நியமம் ஆறு அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் அனுட்டிக்கப்பட வேண்டும்.
2. விரத நிறைவு தினத்தின் மறுநாள் பாரணம் அல்லது பாரணை என்று கூறப்படும் உணவு உண்ணும் சம்பிரதாயத்தைப் பின்பற்றும் போது விரதி, அடியார்களோடு சேர்ந்து உணவு உண்ணல் வேண்டும்.
3. விரத அனுட்டானத்தைத் தொடர இயலாமல் முதுமையில் கைவிடும் நிலை தோன்றும் போது, நியமப்பூர்த்தி தொடர்பான கிரியையை முறைப்படி செய்தபின் விரத வழக்கத்தை விட்டுவிட வேண்டும்.

## விரத வகைகள்

விரதங்களில் பல வகையுண்டு. இவற்றுள் சிவ விரதம், சக்தி விரதம், விநாயக விரதம், சுப்பிரமணிய விரதம் முதலானவை சிறப்பானவை. காலம், இடம், வாழ்க்கைக் கடமை, சிறப்பு, நோக்கம் என்னும் அடிப்படைகளில் விரதங்களை வகைப்படுத்தலாம். ஆண்டுதோறும் மேற்கொள்ளப் படும் விரதங்கள் மகா சிவராத்திரி, சாரதா நவராத்திரி, ஆவணிச் சதுர்த்தி, சதுர்த்தி, திருக்கார்த்திகை விரதம் என்பன குறிப்பிடத் தக்கன. மாதந்தோறும் அனுட்டிக்கப் படும் விரதங்களில் மாத சிவராத்திரி, சதுர்த்தி, கார்த்திகைத்தினம் என்பன உதாரணங்களாகக் கூறத்தக்கவை. வாரந்தோறும் நோற்கப்படும் விரதங்களில் சோமவார விரதம், வெள்ளிக்கிழமை விரதம் என்பன சிறப்பாகக் கூறத்தக்கவை.

பல்வேறு மாவட்டங்கள், பிரதேசங்கள் என்னும் நிலப்பிரிவுகளில் வாழும் சைவ நெறியினர் தங்கள் பகுதிகளில் உள்ள சிவாலயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாக்கள், கும்பாபிஷேகம், சங்காபிஷேகம், சிறப்புப் பூசைகள் ஆகியன நிகழும் போது விரதம் அனுட்டிப்பர். உதாரணமாகக் காரைக்காலில் காரைக்கால் அம்மையாரின் தெய்வீக நினைவாக "மாங்கனிவிழா" நடைபெறும் போது அப்பிர தேசத்தினர் விரதம் நோற்பர். ஏனைய பிரதேசங்களில் இந்த நிகழ்வு வழக்கமில்லை. அவ்வாறே, பாண்டிருப்பு, உடப்பு ஆகிய பிரதேசங்களிலுள்ள திரௌபதையம்மன் ஆலயங்களில் திருவிழா நடைபெறும் போது, அப்பகுதியைச் சேர்ந்த அடியவர்கள் விரதம் மேற்கொள்வதை மற்றொரு உதாரணமாகக் கூறலாம்.

வாழ்க்கை கடமை என்ற அடிப்படையில் நோற்கப்படும் விரதங்களில், தந்தையை இழந்தவர்களுக்கு உரிய ஆடி அமாவாசை, மஹாளய அமாவசை என்பவற்றையும், தாயை இழந்தவர்களுக்கு உரிய சித்திரா பூரணை, மாதப் பூரணைகள் என்பவற்றையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

## சக்தி விரதங்கள்

சிவத்தின் வேறாகாது விளங்கும் சக்தி அம்பிகை, அம்பாள், பராசக்தி, உலக நாயகி என்னும் பொதுப்பெயர்களினாலும் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி, போன்ற பல சிறப்புப் பெயர்களாலும் குறிப்பிடப்படல் சமயமரபு. இத்தகைய சக்திக் குரிய விரத வகைகளில் வெள்ளிக்கிழமை விரதம் (உமா சுக்கிரவிரதம்), சாவித்திரிவிரதம், சுவர்ண கௌரிவிரதம், காரடையா நோன்பு, வரலட்சுமி விரதம், நவராத்திரிவிரதம், குறிப்பிடத்தக்கன ஆகம். இவற்றில் வரலட்சுமிவிரதம், நவராத்திரி விரதம் என்னும் இரண்டையும் பற்றிச் சுருமாக அறிந்து கொள்வோம்.

### (1) வரலட்சுமி விரதம்

ஆவணி மாதப் பூரணைக்கு முந்திய வெள்ளிக்கிழமையில் வரலட்சுமி விரதம் அனுஷ்ட்டிக்கப்பட வேண்டியது ஆகும். செல்வ போகங்கள், சௌபாக்கியங்கள், புத்திரப்பேறு என்னும் பலன்களை முன்னிட்டு வரலட்சுமி தேவியை விசேடமாக வழிபட்டுப் பெண்கள் இவ்விரதத்தை நோற்பர்.

**இவ்விரதத்திற்குரிய நியதிகளில்**

- ★ விரத தினத்தில் தாமரைக் கோலத்தின் மீது பச்சரிசியால் நிரப்பப்பட்ட கும்பத்தை வைத்தல்.
- ★ மஞ்சளில் தோய்ந்த ஒன்பது நூலிழைகளை முறுக்கி எடுத்து முடிந்த ஒன்பது முடிச்சுக் காப்பைக் கும்பத்தில் வைத்துப் பூசை செய்தல்.
- ★ பூசை முடிவில் வலக்கையில் கட்டிக் கொள்ளல். (சிறப்பு மரபு)
- ★ விசேட நைவேத்தியமாக நெய்ச்சாதம் படைத்தல்.
- ★ விசேட அர்ச்சனைப் பொருட்களாக அறுகம் புல்லைப் பயன்படுத்தல்.

என்பன குறிப்பிடத்தக்கன ஆகும்.

இந்த விரதத்துக்கு உபவாசம் விதியாக இல்லை. நண்பகல் போசனம், இரவு பலகாரம் உண்ணல் இவ்விரத அனுஷ்டானத்துக்கு உரியன ஆகும். ஒன்பது வருடங்கள் தொடர்ந்து அனுஷ்டித்தல் இவ்விரதத்திற்குரிய மரபு.

### (2) நவராத்திரி விரதம்:

வசந்த காலத்தில் அனுஷ்டிக்கப்படுவது வசந்த நவராத்திரி எனவும் சரத் காவத்தில் அனுஷ்டிக்கப்படுவது சாரதா நவராத்திரி எனவும் பெயர் பெற்றுள்ளன. இவற்றில் வசந்த நவராத்திரி என்பது இலங்கையில் முன்னேச்சரத்திலும் இந்தியாவிற் சிற்சில பகுதிகளிலும் அனுஷ்டிக்கப் படுகின்றது. ஆயினும், சாரத நவராத்திரி என்னும் விரத காலம் தசரா, துர்க்கைபூசை, நவமி என்ற பெயர்களில் இந்தியாவில் இமயம் தொட்டு குமரிமுனை வரையிலுள்ள பல பிரதேசங்களிலும் இந்தியப் பண்பாடு பரவியுள்ள ஆசிய நாடுகள் பலவற்றிலும், இலங்கையிலும் சமூக, சமய விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

சாரத நவராத்திரி புரட்டாதி மாத வளர்பிறை முதல் ஒன்பது தினங்களும் நோற்கப்படும் விரதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். இவ்வொன்பது தினங்களிலே சக்தியை முதல் மூன்று தினங்களும் துர்க்கையாகவும், அடுத்த மூன்று தினங்களும் இலக்குமியாகவும், இறுதி மூன்று தினங்களும் சரஸ்வதியாகவும் வழிபடுதல் மரபு. இவ்வழிபாட்டின் மூலம் வீரம், செல்வம், கல்வி, என்னும் பேறுகள் கிடைக்கும் என்பது விரதிகளின் நம்பிக்கை.

**இவ் விரதத்துக்குரிய நியதிகளில்**

- ★ பிரதமை திதியில் கும்பம் வைத்துப் பூசையைத் தொடங்கல்.
- ★ வீடுகளில் கொலு வைத்தல்.
- ★ ஸ்ரீசக்கர மகாயந்திர பூசை செய்தல்.
- ★ சண்டி ஹோமம் வளர்த்தல்.
- ★ தேவி மகாத்மியம், லலிதா சக்ஸ்ரநாமம், அபிராமி அந்தாதி, சகலகலாவல்லி மாலை போன்ற சக்தி நூல்களைப் பாராயணம் செய்தலும் கூட்டுப் பிரார்த்தனை செய்தலும்

என்பன குறிப்பிடத்தக்கன.

நவராத்திரியின் ஒன்பதாம் நாள் ஆகிய மாக நவமியை கலை விழாவாகவும், வீர விளையாட்டு விழாவாகவும் பரவலாகக் கொண்டாடுதல் விஜய நகரப் பேரரசு நிலவியகால வழக்கம் ஆகும்.

மகா நவமிக்கு அடுத்ததினம் விஜயதசமி எனப்படும். அன்று ஏடு தொடங்கல், புதிதாகக் கலைப்பயிற்சியைத் தொடங்குதல் என்னும் நிகழ்வுகள் பக்தி பூர்வமாக நிறைவேற்றப்படும். ஆலயங்களில் அன்று மகிஷாசுர சங்காரம் ஒரு விசேட அம்சமாக நிகழும்.

நவராத்திரி விரதத்தை அனுட்டிப்போர், முதல் எட்டு தினங்களிலும் பகலில் உண்ணாமல் இரவில் பூசை முடிந்ததும் பால், பழம், பலாகாரம் உண்ணலும் ஒன்பதாம் நாள் உபவாசம் இருத்தலும் தசமியன்று காலையில் பாரணை செய்தலும் இவ்விரதத்தை ஒன்பது வருடங்கள் நோற்றலும் மரபு. இக்காலத்தில் பாடசாலைகளிலும், பிற நிலையங்களிலும் நவராத்திரி பெரு விழாவாகக் கொண்டாடப்படுதல் குறிப்பிடத் தக்கது.

நவராத்திரி காலத்தில் பாராயணம் செய்யத்தக்க பாடல்கள் சில கீழே தரப்படுகின்றன.

1. **மணியே மணியினொளியே ஒளிரும் மணிபுனைந்த அணியே அணியும் அணிக் கழகே அணு காதவர்க்குப் பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்த பின்னே.**

(அபிராமி அந்தாதி 24)

2. **புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்கு வளைக் கண்ணியும் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால் நண்ணி இங் கேவந்து தம்மடி யார்கள் நடுவிருக்கப் பண்ணி நம்சென்னியின் மேற்பத்மபாதம் பதித்திடவே.**

(அபிராமியந்தாதி 41)

## கந்த விரதங்கள்

சிவநாயகரின் திருக்குமார்களில் இளையவர் கந்தப் பெருமான். அசுரர் கொடுமை களிலிருந்து தேவர்களைக் காக்கச் சிவபிரானின் அருளம்சமாகத் தோன்றிய கந்தப் பெருமானுக்குக் கார்த்திகேயன், சரவணபவன், ஆறுமுகன், முருகன், குமரன், என்னும் பல்வேறு சிறப்பு பெயர்கள் உள்ளன.

கந்தப் பெருமானுக்குக் சிறப்பாக வழிபடுவதற்குரிய விரத வகைகளில் வார விரதமாகிய சுக்கிரவார விரதம், மாத விரதமான கார்த்திகை விரதம், ஆண்டு விரதங்களான திருக்கார்த்திகை விரதம், கந்தசஷ்டி என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றில் ஆண்டுதோறும் அனுட்டிக்கப்படும் திருக்கார்த்திகை விரதம், கந்தசஷ்டிவிரதம் என்னும் இரண்டையும் பற்றிச் சுருக்கமாக அறிந்து கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (1) திருக்கார்த்திகை விரதம்



கார்த்திகை மாதம் வரும் கார்த்திகை நட்சத்திர தினத்தில் அனுட்டிக்கப் படுவது திருக்கார்த்திகை விரதம். இது மற்றைய மாதங்களில் வரும் கார்த்திகை நட்சத்திர தினத்தில் நோற்கப்படும் கார்த்திகை விரதத்தை விட மேலான மகிமை உடையது. இக்காரணத்தினால் இவ்விரதம் "திரு" என்னும் அடைமொழி சேர்த்து திருக் கார்த்திகை விரதம் எனப்படும்.

**திருக்கார்த்திகை விரத நியதிகளில்,**

- கார்த்திகை நட்சத்திரத்திற்கு முந்திய தினத்தில், (பரணித் தினத்தில்) ஒருவேளை உணவு உண்ணல்.

- திருக்கார்த்திகையில் உபவாசம் இருத்தல்.

- கார்த்திகை நட்சத்திரத்தின் மறு நாளான ரோகிணி தினத்தில் பாரணை செய்தல்.

- ஆலயத்தில் தினை மா, தேன், சர்க்கரை, வாழைப்பழம் என்பவ ற்றை ஒருங்கே பிசைந்து ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, என ஒற்றை இலக்கத் தொகையில் அகல் விளக்கு வடிவில் மா விளக்குச் செய்து, நெய்விட்டு திரி இட்டு தீபம் ஏற்றுதல். (இது மாவிளக்கு எனப் படும்)

- வீடுகளில் கோலங்கள் அமைத்து அவற்றின் மீது அகல்விளக்கு ஏற்றுதலும் தேங்காய்ப்பாதிகளை வாழைக்குற்றிகளில் வைத்து எண்ணெய் விட்டு, திரியிட்டு நீண்ட நேரம் எரியச் செய்தல்.

என்பன சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன ஆகும்.

திருக்கார்த்திகைத் திருநாள் குமாராலய தீபத் திருநாள் எனப்படும். மறுநாள் ஆகிய பூரணைத்தினம் வீடுகளிலும் அனைத்து ஆலயங்களிலும் தீபமேற்றிச் சிறப்பாக வழிப்பாடு செய்யும் சர்வாலய தீபத் திருநாள் ஆகும். இதனை விளக்கீடு என்று கூறுதல் மக்கள் வழக்கம்.

மூன்று தினங்களில் நிகழும் சமயச் செயற்பாடுகளை உள்ளடக்கிய திருக் கார்த்திகை விரதம் திருவண்ணா மலையில் ஒரு மாபெரும் சமூக விழாவாகப் கொண்டாடப்படுகிறது. அம்மலைப் பிரதேச ஆதிவாசிகள் திருகார்த்திகை விளக்கீட்டு விழாவைத் தலைமுறை தலைமுறையாகத் தங்கள் குலவழிபாட்டுக் கடமையாக நிறைவேற்றி வருகின்றார்கள். பரணித் தினத்தில் முன்னேற்படுகள் செய்து, மலையடிவரத்தில் பரணித்தீபம் ஏற்றும் வழக்கமும் கார்த்திகை தினத்தில் ஒருவாரம் காலம் தொடர்ந்து எரியக்கூடிய வகையில் மாபெரும் கொப்பறைகளில் எண்ணெய் நிரப்பி துணிகளைக் கட்டு கட்டாக இட்டு தீபம் ஏற்றுதல் ஒரு சமூக சம்பிரதாயமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இத்திருவண்ணாமலைத் தீபத்தை தரிசித்து இலட்சோப லட்சம் மக்கள் ஆரவாரம் செய்யும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கும் திருக்கார்த்திகை தனிச் சிறப்பு ஆகும். இம் மலை உச்சியில் தீபம் ஒளி வீச தொடங்கும் வேளைகளில் மலையடி வாரத்தில் சொக்கப்பனை (உலர்ந்த தென்னை பனைத் தண்டுகளால் ஆன) என்னும் சொக்கப்பானை சுவாலித்து எரியும் காட்சி கண்ணுக்கு இனிய பரவச காட்சியாகும்.

புற இருள்களைந்து ஒளிபரப்பும் கார்த்திகை விளக்கீடு அகவிருள் போக்கி ஞானச்சுடர் பரப்பும் தத்துவப் பொருளைக் குறிக்கி ன்றது.

திருக்கார்த்திகையின் பெருமையைக் கூறும் பின்வரும் பாடல்கள் சிறப்பாக ஓதத்தக்கன ஆகும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வனைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்

துளக்கில் கபாலீச் சரத்தான் தொல்கார்த் திகை நாள்

தளத்தேந் தினமுலையார் தையலார் கொண்டாடும்

விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.

(சம்பந்தர் தேவாரம்)

2. நிலைதரும் கார்த்திகைத் தினைத்து நெல்லியின்

இலைகொடு குகனடிக் கிறைத்த ளோரெலாஞ்

சொலுமிலைக் கொருமகந் தொடர்பி னாற்றிய

பலனடை வாரெனப் பருக நான்மறை.

(திருச்செந்தூர்ப்புராணம்:11.36)

## (2) கந்தசஷ்டி விரதம்



ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையை அடுத்து அதாவது வளர்பிறையில் பிரதமை தொடக்கம் சஷ்டி வரையுள்ள ஆறு தினங்களும் முருகப்பெருமானை விசேடமாக வழிப்பட்டு நோற்கும் விரதம் கந்தசஷ்டி விரதம் ஆகும். செல்வங்கள், சுகபோகங்கள், நற்புத்திரப் பேறு என்ப வற்றை முன்னிட்டு, முருகனைக் குலதெய்வமாகவோ இஷ்டதெய்வமாகவோ வழிப்படுவோரும் பிறரும் இந்த விரதத்தை அனுட்டிப்பர். தீவிர முருக பக்தர்கள் இவ்விரதத்தை ஒரு கடுந்தவமாகக் கருதி, ஆறு தினங்களும் உபவாசம் இருத்தல் வழக்கம். இவ்வுத்தம முறைமையை அனுசரிக்க இயலாதவர் ஐந்து தினங்கள் ஒருவேளை உண்ணுதலும் ஆறாம் நாள் உபவாசம் இருத்தலும் நடைமுறையாக உள்ளது.

### இவ்விரத நியதிகளில்,

- அமாவாசைத் தினத்தில் ஒரு வேளை உணவு உண்ணல்.
- தொடக்க தினத்தில் ஆலயத்தில் தர்ப்பையணிந்து "காப்புக்கட்டல்" அதாவது சங்கற்பம் செய்தல்.
- ஆறு தினங்களும் முருகன் ஆலயத்தில் இறை வழிபாடு, புராணப்படலம் போன்ற புனிதச் செயல்களில் ஈடுபடல்.
- இறுதி நாளில் காப்பை அவிழ்த்து, தட்சணையுடன் அர்ச்சகரிடம் சமாப்பித்தல்.
- ஏழாம் நாள் அதிகாலை நீராடி அனுஷ்டானங்களை நிறைவேற்றி, பாரணைப் பூசை முடிந்ததும் மாகேசுவர பூசை செய்து விரத த்தைப் பூர்த்தி செய்தல்.

என்பன முக்கியமாகக் குற்ப்பிடத்தக்கன.

கந்தசஷ்டி என்பது முருகப்பெருமான் சூரசங்காரம் செய்து தேவர்கைளைக் காத்த அருட் செயலைக் குறிக்கும். இவ்விரதத்தின் ஆறாம் நாள் முருகன் ஆலயங்களில் "சூரன்போர்" என்னும் சமய நிகழ்வு நாடக பாணியில் நடைபெறுதல் வழக்கம். மனிதர்களின் உட்பகையாக உள்ள காமம், வெகுளி, ஈயாமை (உலோபம்), மயக்கம், செருக்கு, பொறாமை ஆகிய அசுரப் பண்புகளை அழித்து, அவர்கள் தெய்வீக நிலையில் பெருவாழ்வு வாழ அருள் பாலிக்கும் இறைவன் ஆற்றலின் பெருமை கந்தசஷ்டி உணர்த்தும் மெய்ப் பொருளாகும்.

கந்தசஷ்டி விரதத்தின் மகிமையையும், பயனையும் கூறும் பின்வரும் பாடல் படிப்பதற்கு ஏற்றது.

ஆரண முனிவர் வானோர் அங்கதன் மற்றை வைகல்

சீரணி முரகவேட்குச் சிறப்பொடு பூசை ஆற்றிப்

பாரணம் வீதியிற் செய்தார் பயிற்றும் இவ்விரதம் தன்னால்

தாரணி அவுணர் கொண்ட தம்பதற் தலைமை பெற்றார்.

(கந்தபுராணம் - கந்தவிரதப்படலம்-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ நாற்பாதங்கள்

இவ்வழிகளிலே ஒழுகி உய்தி பெற்ற பெரியார் சரிதைகளைக் கூறி, எமக்கு நல்வழி காட்டுவதே பெரியபுராணம். இவற்றில் நின்று ஒழுகும் முறை எது என்பதையும் நியதி நியமங்களையும் சாத்திரங்கள் கூறுகின்றன.

அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் மக்கள் பெற வேண்டிய உறுதிப்பொருள் நான்காகும். இவை தர்மம், அதர்மம், காமம், மோட்சம் எனவும் கூறப்படும். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என வள்ளுவர் மூன்றாக வகுத்தார். அறத்துப்பாலுக்கே தலைமை தந்தார். அதனுள் வீடும் அடங்கக் காட்டினார். அறம் எனப்பட்டதை இல்லறம், துறவறம் என இரண்டாக்கினார். அன்பு இல்லறத்தின் உயிர் நிலை. அது வளர்ந்து முதிர்ந்து அருளாகிறது. இதுவே, இறுதியான வீட்டின்பத்தின் வேர், இந்தப் படிமுறையிலே மனிதவாழ்வு மலர்ந்து கனிவதாகும்.

பிறவித் துன்பத்தை அறிந்து, பிறவாமையாகிய பேரின்ப நாட்டம் கொண்டவர். அனுசரிக்க வேண்டிய படிமுறையான வழியே சைவ சமயத்தின் சரியை, கிரியை, ஞானம், யோகம் எனப்படும். நாற்பதங்கள். இவை தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் என்பவையாகும். இவை ஒவ்வொன்றும் சரியையில் சரியை, சரியையணியில் கிரியை... ஞானத்தில் ஞானம் என நான்காக வகைப்படுத்திய பதினொரு படிகளாக விரிவடையும். மேலும், இவை ஒவ்வொன்றும் உபாய மார்க்கம், உண்மை மார்க்கம் என இவ்விரண்டாக நோற்க, முப்பத்திரெண்டாகக் கொள்ளப்படும்.

உபயமார்க்கம் என்பது, எம்மைப் போல உலகவாழ்வில் நின்ற படி இறைவனைவேண்டி ஏதாவது ஒருவழிமுறையை பின்பற்றி ஒழுகுதல். உண்மை மார்க்கம் என்பது உலகப்பற்றை மெல்ல மெல்ல விட்டவர்கள் அம்மார்க்க ங்களிலே தமக்கு ஏற்ற ஒரு வழியை பின்பற்றி இறைவன் அருளையே நாடி நின்று, வேறு பயன் கருதாது ஒழுகுவதாகும்.

மலை உச்சியை அடைய விரும்புவோன் கீழ் நிலையிலுள்ள அடிவாரத்தை அடைந்து படிப்படியாக ஏறிச்செல்ல வேண்டும். அப்போதும் அபாயம் அற்ற நல்வழியிலே நம்மை அழைத்துச்செல்ல பயிற்சி பெற்ற வழிகாட்டிகளும் அவ்வப்போது உதவ வரவேண்டும். அல்லாவிடில், இலக்கைய டைவதரிது: வழிதவறிப்போக நேரும்.

## (அ) சரியை

எவரும் செய்யக்கூடிய ஆரம்ப முயற்சி இது என்பர். எதற்கும் தூய தெய்வ பக்தியும் இறையச்சமும் துணை நிற்க வேண்டும். அவை நம்மை வழிபிழையாது நடத்தும். முன்னோர் காட்டிய வழி நிற்போர் உரையையும் கருத்திற் கொள்வது அவசியம். அன்பின் துணையோடு உடம்பினாற் செய்யும் இறைபணி எல்லாம் சரியை எனப்படும். அவற்றிலே சில, சிவாலயத்தை அழகிடல், மெழுகுதல், கழுவுதல், பூஞ்சோலையமைத்தல், பூவெடுத்து கொடுத்தல், மாலை கட்டுதல், பூசைத் திரவியம் கொடுத்தல், உபகரணங்களை துலக்கிச்சுத்தம் செய்தல், விளக்கிடல், தீவர்த்தி, குடை, கொடி, வாகனம் ஏந்துதல் முதலியனவாக எண்ணில்லாதன. இவற்றை செய்பவருக்கு வேண்டிய உபகரணம் கொடுத்தல், அவரை சிவனடியாராக வழிபடல், அடியாருக்கு வேண்டுவன தருதல், அன்னதானம் முதலியன செய்தல் என்பன.

இத்தொண்டுகளைச் செய்தவரும் வற்புறுத்தியவரும் திருநாவுக்கரசு நாயனார், அப்பூதியடிகள், கண்ணப்பநாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், திருநாளைப்போவார் நாயனார் எனப் பலர், இவர்கள், தேவாரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகம் முதலிய அருட் பாடல்களிலே போற்றப்பெற்றவர்கள். முத்தியடைந்தவர்கள், இவர்களே அன்றி இன்னும் பலர் இத்தொண்டுகளில் நின்று ஏற்றம் பெறுகின்றனர்.

## (ஆ) கிரியை

கிரியை என்பது மந்திர தந்திரங்களைக் குருமூலமாக அறிந்து, சமயம், விசேடம் நிருவாணம், ஆச்சாரிய அபிஷேகம் எனும் தீட்சைகளைப் பெற்றவர்கள் மேற்கொள்ளும் வழிபாட்டு முறை, விநாயகர், அம்பிகை, சுப்பிரமணியர், வைரவர் முதலிய உருவர் திருமேனிகளுக்குப் பூசை புரிவர். இதில் தம்பொருட்டுத் தம்மளவிலே வழிபடுவது ஆன்மார்த்த பூசை, பிறர் பொருட்டாகவும் ஆலயங்களிலே பூசை புரிவது பரார்த்தபூசை எனப்படும்.

தீட்சை பெற்றவர் சிவலிங்கம் வரை எல்லா மூர்த்திகளுக்கும் ஆன்மார்த்தபூசை புரியலாம். சிவாலயங்களிலே செய்யப்படும் பரார்த்த பூசை, விழா, கும்பாபிஷேகம் முதலியவற்றை ஆச்சாரிய தீட்சை பெற்றவர் மாத்திரமே செய்தற்குரியர்.

கிரியை வழிப்பாட்டில் நின்றோர் சண்டேசுவரர் முதலானோர், திருஞானசம்பந்தர் ஞானத்திற் கிரியாமார்க்கத்தில் நின்றவர்.

## (இ) யோகம்

முன்னைய இரண்டினும் உயர்ந்த நிலை இது. இதற்கு இமயம், நியமம், ஆசனம் பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, எனும் எட்டுறுப்புக்கள் உண்டு. யோகநிலை பயின்றவர்களிடம் இந்த எண் வகை உறுப்பிலும் பயிற்சி பெற்றுப் படிப்படியாகத் தோன்றியவரே, அதனை அனுசரிக்க முடியும். அட்டாங்க யோகம் எனும் இதனை யோகியரிடம் பயின்ற திடசித்த முடையவர்களே அனுட்டித்து மேலேற முடியும். நாம் கற்கும் கேட்கும் பெறும் அறிவு போதாது. கலாநிதி பட்டம் பெறுவோர், நல்லாசிரியரின் துணையோடு ஆய்வுகள் செய்து சாதனை படைப்பது போன்றது. யோகியர், திருமூலர், பெருமிழலைக் கும்பர், சேரமான்பெருமாள், சுந்தரர், முதலானோர் யோக பாதத்தில் நின்றோர் ஆவர்.

## (ஈ) ஞானம்

இது சொல்லிறந்தது என்பர். வீடு என்பதும் அத்தன்மையதே. அதனால் இவற்றின் இயல்பை இப்படி என எடுத்துச் சொல்வார். முன் கூறிய படிமுறைகளிலே நின்றொழுகிப் பக்குவம் பெற்றவர்க்கு இறைவனை குரு வடிவாக வந்து, தீட்சை உபதேசம் செய்து ஞானியராக்குவர் மாணிக்கவாசகர், மெய் கண்டார் இவர்களுக்கு குரு உபதேசம் கிடைத் தமை இவ்வாறேயாகும். அருணகிரிநாதர் முதலியோருக்கு முருகனே குருவாய் உபதேசம் செய்தார். இவ்வாறு ஞானிகள், சித்தர்கள் என உலகில் வாழ்ந்த பெரியார் கதைகளும் அற்புதங்களும் கூறப்படுகின்றன.

இதனை உலகிலும் பிற உயிர்கள் படும் துன்பத்துக்கு இரங்கித் துயர் துடைக்க முன்வரும் உத்தமர் செயல்களிலும் காண்கின்றோம். இவர்கள் செயல்கள் பற்றுடன் கூடியவை. பற்றற்ற மெய்யுணர்ந்தோரும் இவ்வுலகில் வாழ்கின்றமையால் வாசனாமலம் தொடரும் பாங்கினால் அருள்சுரந்து இரங்குவர். இவர் செயல் பற்றற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபரம்பொருள்

சைவமக்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுகின்றனர். சிவம் பரம்பொருள், மெய்ப்பொருள், இறை என்றெல்லாம் குறிப்பிடப்படுகிறது. சிவம் பசுபதி எனவும் கூறப்படும். பசு என்றால் ஆன்மா, பதி என்றால் தலைவன், ஆன்மாக்கள் அனைத்திற்கும் தலைவர் என்பதே பசுபதி என்பதன் பொருளாகும். பரம் பொருள், மெயப் பொருள், அது தோன்றுவதும் இல்லை: அழிவதும் இல்லை:

"சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை

அவனொடு ஒப்பார் இங்கு யாரும் இல்லை" எனும் திருமந்திரப் பாடலடிகள் சிவத்தின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றன.

பரம் ஒன்றே முழுமைத்துவமானது. அதனால் அதற்கு ஈடானது, மேலானது என்று மற்றொன்றும் இல்லை.

"தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத் தலைமகன்" எனத் திருமந்திரம் மொழி கின்றது.

பரம்பொருள், மெய்பொருள் எனக்கூறப் படுகின்ற இறைவன், ஒருவனே எனச் சைவசமயம் குறிப்பிடுகின்றது.

"ஒன்றவன் தானே" என்றும்
"ஒருவனே தேவன்" என்றும் திருமந்திரமும்
"ஏகம் சத் விப்ரா வஹுதா வதந்தி"

என்று தேவவாக்கியமும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

சிவம் திருவருட் சக்தியோடு இணைந்தே உள்ளது. "சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்...." எனத் திருவருட்பயன் கூறுகின்றது. இந்த மண். விண் மற்றும் இடங்களிலும் பரம்பொருளாகிய சிவம் நிறைந்தும், செறிந்தும் நிற்கின்றது. இதனை,

"எல்லா உலகமும் ஆனாய் நீயே"

என்று அப்பர் சுவாமிகள் கூறுகின்றார்.

சிவம் என்பது அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்று நிலைகளிலும் உள்ளது. பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், சதாசிவன், மகேஸ்வரன் ஆகிய மூர்த்திகளின் மூலம் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செயற்படுத்துவது பரம் பொருளே ஆகும்.

**"அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ**
**அன்புடைய மாமனும் மாமியும் நீ**
**ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ**
**ஒரு குலமும் சுற்றமும் ஓர் ஊரும் நீ**
**துய்ப்பனவும் உய்ப்பனவும் தோன்றுவாய் நீ**
**துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ**
**இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ**
**இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே"**

தமக்குத் தந்தை, தாய், துணை சுற்றம் மற்றெல்லாப்பொருளும் சிவபெருமான் ஒருவரே என்றார் அப்பரடிகள்.

இவ்வுலகில் வாழுகின்ற மனிதர்கள் அனைவரும் ஒரே இறைவனின் பிள்ளைகள், இவ் உண்மையை அறிந்து தெளிந்து கொண்டால் இவ்வுலகில் சமத்துவம், சகோதரத்துவம், சமரசம், ஆன்மீக ஒருமைப்பாடு, சாந்தி, சமாதானம், என்பன ஓங்கி வளரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் உயிர்களை உய்விக்கும் பொருட்டு கொண்டருளும் அருட்கோலங்கள் மூர்த்தம் எனப்படும். இம்மூர்த்தங்கள் திருக்கோயில்களில் மூர்த்திகளாக வழிபடப்படுகின்றன. சிவமூர்த்தங்கள் அறுபத்துநான்கு ஆகும். அவற்றுள் சந்திரசேகரர் முதல் இலிங்கோற்பவர் வரை இருபத்தைந்து சிவமூர்த்தங்கள் சிறப்பாக கொள்ளப்படுகின்றன.

அத்தகைய சிவமூர்த்தங்கள் நடராஜர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர் ஆகியவற்றின் சிறப்புக்கள் மிக விசேடமானது.



# சிவ முகூர்த்தங்கள்

## நடராஜர்

கோயில் என்றால் சிறப்பாகச் சிதம்பரம் கோயிலைக் குறிக்கும். அங்கு நடராஜப்பெருமான் திருநடனஞ் செய்யும் காட்சியைக் காணலாம். அந்த நடனத் திருக்கோலம் " நடராஜ மூர்த்தம்" எனப்படும். இம் மூர்த்தங்கள் சிவாகமங்கள் விளக்கிக் கூறும் தத்துவங்களை எல்லாம் தனது திருமேனியில் கொண்டுள்ள அற்புதத் திருவுருவமாகும்.

நடராஜப்பெருமான் ஆடும் ஆனந்தக்கூத்து பஞ்சகிருத்தியத் திருநடனம் என்று கூறப்படும். இவ் ஆனந்தத்தாண்டவ மூர்த்தத்தில் பிரணவத்துடன் கூடிய திருவைந்தெழுத்தின் தத்துவம் அடங்கியுள்ளது. இதன் தத்துவத்தை விளக்குவோர், நமசிவாய என்னும் பஞ்சாட்சர மந்திரத்தையும் ஐந்தொழில்களையும் இணைத்து விளக்கம் தருவர்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமின் சிரிப்பும்...." என்று தொடங்கும் அப்பர் சுவாமிகளின் தேவாரப்பாடல் நடராஜப்பெருமானின் திருவடிவத்தை நன்கு விளக்குகின்றது.

## தட்சிணாமூர்த்தி

சிவபெருமான் தாயும் தந்தையும் ஆனதுடன் குருவாகவும் திகழ்கிறார். சச்சிதானந்த மாகிய சிவபெருமானே ஞானவடிவினராய் நின்று, அறிவு பரப்பிய முதற் பரமாசாரியாரும் ஆவார்.

முன்னொரு காலத்திலே சிவபெருமான் திருக்கைலாய மலையிலே கல்லால மரநிழலிலே தெற்கு நோக்கியவாறு அமர்ந்திருந்தார். அப்போது சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் ஆகிய முனிவர்கள் அங்கு வந்து, அவரை வணங்கி "சுவாமி மேலான மறைகளைப் பலமுறை கற்றோம். எனினும், எங்கள் அறிவு பலவாறாக மயங்கி நிற்கின்றது. தேவரீர் ஒருவரே எங்கள் மயக்கத்தினை நீக்கியருளக் கூடியவர். அதனாலேயே தங்களிடம் வந்தோம்" என்று அவர்கள் பணிந்து நின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் முனிவர்களிடத்திலே பேரிரக்கம் கொண்டார். முனிவர்களைப் பார்த்து அன்பர்களே, உங்களுக்கு மெய்யறிவு உண்டாகும் வண்ணம் ஆகமப்பொருளை விளங்க வைப்போம் என கூறி சரியை, கிரியை, யோகம் எனும் மூன்றையும் உரைத்தருளினார். அப்போது ஞானத்தையும் உரைத்தருளவேண்டும் என்று முனிவர்கள் வேண்டி நின்றனர். "ஞானம் நாவினாலே நவிலற்பாலதன்று" என்று இறைவன் கூறி, வலக்கையைச் சின்முத்திரையாகப் பிடித்து மார்பிலே சேர்த்து ஒரு கணம் யோக சமாதியில் அமர்ந்தார்.

சிவபெருமான் சின்முத்திரையால் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் இயல்புகளையும், பசு பாசத்தில் இருந்து நீங்கிப் பதியை அடைதலையும், முக்தியின் இயல்புகளையும் உணர்த்தி அம்முனிவர்களுக்கு அருள் புரிந்தார். அவர் யோகியாய் எழுந்தருளிய நிலையே தட்சிணாமூர்த்தம் ஆகும். இங்கு தெற்கு திசைநோக்கி இருந்தமையினால் சிவபெருமான் தட்சிணாமூர்த்தி என்றும் தென்முக கடவுள் என்றும் திருப் பெயர்களை பெறுகின்றார். திருஞான சம்பந்தர் பெருமான் " பாண்டு நால்வருக்கற முரைத்தருளி...." என்று தொடங்கும் திருக்கேதீச்சரப் பதிகத்தில் தட்சிணா மூர்த்தம் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

தட்சிணாமூர்த்தி முக்கண்ணும் நான்கு தோள்களும் உடைய சிவமூர்த்தம் ஆகும். இவரது வலக்கரம் சின்முத்திரையைக் காட்டிக்கொண்டு விளங்கும். இடக்கரம் வரதம் அல்லது தண்டம் ஆகிய குறிப்பினை உணர்த்தும். மற்றொரு வலக்கரம் உத்திராக்கமாலையையும் இன்னோர் இடக்கரம் பாம்பையும் தரித்து இருக்கும். இம்மூர்த்தம் சடாபாரம், சடாபந்தம், சடாமண்டலம், சடாமகுடம் ஆகியவற்றில் யாதாயினும் ஒன்றைக் கொண்டிருக்கும் இதில் கங்கையும், மதியும், கபாலமும் கொன்றையும் காணப்படும். திருமுகம் சாய்ந்த நிலையிலும் திருநயனம் தியான யோக பாவனையில் மூக்குநுனியை நோக்கிய நிலையிலும் திருமேனி பளிங்கு போன்று விளங்கும்.

## இலிங்கோற்பவர்

இலிங்கோற்பவர் என்னும் சொல் இலிங்கத்தினுள் இடம்பெறும் தோற்றம் என்று பொருள்படும். சிவதலங்களில் கருவறையில் மேற்குதிசைச் சுவரின் புறத்தேயுள்ள கோட்டத்தில் மேற்கு நோக்கியவாறு இம்மூர்த்தம் பிரதிட்டை செய்யப்பட்டு இருப்பதை காணலாம். மூலஸ்தனத்திலுள்ள மூல லிங்கத்தின் அளவையும் பிரமாணத்தையும் அடிப் படையாகக் கொண்டே இலிங்கோற்பவ மூர்த்தியின் அளவுப் பிரமாணம் அமைய வேண்டும் என்று ஆகமங்கள் குறிப்பிடும்.

இலிங்கோற்பவ மூர்த்தம் மிகமுக்கியமானதொன்றாகும். எல்லாச் சிவாலயங்களிலும் இத்திருவுருவம் அமைக்கப்பட்டிருப்பதை காணலாம். முதலில் லிங்கத்தை உருவாக்கி அதை நான்கு பகுதிகளாக பிரித்து மேலே ஒரு பகுதியையும் நடுவிலுள்ள இரு பகுதி களையும் எடுத்து கொள்வர். லிங்கத்தின் முன் பக்கத்தில் இவ்விருபகுதிகளும் உள்ளடங்கக் கூடியவாறு அண்ட வடிவினதாக வகுத்துக் கொள்வார்கள். லிங்கத்தின் மேற் பகுதியையும் கீழ் பகுதியையும் பிறைபோன்று வளைந் திருக்கச் செய்வார்கள். இதன் நடுவே சிவன் திருவுருவத்தையும் அதன் நான்கு திருக்கரங்களையும் அமைப்பர். நெற்றியி லிருந்து முழந்தாள் வரையுள்ள பகுதி மட்டும் வெளியில் தெரியும் படி வகுக்கப்படும். இக்கரங்களில் மானும், மழுவும் இடம் பெறும். மற்றும் இருகரங்களும் அபய, வரத நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்படும். குண்டலம், ஆரம், கேயூரம், முத்து ஆகிய அணிகலங்களையும் திருவடியில் அமைப்பார்கள். அதன் வலப்பக்கத்தின் மேலே பறக்கும் நிலையில் அன்னத்தையும் இடபக்கத்தின் கீழ்நிலத்துள் உருவத்தை சாய்த்த பாவனையில் பன்றியையும் சித்தரிப்பார்கள். அனைத்துக்கும் மேல் "தழை மடல்" விழுதல் போல் அமைத்தலும் உண்டு. இத்திருவுருவ அமைப்பைக் குறித்த செய்திகள் ஆகமம், சிற்பநூல்கள், சிவராத்திரி புராணம், இலிங்கபுராணம், கந்தபுராணம், அருணாசல புராணம் ஆகிய நூல்களில் கூறப்பட்டடுள்ளது.

படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மா உலகத்தின் கர்த்தா தானே என்று செருக்குற்றார். திருமாலிடம் சென்று தன்னை விட உயர்ந்த தெய்வம் வேறு இல்லை என்று தர்க்கித்தார். திருமால் அதனை ஏற்காது "தானே பெரியவன்" என்று மறுத்துக் கூற, இருவருக்குமிடையில் வாதப்பிரதி வாதங்கள் நடைபெற்றன. முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் அவர்கள் இருவருக்குமிடையே சோதிப் பிழம்பாகத் தோன்றினார். அப்போது " இச்சோதியின் அடியையோ, முடியையோ யார் முதலில் தேடிக் கண்டு கொள்கிறாரோ அவரே பெரியார்" ஓர் அசரரீ கேட்டது.

பிரம்மா "யான் முடியைக் காண்பேன்" என்றும் திருமால் "யான் அடியைக் காண்பேன்" என்றும் முடிவு செய்து கொண்டனர். பிரம்மா அன்னத்தின் வடிவம் கொண்டு வானில் பறந்து சென்றார். திருமால் பன்றி வடிவெடுத்து நிலத்தை அகழ்ந்து சென்றார். திருமால் பலகாலம் முயன்றும் அடியைக் காணாது திகைத்தார். இளைத்துப் பின் நல்லுணர்வு பெற்றுச் சிவபெருமானே இவ்வாறு தோன்றினார் என்று உணர்ந்து கொண்டார். வெளியே வந்து சிவபெருமானிடம் தம் பிழையைப் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டி நின்றார். வானிலே பறந்து சென்ற பிரம்மாவும் அவ்வாறே இளைத்துச் சோதியின் முடிவைக் காணாது மீண்டும் நிலத்திடை வந்து, சிவபெருமானை வணங்கி நின்றார். இருவரது கர்வமும் அடங்கிற்று. அவ்வேளை சோதிப்பிழம்பு தனித்து அவ்விடத்தில் இலிங்கவடிவம் தோன்றியது. இவ்வாறு இலிகோற்பவம் நிகழ்ந்த காலம் "சிவராத்திரி' என்று கந்தபுராணம் கூறுகிறது. மாசி மாதத்தில் கிருஷ்ணபட்ச சதுர்த்தித் திதியின் அர்த்தராத்திரியே இலிங்கோற்பவ காலம் எனப்படும்.

இக்கதையின் மூலம், சிவபெருமானே முழு முதற் கடவுள் என்பதும், அகந்தை கொண்டவர்களால் அவரை அடைய முடியாது என்பதும் உணர்த்தப்படுகின்றன.

**"செங்கணானும் பிரமனுந் தம்முள்ளே**

**எங்குந் தேடியுந் திரிந்தவர் காண்கிலார்**

**இங்குற் றேனென்று இலிங்கத்தே தோன்றினான்**

**பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே."**

திருநாவுக்கரசு நாயனார் பாடிய இந்த தேவாரத்தில் பிரம்மா, விஷ்ணு அடிமுடி தேடிய போது "இலிங்கோற்பவம்' நிகழ்ந்தது என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ விரதங்கள்



சிவபெருமானை மெய்யன்போடு விசேடமாக வழிபடுவதற்குரிய விரத தினங்களில்

**(1) மகா சிவராத்திரி**

**(2) மார்கழி திருவாதிரை**

**(3) பிரதோஷம்**

என்பன தனித்துக் குறிப்பிடத் தக்கவை ஆகும். இவற்றில் முதலிரு தினங்களும் ஆண்டுதோறும் முறையே மாசி மாதத்திலும் மார்கழி மாதத்திலும் வரும் விரத நாட்கள் ஆகும். மூன்றாவதாகிய பிரதேஷம் என்பது ஓர் ஆண்டு பூராகவும் பதினைந்து தினங்களுக்கு ஒரு முறை வருவது.

## (1) மகா சிவராத்திரி

மகா சிவராத்திரி என்ற தொடர்மொழி ஷபெருமை மிக்க சிவனுக்கு உரிய இரவு' எனப்பொருள்படும். இது ஆண்டுதோறும் மாசி மாதத்தில் தேய்பிறை பதின்நான்காம் திதியில் அதாவது கிரு"ணபட்சத்துச் சதுர்த்தியில் வரும் விரதம் ஆகும். சிவராத்திரி விரதம் அனு"டிப்பவர்கள் சிவராத்திரிக்கு முந்திய தினம் ஒருவேளை உணவு உண்ணல் சிவராத்திரி தினத்தில் உபவாசம் இருத்தல். மறுநாள் அதிகாலை பாரணை செய்தல் என்னும் நியதிகளைக் கடைப்பிடிப்பர். மேலும் இவ்விரத தினத்தில் இரவு பூராகவும் விழித்திருத்தல், இலிங்கோற்பவ காலத்தில் சிவபிரானை விசேடமாக வழிப்படல், சிவ சிந்தனை, சிவநூற் பாராயணம், கூட்டுப்பிரார்த்தனை என்பவற்றில் ஈடுபடல் என்பன விரதிகள் கடைப்பிடிக்க வேண்டியவை ஆகும்.

இமயம் தொடக்கம் குமரிமுனை வரை பரந்துள்ள பாரதத்தின் சிவ வழிபாட்டைப் பேணும் மக்கள் வாழ்கின்ற தமிழ் நாடு, கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநிலங்களிலும் நேபாளம், இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலும் மகா சிவராத்திரி சிறப்பாக அனுஷ்டிக்கப் படுகின்றது. கந்தபுராணம், இலிங்கபுராணம், சிவராத்திரி புராணம் எனும் நூல்கள் சிவராத்திரி மகிமையைப் புரிந்து கொள்ள உதவும். சமய இலக்கியங்கள் ஆகும்.

சிவராத்திரி பற்றிய புராணக்கதைகளில் பிரம்ம விஷ்ணுக்கள், இலிங்கவடிவ ஒளிப் பிழம்பின் அடியையும், முடியையும் தேடித் தோன்றும், அகந்தை அகன்று சிவபரத்து வத்தை ஏற்றுக் கொண்டமை சிவபிரானின் இருகண்களளையும் பொத்தி உலகை இருளில் ஆழ்த்திய குற்றம் நீங்க உமை யம்மை நான்கு யாமச் சிவபூசை செய்து இடர்களைந்த பெருமை என்பன சிறப்பு டையன ஆகும்.

சிவசக்தி அம்சம் கொண்ட நாளாகப் போற்றப்படும் சிவராத்திரி நள்ளிரவு வேளையான இலிங்கோற்பவ காலத்தில் வில்வம் இலைகளினால் அர்ச்சனை செய்வது பிரதானமாகும். "திரிஜென்ம பாபசங்காரம் ஏகவில்வம் சிவார்ப்பணம்" என்பது ஆன்றோர் கருத்து, பின்வரும் தோவாரப் பதிகப் பாடல்கள் மகா சிவராத்திரியின் போது மெய்யன் போடு ஓதத்தக்கவையாகும்.

திருச்சிற்றம் பலம்

தொழுவார் அருவர் துயரம் நீங்கவே
அழலாய் ஓங்கி அருள்கள் செய்தவன்
விழுவார் மறுகில் விதியால் மிக்கவெம்
எழிலார் சோற்றுத் துறைசென் றடைவோமே.

(சம்பந்தர் தேவாரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென்று இலிங்கத்தே
தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

(அப்பர் தேவாரம்)

அயனோ டன்றரியும் அடியும்முடியும்
காணபரிய
பயனே யெம்பரனே பரமாய பரஞ்சுடரே
கயமா ருஞ் சடையாய் கடவூர்த்திரு
வீரட்டத்துள்
அயனே யென்னமுதே யெனக்கார்துணை
நியலதே.

(சுந்தரர் தேவாரம்)

திருச்சிற்றம் பலம்

## (2) மார்கழித் திருவாதிரை

மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற் காலம் அல்லது வைகறைப் பொழுதாகக் கருதப்படும். மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரம் தில்லை நடராஜப்பொருமானுக்கு அபிடேகத் திருவிழா நடைபெறும் புண்ணிய தினம் ஆகும். மேலும், திருவெம்பாவை வழிபாட்டுக்குரிய பத்துத் தினங்களின் இறுதி நாளாக அமையும் சிறப்பும் மார்கழித் திருவாதிரைக்கு உரியதாகும்.

சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள சிற்சபேசன் எனப்படும் நடராஜப்பொருமானை இத்தினத்தில் தரிசிப்பதும் விரதம் அனுட்டிப் பதும், சிவனடியார்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை கிடைக்கும் தனிப்பெறும்பேறு ஆகும். ஆதிரை விழாவை ஷஆருத்திரா தரிசனம்' என்று சிறப்பித்துக் கூறல் சமயமரபு. அன்றைய தினம் தில்லையில் "ஆருத்திரா தரிசனம்" செய்யச் செல்ல இயலாதவர்கள் குறிப்பாக நம்நாட்டவர், நடராஜ வடிவம் அமைந்துள்ள காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், திருக் கேதீச்சரம், திருக்கோணேச்சரம், பொன்னம் பலவாணேச்சரம், முன்னேச்சரம், கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரம் முதலிய சிவத்தலங்களிலும் திருவாதிரை விழா வழிபாடு செய்வதும் விரதம் நோற்பதும் நாம் காணக்கூடியதொன்றாம்.

நடராஜ வடிவம் என்பது சிவபிரான் புரியும் ஐந்தொழில்கள் அல்லது பஞ்சகிருத்தியம் ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கு அவர் என்றும் உதவும் கருணையின் அடையாளமாக விளங்குகின்றது. அரனடி என்றும் அனுக் கிரகம்மே' என்ற பேருண்மையைத் திருமூலர்,

"அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன்அங்கி தன்னில் அறையிற் சங்காரம்
அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி என்றும் அனுக்கிர கம்மே."

என்ற பாடலில் அருமையாகக் கூறியுள்ளார்.

பதஞ்சலி, வியாக்கிரபாதர் போன்ற முனிவர்கள் தரிசித்து மெய்மறந்து தில்லை நடராஜனின் ஆடற்கோலம் என்றும் காணத்தக்கது. அதனைக் கண்ணாரக் கருத்தாரக் காண மனிதப்பிறவி எடுக்க விரும்புவதாக அப்பர்பெருமான் கூறியுய ள்ளார். அவர் கருத்தமைதியுடன் பாடிய தேவாரப் பாசுரம் திருவாதிரைத் தரிசன தினத்தில் ஓதத்தக்கது.

திருச்சிற்றம் பலம்

குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த
பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

திருச்சிற்றம் பலம்

(அப்பர் தேவாரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (3) பிரதோஷ விரதம்

பிரதோஷம் என்ற வட சொல் இரவுக்கு முந்தியது எனப்பொருள்படும். ஷபிர' என்பது முதல்' எனவும் "தோஷம்' என்பது ஷஇரவு' எனவும் வடமொழியில் பொருள் தரும். எனவே, பிரதோஷ விரதம்' என்பது இரவுக்கு முற்பட்ட வேளையாகிய பகல் முழுவதும் உணவு உண்ணாமல் கடைப்பிடிக்கும் விரதம் என்று விளங்குதல் பொருத்தமாகும். வளர்பிறை, தேய்பிறை ஆகிய இருபட்சத்தும் பதின்மூன்றாம் நாளான திரையோதசித் திதியில் சிவபெருமான் கருணையே நாடி அனுட்டிக்கப்படுவது பிரதோஷ விரதமாகும். இவ்விரதத்தை நோற்க விரும்புவர்கள் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய நான்கு மாதங்களில் வரும் சனிப் பிரதோஷ தினத்தில் விரத அநுட்டானத்தைத் தொடங்குதல் மரபு.

பிரதோஷ விரதம் அட்டிப்போர் பகல் முழுவதும் உபவாசமிருந்து பிரதோஷ வேளை யாகிய சூரிய அஸ்த்தமனத்தின் போது சிவாலயங்களில் சிவ தரிசனம் செய்த பின் போசனம் செய்தல் நியமமாகும்.

பிரதோஷ தினத்தில் செய்யும் சிவதரிசனம் வழக்கமாகச் சிவபெருமானைத் தரிசிக்கும் முறையிலும் வேறானதாகும். பிரதோஷ காலத்தில் சிவலிங்க மூர்த்தத்தை தரிசிப்பவர்கள் முதலில் இடபதேவரைத் தரிசித்து, இடமாகச் சென்று சண்டேசுவரைத் தரிசிக்க வேண்டும். அங்கு நின்று வலமாக வடதிசையிற் கோமுகை வரை செல்லுதலும் அதனைக் கடவாது திரும்பி வந்து வழியே சென்று, இடபதேவரையும் சண்டேசுவரரையும் தரிசித்தலும் மீண்டும் திரும்பி கோமுகை வரை சென்று, திரும்பி வந்து சண்டே சுவரரைத் தரிசித்தலும் அவருடைய இரு கொம்புகளினூடாக இருபாரூடரைத் தரிசித்தலும் வேண்டும். அத்தகைய சிக்கலான தரிசன மரபிற்குக் காரணமாக புராணக்கதைச் சம்பவம் ஒன்று சமய இலக்கியங்களிற் கூறப்படுகின்றது.

தேவர்களும் அசுரர்களும் அமுதத்தைப் பெற்றுக் கொள்வதற்காகத் திருப்பாற் கடலைக் கடைந்தபோது தோன்றிய நஞ்சைச் சிவபிரான் ஏற்று உண்டு, தேவர்களைக் காத்தருளினார். இச்சந்தர்ப் பத்தில் சிவபிரானின் இடப தேவரின் கொம்புகளின் நடுவில் நின்று திருநடனம் புரிந்தருளினார். இந்நடனம் புரிந்த காலம் பிரதோஷ காலம் ஆகும். எனவே, பிரதோஷ விரதிகள் இடபதேவரின் கொம்புகளின் ஊடாகச் சிவலிங்கத்தைத் தரிசிப்பதன் மூலம் ஆனந்தக் கூத்தரின் அருட்பிரவாகத்தை அடையலாமென்ற சிந்தனை விரத தரிசன மரபாகப் போற்றப்படுகின்றது.

உயிர்களுக்கு அருள்பாலிக்கும் ஆலமுண்ட கண்டனைத் துதிக்கும் பின்வரும் தேவாப் பாசுரங்கள், பிரதோஷ காலத்தில் சிறப்பாக ஓதத்தக்கன ஆகும்.

திருச்சிற்றம்பலம்

**நாகந் தான்கயிறாக நளிர்வரை யதற்கு மத்தாகப்**
**பாகந் தேவ ரொடசுரர் படுகட லளறெழக் கடைய**
**வேக நஞ்செழ ஆங்கே வெருவோடும் இரிந் தெங்குமோட**
**ஆகந் தன்னில் வைத்தமிர் தமாக்கு வித்தான் மறைக்காடே**

(சம்பந்தர் தேவராம்)

**பருவரை ஒன்று சுற்றி அரவங் கைவிட்ட**
**இமையோர் இரிந்து பயமாய்த்**
**திருநெடு மால் நிறந்தை அடுவான் விசும்பு**
**சுடுவான் எழுந்து விசைபோய்ப்**
**பெருகிட மற்றி தற்கோர் பிதிகாரம் ஒன்றை**
**அருளாய் பிரானே எனலும்**
**அருள்கொடு மாவிடத்தை எரியாமலுண்ட**
**அவனண்ட ரண்டர் அரசே.**

(அப்பர் தேவாரம்)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஹாகும்பாபிஷேக தத்துவார்த்தம்

சற்கிரியா கலாபமணி
**சிவஸ்ரீ கு. காமாஷிசுந்தரேஸ்வரக் குருக்கள்**
ஸ்ரீ முத்துவிநாயக சுவாமி கோவில்
செட்டியார் தெரு, கொழும்பு.

மூவாய் பிறவாய் போற்றி முன்னமே தோன்றி
முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் தொழும் தேவேபோற்றி
சென்றேறி எங்கும் பரந்தலய் போற்றி
ஆவாய் அடியேனுக்கு எல்லாம் போற்றி
அல்லல் நலிய அலைந்தேன் போற்றி
காவாய் கனகத் திரவே போற்றி கயிலை மலையானே
போற்றி போற்றி

அநாதி மலமுத்த சித்துருவாகிய பரம்பொருள் கற்பனை கடந்த சோதியாயினும், அனாதிமல பெத்தர்களாகிய ஆன் மாக்கள் வணங்கி போக மோஷங்களையுடைய ஆலயத்தில் நிறுவப்படும் விநாயகபெருமான் திருவுருவில் கருனையே உருவாகும் படி பிரார்த்தித்து அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாகும், கும்பாபிஷேகம் என்பது குடமுழுக்கு பெருஞ்சாந்தியாகும்.

சுத்த விவஜோதி நிஷ்கள நிருத்தவத்தில் நின்று உண்டான எல்லையை கடந்து வட்டவடிவமான பரபிந்துவையுடைய நாதமயமான பரபிந்துவையுடைய நாதமயமான சிவம் தோன்றி அதில் நின்று எல்லை கடந்த பராசக்திதோன்றும். அதில் நின்று எல்லைப் பட்ட அபர நாதம் தோன்றும். அதில் நின்று ஆதி சக்தி தோன்றி உலகவியாபக பேத்த்தால் இச்சா சக்தி ஞான சக்தி கிரியா சக்தி தோன்றும். மேலே கூறிய அபரபிந்துவாகிய பராசக்தி முதல் பஞ்ச சக்திகளில் நின்றும் முறையே.

சிவ சாதாக்கியம் அமுர்த்தி சாதாக்கியம் மூர்த்தி சாதாக்கியம் கர்த்துரு சாதாக்கியம் கன்ம சாதாக்கியம் என்னும் பஞ்ச சாதாக்கியங்கள் தோன்றும், இவற்றுள் கன்ம சாதாக்கியம் என்பது ஆலயத்தில் தாபிக்கப் பெற்ற லிங்க ஆவுடையாரின் உருவமாகும். இச்சதா சிவத்தினின்று மனோன் மணியும், மனோன் மணியில்னின்று மகேஸ்வரனும், மகேஸ்வரனிலிருந்து மகேஸ்வரியும் மகேஸ்வரியிலிருந்து ஸ்ரீ கண்ட உருத்திரரும் ஸ்ரீ கண்ட உருத்திரரிலருந்து உமையும். உமையிலிருந்து விஷ்ணுவும், விஷ்ணுவிலிருந்து இலக்குமியும், இலக்குமியிலிருந்து பிரம்மாவும், பிரம்மாவிலிருந்து வாணியும் தோன்றி உலகத்தைக் காரியப்படுத்துகின்றார்கள்.

இங்ஙனம் செயல்படும் பொழுது உயிர்களின் பக்குவ நிலைக்கேற்ப அறிவு இச்சைகளயைும் தநு, கரண, புவந, பாகங்களையும் கொடுப்பார். ஆன்மாக்களாகிய நாம் இத்தநுவாகி சரீரத்தைக் கொண்டு சிவசாஸ்திர உணர்சியால் நல்லறிவு கலைப்பட்டு பதி புண்ணியமாகிய கும்பாபிஷேகம் முதலிய சிவதர்மத்தில் பங்கு பற்றி தரிசிக்க வேண்டியது முதற்கடமையாகும். அங்ஙனம் தரிசிக்கம் அன்பர்கள் ஒவ்வொரு கிரியைகளையும் ஊன்றிக் கவனித்து உணர்த்து தரிசித்தல் அதிகப் பயனைத் தரும் எனக் கருதியே இக்கட்டுரையினை எழுதத் தலைப்படுகின்றேன்.

தனபூசை திரவியத்தைப் பூசிப்பது புண்ணிய வசத்தால் சம்பாதிக்கப்பெற்ற திரவியத்தை சிவார்ப்பணம் செய்து பின்னா அதனை மூன்று பாகம் செய்து ஒரு பாகம் ஆலயகட்டிட வேலைக்கம் மற்ற பாகத்தைக் கொண்டு நித்தியபூசை மாதந்தோறும் வருகிற நஷத்திர திதிகளில் செய்கின்ற நைமித்திகச செலவு, சுவாமிக்கு வேண்டி திரு ஆபரணம், கிராமம் முதலியன வாங்குவதற்கும் மூன்றாவது பாகத்தால் கும்பாபிஷேகச் செலவும் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி கும்பாபிஷேக பாகத்தைப் பதினொரு பாகம் செய்ய வேண்டியது.

1. யாகம் கட்டுதல் முதலானவற்றிற்கு

இரண்டு பாகம்

2. அபிஷேக திரவியம்

ஒரு பாகம்

3. ஆசார்ய தஷணைக்கு

இரண்டு பாகம்

4. மூர்த்திபர்கட்கு

ஒரு பாகம்

5. வேதம் தேவாரம் ஓத

ஒரு பாகம்

6. தனாதிகட்கு

ஒரு பாகம்

7. அன்னதானத்திற்கு

ஒரு பாகம்

8. சிற்பி பரிசாரகத்திற்கு

ஒரு பாகம்

9. யாக சாமான்களுக்கு

ஒரு பாகம்



பதினொரு உருத்திரர்கள் பூஜித்தல் தனது பூஜையாம்.ஷ

2. அனுக்ஞை உத்தரவு பெறுதல் தனது குரு, சர்வசாதகர், போதகர் முதலாவர்களையும் சிவனையும் வழிபட்டு நல்ல வழிவந்த இந்த திரவியம் கும்பாபிஷேகச் செலவிற்று யோக.. உண்டாகும் படியாகவும் சாஸ்திரப்படி செய்ய உத்தரவு தரவேண்டும் என உத்தரவு பெறுதலாம்.

சிவனிடம் உத்தரவ பெறுதலில் இரண்டு வகை உண்டு ஒன்ற சாங்கம், மற்றையது உபாங்கம். சிவனிடமும் சக்தியிடமும் கேட்டல் சாங்கமாகம் உபாங்கத்தில்

கணேசர் சிவனாரின் வலக்கண்

முருகன் சிவனாரின் இடக்கண்

நந்தி சிவனின் பூக்கு

சண்டி கேஸ்வரர் சிவனாரின்காது ஆதலால் இவைகளை நாம் செய்யும் கிரியைக்கு எற்றவாறு உணர்ந்து செய்ய வேண்டும். இது உபாங்க அனுக்ஞையாகும்.

3. பிரவேசபலி. பிரவேசிக்கச் செல்லுமிடத்தில் உள்ள தேவதைகளை பூஜித்து உணவு கொடுத்து எல்லோரையும் நோக்க கடல், வனம், மலை, முதலிய இடங்களுக்குச் சென்று சுலபமாக இருங்கள். இவ்விடத்தில் இறைவனை இருத்தல் வேண்டும் எனக் கூறி அவர்களை திருப்திப் படுத்தலாம்.

4. வாஸ்த்து சாந்தி: வாஸ்த்துப் பிரமனை வழிபடுதல், பூமிக்கு அதிபதியாகிய பிரமனை பூசித்து பூமியின் அசத்பாவமாகிய குற்றங்களை எரித்துப் பின்னர் பிரமாவின் கந்த தன்மாத்திரையான மூக்கிலிருந்து உண்டான தாகப் பாவித்து அமிர்தத்தால் நனைத்து சுத்தமாக்கிக் கொள்வதே வாஸ்த்து சாந்தியாம்.

5. மிருத் சங்கிரகணம்: மண்எடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் அமிர்தத்தால் நனைக்கப்பட்ட மண்ணை முளையிடுவதற்காக பூமிதேவியை வணங்கி அவள் வயிற்றில்னின்று எடுக்கலாம்.

6. ஆசார்ய பூஜை குருவை வழிபடுதல்

பிரதான குருவுக்கு சகல உபகாரங்களும் கொடுத்து குருவே! நீங்கள் பிர்மாவாகவும், விஷ்ணுவாகவும் பரப்பிர்மாவாகவும் இருக்கின்றபடியால் இச் சிவ கைங்கரியத்தைச் செய்து பக்தர்களைச் சிவானுக்கிரஹத்திற்குப் பாத்திரங்கள் ஆக்கவேண்டும் என வழி படுதலாகும்.

7. அங்குரார்பணம்: முளை இடல்

நெல் முதலிய நவதானிங்களைப் பாலில் ஊறவிட்டு சந்திரனை வணங்கி உலக நோமத்தின் பொருட்டும் பயிர் வளர்க்கலாம்.

8. ரஷா பந்தனம் திருக்காப்பு அணிதல்

உலக சம்பந்தத்தினால் ஏற்படுகின்ற குற்றங்களை நீக்கிக் கொள்ளவும், எடுத்த காரியத்தை இடையூறின்றி முடிப்பேன் என்ற உறுதியுடன் வாகீஸ்வரியின் கர்ப்ப நாடியிலுண்டான தாகப் பாவித்து நாகராஜனை பூஜித்துச் செய்வதாகும்.

9. பூதசுக்தி பூதங்களைச் சுத்திசெய்தல்

பிருதுவி முதல் ஐந்து பூதங்களையும் இவை சம்மந்தமான ஆத்மாவையம் சுத்தப் படுத்துவதாகும்.

ஆன்மாவானது தனது அறிவு மயங்கி மாயையின் வயத்ததாய், மாயை செய்விக்கின்ற வேலைகலை நானே செய்விக்கின்ற வேலைகளை நானே செய்விக்கின்றேன் எனது சொத்து என்று அகங்கார மமகார மேலீட்டால் செய்கின்ற நினைக்கின்ற குற்றங்களை நீக்கி ஆத்மாவை சுத்தப்டுத்துவது தாம் இங்ஙனம் சுத்தப்படுத்திய பின் இறைவனை பூஜை செய்ய வேண்டியது.

இந்த பூத சுத்தியானது ஆத்மாக்கள் அடைகின்ற பதப்பிராப்தியினாறும், திஷா பேதங்களாலும் ஐந்து வகைப்படும் இதில் குரு மூர்த்தியானவர், சிவப்பிரத்தியங்கராகையாலும், சிவாஸ்ரமிகளாவம், ஆதி சைவர்களாகவும், இருப்பதால் சிருட்டிக்கிரமம்... திதிக்கிரமம் அனுக்கிரகக் கிரமம் என்பனவற்றுள் ஐந்தாவதாகிய அனுக்கிரகக்கிரமம் பூத சத்தியே செய்தல் என்ப்படும்.

“பஞ்ச வித சுத்தியினைப் பண்ணிடுக பாங்காகப் பஞ்சவித பாசமறுப்பார்”

(சைவ சமய நெறி. 502)

தனது தேகமானது பிருதுவி முதலிய பஞ்ச பூதங்கள் விதையாகவும், பிரம்ம விஷ்ணுக்களால் முளையுண்டனதாகவும், ராகம், துவேஷம், தர்மம், அதர்மம், மோகங்கள் வேராகவம் வித்தை, அவித்தை அதிபதிகளாய் ரசமிக்கிறதாகவும், கலை முதலிய தத்துவங்கள் சாரமாகவும், தன் மாத்திரைகளான இந்திரியங்கள் கிளைகளாகவம், விஷயம் தளிராகவும், பிரபஞ்சம் புஷ்பமாகவும், புத்தி வியவசாயிகள் சங்கலப்ப பழமாகவும், பழரசத்தைப் புருஷனாகிற பஷி புசிக்கிறதாகவம், பாவித்து வேர் மேலாககும், தளிர் கீழாகவும், ஆலமரத்தை போல் தியானித்து தலைமுதல் பாதம் வரை, ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம், பிருதுவி இவைகள் ஒன்றிலொன்று சேர்த்து தோன்றும் விதையாகவும் பாவித்து ஜாதி, குலம், குணம், முதலியவற்றிக்குச் காரணமான தூல தேகத்தைத் தியானித்து யோனி ஷேத்திரத்தில் பிரமன் சிறுஷ்டிப் பவராகவும் விஷ்ணு காக்கின்றவராகவம் தியானித்து நமது கர்மம் மூலமாகிய கிழங்காகவும், ஆணவம் முளையாகவம் தர்மா தர்மத்தை பாவித்து அத்துடன் ராகத்வேஷ மோகம் உபமூலமாகவம் அவித்தை மாயாகர்மத்தில் இருந்ததாகப் பாவித்து வித்தை பரமெனவம் இந்தப் பரம்பரி பாலிப்பதாகவம் பாவித்து, நடந்தது. நடக்கின்றது, நடக்கபோகின்றது ஆகிய காலத்துவ விருஷம் அசையாதிருக்கம் பொருட்டு சரா சரமாகப்பாவித்தல் வேண்டும், இனி தன்மாத்திரேந்திரியம் ஞானேந்திரிய மென்றம், கன்மேந்திரிய மென்றம் இரண்டாகப்பிரியம், அதைக்கொப்புள் கிளைகிளாகவும் தியானித்து சப்பதம் முதலிய ஐந்தையும் ஐந்து துளிராகவும், புத்தி சங்கல்ப பழத்தை பஹி ரூபமான ஆத்மா புசிக்கிறதாக தியானிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹோம் என்னம் மந்திரத்தை ஐந்து முறை உச்சரித்து ஆலமரத்தை அசைவற்றதாகப் பாவித்து பின்னா் (ஹீம்) மந்திரத்தை மூன்று முறை உச்சரித்து வலது கால் கட்டைவிரல் முதல் உண்டாகும். காலாக்கினியினால் உலா்ந்த பத்திரத்தை இரண்டுமுறை உச்சரித்து தகிக்கப்பட்ட சாம்பலைப் பரந்ததாகத் தியானித்துப் பின்னா (ஹைஹம்) என்னம் மந்திரத்தை ஒருமுறை உச்சரித்துப் பரந்த சாம்பல்களை சேர்த்து அந்தச் சாம்பலை சுத்த ஸ்படிகமாகவம், நிா்மலமாகவும் தியானத்து முன்கூறிய ஆகாயத்துள் அடங்கியிருக்கம் சிவாபின்னமான ஆன்மாவை சிவனிடத்தில் சேர்த்து எல்லா உபாதைகளில் நின்றும் ஓ ஹாம் சிவாய வௌஷட் என சிகையில் நின்றும் அதோமுகமாக இருக்கம் பத்மத்தில் அமிா்தம் பெருகி வருவதாய் தியானித்து உள்ளும்புறமும் நனைத்துப் பின் இருதய கமலத்தில் ஓம் அகார உகார மகாரமும், அதிக ஒளியும் சா்வ வல்லமை முதலிய ஆறு குணங்களொடும், அதிக ஒளியும் சா்வவல்லமை முதலிய ஆறு குணங்களோடும் எல்லா வித்தைகளையும் உண்டாகின்றதாகப் பாவித்து இருதயகமல கா்ணிகையின் நடுவில் இந்த ஆத்மா புரியட்ட தேக முடையதாம் தியானித்து இந்த ஆத்மாவக்கு னள்ளிருக்கம் பரமாத்மஸ்நுபமானது எல்லா ஐஸ்வரியங்களையும் கொடுப்பதாயும், காத்த ரூபமாயும் ஆறு குணங்களால் கறைத்துள்ளதாயும் உள்ள ஆத்மாவை சிவஸ்வரூாம் செய்து கலைகளைத் தாண்டி பஞ்சப் பிரமத்தை ஆவாகித்து பிராசாத மந்திரத்தை தேஹத்தில் ஆவாகித்து அஸ்த்திர மந்திரத்தால் திக்கு பந்தனமும், கவச மந்திரத்தால் மும்முறை சுற்றி கலாமயத்தைத் தாண்டி சிவஸ்வருபத்தை உண்டாக்க வேண்டும், பின் தனது இடை நாடியால் பூரகமும், சுழுமுனா நாடியால் கும்பகமும் செய்து ஜீவாத்மாவைக் கொணா்ந்து உண்டான அமிா்த்தால் தனது தேகத்தை நனைத்து சிவனோடு ஐக்கியம் செய்ய இதன் விளக்கங்கள் சிலவற்றைக் குருமுகமாய்க் கேட்டுணர வேண்டியது இது அனுக்கிர பூதசுத்தியாம்.

அந்தா்யாகம் உட்பூசை சிவபெருமானை வழிபட அந்தா்யாகம் மிக அவசியம்.

"அா்ச்சித்தானந்தா் யாகம் புரியாதே பலத்தை வா்சித்தா னென்றேமதி"

நமது இருதய கமலமானது வாழைப் பூ போன்றது அப்பூவின் அடியிலிருக்கின்ற சுத்தமாயை அா்கிய பாா்திரமாகவும் பிந்துவிலிருந்தும் பெருகிற அமிா்தத்தை இதில் நிறைத்து பூசித்து அந்த ஜலத்தை சிரசில் புரோஷித்து இருதய கமல நடுவில் உள்ள கா்ணிகையில் சூா்ய சந்திர அக்கினி மண்டலங்களைப் பாவித்து முறையே சதாசிவம், மகேசம் சிவம் இவா்கள் இருப்பதாகவம், இந்த வாழைப்பூவின் மத்தியிலுள்ள தாமரைப் பூ எட்டு இதழோடு கூடியதாய் தொப்புளுக்கு மேல் எட்டு அங்குலம் தாண்டி அந்த கமலம் வைக்கபட்டுள்ளதாய் இந்தத் தாமரைப் பூவில் அடித்தண்டு ஒன்பது துவாரமுடையதாய் நான்கு பக்கங்களினும் கா்ணிகையோடு கூடிய தாய் கா்ணிகை கேசங்கள் கட்டைவிரல் இறையின் நீளமுயர முள்ளதாய் இந்தக் கா்ணிகையில் ஆரிய மண்டலமும், இதன் நடுவில் சந்திரமண்டலமும் இதன் நடுவில் அக்கினி மண்டலமும் இருப்பதாய் தியானித்து சூரிய மண்டலத்தின் அணாகத சிவத்தையும், அக்கினி மண்டலத்தில் சிவபெருமானையும் பாவித்து குண்டலினி சக்தியை ஆசனமாக வைத்து இருதய கமலத்தில் சக்தி பாதி சக்திபரியந்தம் பூஜித்து அதற்குமேல் ஈசானாதி பஞ்சப் பிரமத்தானும், ஞானமய தேகம் கற்பித்து நேத்திரம் கொடுத்து பூலத்தால் வியாபகம் செய்து இருதயாதி ஆறு அங்கங்களையும் பூஜித்து அஹிம்சாதி அஷ்ட புஷ்பங்களால் அா்ச்சித்து பொறுமை அா்க்கிய பாத்திரம் அமிா்தம் அா்கியஜலம் சக்தியில் நின்று பெறுகிற பால் அபிஷேகம் புத்தி குங்கும கா்ப்பூர கஸ்தூரி கோரோசனை சந்தனாதிகளால் பூசுதல்.

மனமயமான ஆதார பாத்திரத்தில் பிஷாணாபான வாயு அக்கினி அகங்காரகா்வம் இவைகள் தூப, தீபமாகவம், பிருதுவியிலிருந்து உண்டான தன் மாத்திரைகள் உபசாரங்களாகவும், ஜலம் உட்கொள்ளவும், அக்கினி கண்ணாடியாகவும், வாயு விசிறியாகவும் ஆகாசம் தோத்திரமாகவும் பிருதுவி னைவேத்தியமாகவம் பாவித்து பூசிக்கவும், யோகப்பயிற்சி தெரியாதவா்கள் இருதய கமலத்தில் வித்தியா பீடத்தில் சிவாசன மூா்த்திமூலத்தால் பூசித்துத் தியானிக்கலாம், பின்னா் நாபிகுண்டலத்தில் உள்ள சித் அக்கினியல் ஹோமம் செய்யவும்.

எங்ஙனமெனில் சுத்தமாயை குண்டம், இச்சை ஞானம், கிரியை மூன்றும் மேகலையாம், மூலாதாரம் நெய்பாத்திரம், அமிா்த்தாரையே நெய் குண்டலத்தில் சிதக்கினியை உண்டாக்கி, துவாதசாந்த்தில் கொண்டுபோய்ச் சேர்த்து அந்த அக்கினியை சுழுமுனா நாடி வழியாக நாபி குண்டத்தில் வைத்து மூல மந்திரத்தாளும். பிரசாத மந்திரத்தாலும், நூற்றெட்டு ஹோமம் செய்து கஷ்டம்னா நாடி இடைநாடியாகிய சிருக்கு சிறவங்களால் நேய்யைப் பூரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வௌஷட் என்றும் பதத்தை அந்தமாகவுடைய பிரசாதக மந்திரத்தால் பூர்ணாகுதி செய்யவேண்டும் இதுவே ஹோமமாகும்.

இனி சமாதியாவது ரேசக பாதியால் கும்பகம் செய்து அனாகத சிவத்தை அமனஸ்க்க சிவத்தில் சேர்த்து, அமனஸ்க்க சிவத்தை பரமசிவத்தில் சேர்த்து தியானிக்கவும் இதனால் சித்தம் அழித்து ஆனந்தம் உண்டாக்கி சிதானந்தன் ஆகின்றான் இச்சமாதி அணிமாமுதலிய எண்வகை. சித்திகளுக்கும் இருப்பிடமாம், சிதஸ்வரூபமான சிவபிராணிடத்தில் லயித்திருப்பது நஷத்ரா காரமாயுள்ள பரமேஸ்வரரை தியானித்து சந்தனத்தால் நெற்றியில் பொட்டிட்டு மூலமந்திரம் உச்சரித்து சிகையில் புஷ்பம் ஒன்று தரித்து கொள்வது ஆத்ம பூஜையாம்.

பின்னா் சிரச முதல் பாதம்வரை சத்தமயமான தேகத்தை உண்டாக்கி ஈசானம் முதலிய மந்திரஸ்களாலும் முப்பத்தி எட்டு என்னும் கணக்கிணையுடைய கலா தியாசம் செய்யவேண்டும் இனி பூலாதாரம் முதலிய ஆறு இடங்களிலும் கிரந்தாடிரக் கணக்கின்படி வகரம் முதல் ஸகரம் ஈறாக நான்கு எழுத்தும். பகரம் முதல் லகர மிருதியாக ஆறு எழுத்தும், டகரம் முதல் பகர மீறாகவும் கரம் முதல் டகரம் இறுதியாகவும் அகரம் முதல் பதினாறு உயிர் எழுத்துக்களும் ளவும், கஷவும் ஆக முறையே 4,6,10,12,16,2 என்னும் கணக்குப் படி முறையே மூலாதாரம் முதல் ஆக்னஞ ஈறாக ஆறு இடங்களிலும் பிரம்மா முதலிய ஐந்து மூர்திகளையும் ஐந்து இடங்களில் இதற்கு மேல் ஓர் அங்குலம் அல்லது சிரசிற்குமேல் பன்னிரண்டு அங்குலம் ஆகிய இடங்களில் ஒர் இடத்தில் ஆயிரம் இதழ்களோடு கூடிய கமலத்தின் மேல் சித்ஸ்வருபியாகவும் கஷமரூபம் உடையவராகவும், நிஷ்களராகவம்,ஷாட் குண்யராகவும், ஞானமய தேகமுள்ளவராகவும் சிவனைத்தியானிக்கவும்.

பின் அகரம் முதல் சஷகரம் ஈறாக ஐம்பத்தொரு அசஷரங்களையும் சிரசு முதல் பாதம் வரை நியாகம் செய்து, பின்னர் செய்யும் பொருட்டுத்தனது கைகளை சிவரூபமாக்க வேண்டியது பின்னர் தான் இருக்குமிடத்தை அஸ்திர மந்திரத்தால் மும்முறை தட்டி பத்து திக்குகளிலும் சிவ மந்திரத்தால் மும்முறை தட்டி பத்துத்திக்குளிலும் சிவமந்திரத்தால் சோடிகா முத்திரை செய்து கவசத்தால் மும்முறை சுற்றி அக்னிமயமான மூன்று மதில்கள் உண்டாக்கி சக்தி மந்திரத்தால் தேனுமுத்திரையும் காட்டி ரசஷிக்கப்படுவதாகியதான சுத்தியையும் செய்து பின் அர்க்கிய ஜலத்தால் தன் சிரசிலும் பூஜாத்திரவியங்களிலும் அஸ்திர மந்திரம்

சொல்லித் தெளித்து திரவிய சுத்தி செய்ய வேண்டியது. பின் பிராணா மத்தால் மூல மந்திர முச்சரித்து துவாத சாந்தத்தில் பரசிவத்தையும், லலாடத்தில் அமனஸ்க சிவத்தையும கண்டத்தில் அனாகத சிவசிதையும் தியானித்து ஆசனத்தில் சிவாசனமும் இருதயத்தில் சிவமூர்த்தியும் சிரசில் சிவத்தையும் பூஜித்து பிரமாங்கத்தை அபிமந்திரித்து மூலமந்திரம் உச்சரித்து சிரசில் புஷ்பம் வைத்து சிவாகாரமாக பாவித்து பிரசாத மந்திரத்தை ஹ்ருஸ்வ தீர்க்க புலத ளுக்கும் அதி ளுக்கும் கிரமப்படி மூலாதாரம் முதல் துவாத சாந்தம் வரை ஓம்காரம் முதல் நமோந்தம் இறுதியாக முறையே பிரம்மா விஷ்ணு உருத்திரன் மமேஸ்வரன், சதாசிவன் அனாஹுத அமனஸ்க்க உன்மனீ பரசிவாந்தம் தியாகக் கிரமமாய் உச்சரித்து மந்திர சத்தி செய்து கொள்ள வேண்டியது இதுவெ புதசுத்தி எனப்படும்.

இவற்றுள் சில பகுதி கடினமாயினும் கஷ்டப்பட்டுத் தெரிந்து செய்யின் கஷ்டப்பட்டுத் தெரிந்து செய்யின் செய்வோருக்கம் செய்விப்போருக்கம் பெரும் பலனுண்டு. ஆன்ம சத்தி, பூதசக்தி, அந்தர் யாகம் சமாதியாகிய முன்றின் தொகுதியாகம். இது நாவலர் பெருமான் அருள்வாக்கு. பின்னரை யாகத்தில் கும்பம் வைத்து பூஜித்து மூர்த்திகட்கு தான்யாதி வாசம், ஜலாதிவாசம் முதலியன செய்து மருந்து சாத்தி, எண்ணெய்க் காப்புச் சாத்தி, பிம்ப சுத்தி முடித்து பின்னர் குறித்த முகூர்த்தத்தில் ஆசனத்தின் மிது கும்பங்களை வைத்து தேவார பாராயணங்களோடு, சகல வாத்திய இசைகளுடன் குருகுல குருமூல மந்திரம் உச்சரித்துக்கொண்டு அபிஷேகம் செய்யவேண்டியது. வர்த்தனி கும்பத்தைப் பீடத்திலும். அஷ்டவித்தியேஸ்வர கும்பத்தை ஆவடையாரைச் சுற்றிலும் அபிஷேகித்து விஷேட பூஜை செய்ய வேண்டியது.

பின்னர் நாற்பத்தி ஐந்தாம் நாள்வரை விஷேட அபிஷேக பூஜை செய்து ஈற்றில் சங்காபிஷேகம் செய்து நித்திய நைமித்திய, காமிய பூஜைகளை முறைப்படி செய்வித்து திருவருளுக்குப் பாத்திராகளாகிய மனோ பீஷ்டங்களைப்பெற்று பேரானந்தப் பெரு வாழ்வு பெறுவீர்களாக்.

சுப மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித ஸூத்ர
வாமன ரூப மஹேச்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிடக் கவலை தீரும்.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோம்.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார்த் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒளவையார் அருளிய

# விநாயகர் அகவல்

## காப்பு

அற்புதவி நாயகர்தம் ஆசிரியர் பாவுரையைச்
சொற்பொருளின் குற்றமின்றிச் சொல்லவே முற்படுசீர்ச்
சொற்பொருளெல் லாங்கடந்து தூய்தாம் மெய்ஞ்ஞானமிகு
கற்பக விநாயகன்றாள் காப்பு.

### நூல்

சீதக் களபச்செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விழங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம்நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தனில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலமொரு நான்குந் தந்தெனக் கருளிக்
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்ஷமமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்தித்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் கவசம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்க; வாய்ந்த சென்னி
அளவுபடா வதிகசவுந் தரதேகம்
தோற்கடர் தாம் அமர்ந்து காக்க;
விளரற நெற்றியை யென்றும் விளங்கிய
காசிபர் காக்க; புருவந் தம்மைத்
தளர்வில் மகோ தரர் காக்க;
தடவிழிகள் பாலச் சந்திரனார் காக்க; 1

கவின் வளரும் அதரங்கச முகங்காக்க;
தாலங்கணக் கிரீடர் காக்க ;
நலில்சி புகம் கிரிசைசு தர்காக்க;
நனிவாக்கை விநாயகர்தாங் காக்க ;
அவிர் நகை துன்முகர் காக்க ; அள்ளெழிற்
செஞ்செவி பாச பாணி காக்க;
தவிர் தலுறா திளங்கொடிபோல் வளர்மணி
நாசியைச் சிந்திதார்த்தர் காக்க; 2

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி காக்க;
களம் கணேசர் காக்க
வாமமுறுமிரு தோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம் மகிழ்ந்து காக்க ;
ஏமமுறு மணிமுலை விக்கினவிநாயகன்
காக்க ; இதயந் தன்னைத்
தோமகலுங் கண நாதர் காக்க;
அகட்டினைத் துலங்கே ரம்பர் காக்க; 3

பக்க மிரண்டையுந் தராதரர் காக்க;
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினகரன் காக்க; விளங்கி லிங்கம்
வியாள பூடணர்தாங் காக்க;
தக்கு ய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்க ; சகனத்தையல்லல்
உக்க கணபன் காக்க; ஊருவை
மங்கள மூர்த்தி யுவந்து காக்க; 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ் முழந்தாள் மகாபுத்தி காக்க;
விருபதம்மேக தந்தர் காக்க;
வாழ் கரங்கிப் பிரப்பிரசாதனர் காக்க;
முன்கையை வணங்குவார் நோய்
ஆழ்தரச் செய்யா சாபூரகர் காக்க;
விரல்பதும வத்தர் காக்க;
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க;
கிழக்கினிற் புத்தீசர் காக்க; 5

அக்கினியிற் சித்தீசர் காக்க;
விக்கினவர்த் தனர் மேற்கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்
கசகன்னன் காக்க திகழ் உதீசி
தக்கநிதிபன் காக்க;.
வடகிழக்கி லீசாந் தனரே காக்க; 6

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்க;
விரவினுஞ் சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின் விக்கின கிருது காக்க;
இராக்கதர்பூத முறுவே தாள
மோகினி பேயிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவி லாத வேகமுறு
பிணிபலவும் விலக்கு புபாசாங்குசர்
தாம் விரைந்து காக்க; 7

மதிஞானம், தவம்தான மானமொளி
புகழ் குலவண் சரீர முற்றும்
பதிவான தனம்தானி யங்கிரகம்
மனைவிமைந்தர், பயினட் பாதிக்
கதியாவுங் கலந்து சர்வாயுதர் காக்க;
காமர் பவுத்திரர் முன்னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க; 8

வென்றி சீவி தங்கபிலர் காக்க;
கயாதி யெலாம் விகடர் காக்க;
என்றிவ்வா நிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுறா; முனிவரர்கா; ளறிமின்கள்;
யரொருவ ரோதினாலும்
மன்றவாங் கவர்தேகம் பிணியற;
சிரதேகமாகி மன்னும். 9

விநாயகர் கவசம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரிய சித்தி மாலை



**திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்**
**காதலால் கூப்புவர்தம் கை.**



சகல காரியங்களிலும் சித்திபெற யானைமுகனைத்துதித்து இந்தப்பாடலைப் பாடினால் ஒருவர் தான் எடுத்த காரியம் எளிதில் நிறைவேறும்.

பந்தம் அகற்றும் அநந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறை ஆகமங்கலைகள்
அனைத்தும் எவன்பால்தக வருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம். 1

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவான்?
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம். 2

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம். 3

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினானும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான்எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம். 5

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 6

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான்எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம். 7

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்?
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்?
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம். 8

இந்தக் காரியசித்தி மாலையைக் காலை, மதியம், மாலை மூன்று வேளைகளிலும் விநாயகரை எண்ணி எட்டுநாட்கள் பாடுபவர்கள் நினைத்த காரியம் சித்திக்கும். சதுர்த்தி விரத தினத்தன்று எட்டுமுறை பாடினால் எட்டுச் சித்திகளும் கைகூடும்.

**ஸ்லோகம்**

ஸிம்ஹப்ரஸேணம் அவதீத ஸிம்ஹோ
ஜாம்பவதா ஹத: ஸுகுமார: மாரோ (அ) தி:
தவ: யேஷ: ஸ்யமந்தக:

***இந்த ஸ்லோகத்தை விநாயகர் சதுர்த்தி அன்று சொல்கிறவர்களுக்கு வருடம் முழுவதும் எந்த சுக்லபட்ச சதுர்த்தியில் சந்திரனைக் கண்டிருந்தாலும் அந்த தோஷம் நிவர்த்தி அடைகிறது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு - ஸ்ரீ முத்துவிநாயக சுவாமி பேரில்

மானிப்பாய் - அ. சுவாமிநாத முதலியார் இயற்றிய

# உலா

பொன் பூத்த செங்கமலை பொங்கிவளருங் கொழும்பின்
மின்பூத்த முத்துவிநாயகனே - தென்பூத்த

செய்யகலி வெண்பாச் சிறக்கநீ யேயருள்செய்
வையமெலாம் வாழ்த்தும் வரதனே - செய்யமலர்

ஆரணனும் வாரணனும் மாதவனு மாதவனும்
பூரணமே னோரும் பொருந்துசபை - வீரமாய்

நிற்குமந்த வாயுவுக்கு நீடாதி சேடனுக்குஞ்
சொற்கலக மாகித் தொடர்சேடன் - பொற்புமிகு

மேரு மலைமேல் விளங்கா யிரமுடிகள்
சாருந் தலைகளாற் றான்மறைத்து - சேரும்போ

தற்புதமாய் வாயு வடித்தமுடி மூன்றெடுத்துத்
தெற்குச் சமுத்திரத்துச் செல்லவிட - கற்பகம்போல்

நின்று வளர்ந்து நெடுமதிலே ழும்பொருந்தி
ஒன்று மெழுதூறு யோசனையாய் - அன்றுமுதல்

ஈழமென்று நல்ல விலங்கையென்றும் பேராகி
வாழி வளர்ந்தோங்கி மாண்பாகி - சூழுமு

னீச்சுரமு நற்றிருக்கே தீச்சுரமு நீடுபுகழ்
பேச்சுத் திரிகோணப் பேர்மலையும் - மாச்சீர்

சிவனொளிர்பா தப்பொருப்புந் தென்கதிரை யோடு
நவசெங் கடக நகரும் - புவனமுண்ட

மாயவனா றங்கநக மாபலிகங் கைச்சிறப்பும்
பாய்புனன்மா ணிக்கநதி பாலாறும் - நேயமுள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரனீ சங்கரனே பையன்முரு கையனொடு
பங்கமின்மூத் தன்வீர பந்திரனே - செங்கணமால்

வித்தகமா மோடியொடு மேலான காளியுமை
இத்தகையோர் கோயிலுஞ்சே ரித்தீவில் - சுந்தியுள

மானி நகரின் வழிவழியா மன்னுரிமை
மானமொடு போற்று மகான்களே - தாநெறியால்

வந்தரசு கொண்டு வளர்புகழின் வாழ்வுபெறும்
இந்திரலோ கந்தைநிக ரிக்கொழும்பில் - முந்துசிறி

கோலமகா ராசன் குமாரசா மிந்துரையாம்
ஞாலம்புகழு நராதிபனும் - காலமிகு

தொல்புகழ்சேர் வேளாளர் சுற்றமுள நான்மறையோர்
நல்வணிகரென்னு நகரத்தார் - எல்லவரும்

இந்தக் கொழும்புநக ரித்தெருவின் மேல்புறமாய்ச்
கந்தக் கடலுக்குத் தான்கிழக்காய் - சுந்தரஞ்சேர்

ஐங்கரனுக் காலயமொன் றன்பாய்ச் சமைக்கவெனத்
துங்கமுறு பத்தியொடுஞ் சொல்லவே - மங்கலமார்

மன்னர் புகழ்ந்து **மகிழ்முத்துச் சாமியெனுங்**
கன்னன் புகழ்சேர் கனயோகன் - நன்னயமாய்

ஆங்கவர்கள் சொற்படியே யாலயமு நீண்மதிலும்
ஓங்கலைநேர் கோபுரமு முண்டாக்கி - பாங்குடனே

**பம்பு சகாத்தம் பகரா யிரத்தெழுநூற்**
**றைம்பதுட னான்கா யறையுநின்ற** - உம்பருறு

சீரார் கரவருடஞ் சேர்கார்த் திகைமதியில்
நேரார் துதியை நிலவியநாள் - பேரான

ஆலயத்தி லாகமத்தி னைங்கரநிற் றாபிக்கச்
சீலமுடன் கோயில்கொண்டு சேர்ந்திருந்தாய் - பாலனஞ்சேர்

அண்ணலுனை யான்றுதிக்க வாகுமோ வாரணனுங்
கண்ணனொடு காணாத கற்பகமே - வண்ணமுறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டலியிற் றங்கு குடிலையே கோகனத
மண்டலத்திற் றங்கு மசரப்பொருளே - அண்டர்தொழும்

அப்பனுக்கோ ரச்சுதவு மையனே மாமனுக்குத்
தப்பிவிழு மந்தரத்தைத் தந்தோனே - செப்பமுள

சந்திரற்குச் சாபந் தவிர்த்தோனே தேவர்தொழும்
இந்திரற்கு வானுலக மீந்தோனே - முந்நொருநாள்

பாம்பணையிற் பள்ளிகொண்டான் பாம்புருவைந் தீர்த்தோனே
ஆம்பன் முகத்தானை யழித்தோனே - காம்பன் தோட்

பூமகட்கு நாமகட்கு பொன்னார் புலோமசைக்கும்
வாமமுறு தாலியணி வைத்தோனே - ஏமமுடன்

வாயு மதிபரிதி வானமனன் மண்ணீரோ
டாயுமுயி ரெட்டா யமர்ந்தோனே - தூயபுகழ்

செப்புமிருகாங்கந் தேவாங்கம் பூதாங்கம்
ஒப்பில்லா மேனி யுடையோனே - முப்பழமும்

ஆன்பா லவல்கடலை யப்பமுட னௌ்ளுருண்டை
தேன்பா லுறுசகுலி தின்போனே - மான்பாகத்

தந்தைகையின் மாங்கனிக்காய்த் தம்பிவலம் வந்திடுமுன்
முந்துகனி வாங்கியுண்ணு முன்னவனே - சிந்தனையாய்க்

கூகூ வெனவுரைத்த கோலமறை யோனுக்காய்க்
கூகூ வெனவுரைத்த கொம்பனே - தேமேவு

தேனைதிகர் வள்ளிதனைச் செவ்வேண்முன் சேர்ந்திடவே
யானையென வந்தருளு மெந்தையே - வானையுள

தம்பி தனக்காய்த் தகைசேர் வலவைதனைச்
செம்பொற் குறங்கில்வைத்த தெய்வமே - நம்பிவரு

தேரகத்திவ் வந்த தெக்ரதரா மன்றனுக்கு
வீரகந்தி தீர்த்தருளும் விண்ணவனே - நீரகமாய்

நம்பி நினைவார்க்கு நாயகனே எல்லார்க்குத்
தும்பிமுக னீயே துணை.

*உலா முற்றிற்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை!

# கொழும்பு - ஸ்ரீ முத்துவிநாயக சுவாமி பேரில்

மானிப்பாய் - அ. சுவாமிநாத முதலியார் இயற்றிய

# ஊஞ்சல்

## காப்பு

சீர்பூத்த கடனாடு சிலம்பு காடு
திகழ் தருநரல் வகையினிற்சேர் செல்வ மெல்லாம்
ஏர்பூத்த பலசிறப்பி னிலக மேவு
மியல் கொழும்பி னுயர்கோவில் கொண்டு வாழும்
நீர் பூத்த நதிமதியோ டிதழி சூடு
நித்தியனா முத்து வினாயகன்றன் மீது
வார்பூத்த வூஞ்சலிசை பாடு தற்கு
மற்றவனற் பொற்பதமே வணங்குவாமே.

## ஊஞ்சல்

திருவுமருவு பவளங்கள் கால்களாகச்
சிறந்த வயி டூரியமே சட்டமாக
உருமருவு மரகதமே பலகை யாக
ஒளி திகழும் வயிரமணி விட்டமாக மாக
குருமருவு கனகமது கயிற தாகக்
கோலமலி முத்தினுயர் பந்தர் மாட்டே
மருமருவு சோலை செறி கொழும்பு வாழ்வீர்
வரத முத்து விநாயகரே யாடீ ரூஞ்சல். 1

வானவர்கா னவர்முனிவர் மகிழ்ந்து கூட
மாமறைக ளறியு மறையவர்க டேட
கானமறி தும்புருநா ரதர்கள் பாட
கனகமணி யரம்பையர்கள் கவரி போட
மேனகையோ டுருப்பசியு நடன மாட
மிகுதிசைபா லகர்மகிழ்வி னினிது நாட
தேனவிழுஞ் சோலைசெறி கொழும்பு வாழ்வீர்
செல்வமுத்து விநயாகரே யாடீ ரூஞ்சல். 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமகளு நாமகளும் புகழ்ந்து போற்ற
புலோமசையோ டரம்பைதுதி மகிழ்ந்து சாற்ற
காயமுறு திலோத்த மைதா னடங்க ளாற்ற
கண்டவிழி கொண்டவருள் பவங்கண் மாற்ற
வாமசிவ காமியம்மை மகிழ்தா லாட்ட
வாழியெனக் காளிவட மகிழ்வா லாட்ட
நாமமுறு சோலைசெறி கொழும்பு வாழ்வீர்
நல்லமுத்து விநாயகரே யாடி ரூஞ்சல். 3

சங்கரனார் தந்தவரே யாடி ரூஞ்சல்
சண்முகன்முன் வந்தவரே யாடி ரூஞ்சல்
மங்கையுமை தந்தவரே யாடி ரூஞ்சல்
வல்லவையு கந்தவரே யாடி ரூஞ்சல்
எங்குநிறைந் திருந்தவரே யாடி ரூஞ்சல்
எலிமிசையே பொலிந்தவரே யாடி ரூஞ்சல்
துங்கமுறு சோலைசெறி கொழும்பு வாழ்வீர்
சோதிமுத்து விநாயகரே யாடி ரூஞ்சல். 4

நாரணனா னவனுமொரு வடந்தொட் டாட்ட
நலம்பெறுநான் முகனுமொரு வடந்தொட் டாட்ட
வாரணனா மிந்திரனோர் வடந்தொட் டாட்ட
வலஞ்செறியீ சானனுமோர் வடந்தொட் டாட்ட
காரணனா நந்தியுமோர் வடந்தொட் டாட்ட
கனஞ்செறியுங் குபேரனுமோர் வடந்தொட் டாட்ட
பூரணவாஞ் சோலைசெறி கொழும்பு வாழ்வீர்
புனிதமுத்து விநாயகரே யாடி ரூஞ்சல். 5

ஆதிமகா மேருகிரி யசைந்தே யாட
அரியகுல கிரிகளெட்டு மசைந்தே யாட
சோதிபெறு சேடனும்வா சுகியு மாட
சுடரின்மிகு மரவெட்டு மசைந்தே யாட
நீதிவளர் கூருமமு மசைந்தே யாட
நின்றநில வண்டமுமற் றசைந்தே யாட
கோதில்புகழ்ச் சோலைசெறி கொழும்பு வாழ்வீர்
கோலமுத்து விநாயகரே யாடி ரூஞ்சல். 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகமணி முடியிசைந்த சுட்டியாட
கடியிதழி மலர்மாலை கலந்தே யாட
பனகமணி குண்டலஞ்சேர் குழைக ளாட
பருமணிசேர் சங்கிலியிற் பதக்க மாட
வன்கடியி லரைஞாணு மசைந்தே யாட
வார்கழலின் வீரதண்டை தாமுமாட
அனகமுதிர் சோலைசெறி கொழும்பு வாழ்வீர்
ஆதிமுத்து விநாயகரே யாடீ ரூஞ்சல். 7

பொன்னோங்கு மாறங்கங் கால்க ளாகப்
புகலவரு மிருதிகளே சட்டமாக
